Registered as a News Paper in Sri Lanka
தினமுரசு வாரமலர்
பக்கம் 24
ரூபா 30.00
ஜூலை 02 - 08, 2015

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1125

## கலைந்தது நாடாளுமன்றம்

## அரசியல் சமர் ஆரம்பம்



## கிழக்கு பல்கலையில் குழப்பங்கள்!

## கிரீஸின் நிதிச் சீரழிவு




## நல்லாட்சியும் ஏமாற்றங்களும்

## அற்புத பலன்களை அள்ளித்தரும் துளசி வழிபாடு

ஒவ்வொரு வீட்டிலும் துளசி செடி அவசியம் இருக்கவேண்டும். கிருஷ்ண துளசியாக (சிறிது கறுப்பாக இருக்கும்) இருந்தால் இரட்டை செடியாகத்தான் வளர்க்கவேண்டும். துளசிச்செடியை வீட்டின் முன் புறத்திலோ முற்றத்திலோதான் வளர்க்கவேண்டும். வீட்டின் பின்புறம் வைப்பது தவறு. தினமும் செடிக்கு தண்ணீரை அப்படியே ஊற்றாமல் இறை நாமம் சொல்லிபின்னர் தேவையான அளவு தெளிக்கவேண்டும். அடியில் அளவோடு ஊற்றவேண்டும்.

துளசி சகுனம் ஒப்பற்ற சகுனம். வெளியே செல்லும்போது துளசியை வணங்கிவிட்டு சென்றால் வேறு எந்த சகுனமும் ஒன்றும் செய்யாது. அதே போல் வெளியில் இருந்து வீடு திரும்பிய உடன் கை, கால் அலம்பி துளசியை தரிசனம் செய்து பின்னர் வீட்டுக்குள் செல்லவேண்டும். இதனால் வெளியே நம்மீது படிந்த தீயஎண்ணங்களோ, தீயசக்திகளோ நம்மை தொடராது, தீய ஆவிகளோ புகாமல் துளசிச்செடி நம்மை காக்குகிறது. பெண்கள் திருமண - மாகி புகுந்த வீடு செல்லும்போது, மறக்காமல் இதுவரை வழிபட்டு வந்த துளசிதேவியிடம் விடை பெற்று செல்லவேண்டும். திரும்பவும் பிறந்த வீட்டிற்கு வரும்போது எல்லா துளசி செடிக்கும் நீர்ஊற்றி வணங்கவேண்டும். துளசி வழிபாடு மிகவும் எளிமையானது. ஆனால் அற்புத பலன்களை அள்ளித்தரும் வழிபாடு. குறிப்பாக பெண்கள் அவசியம் துளசி வழிபாட்டை செய்யவேண்டும்.

## ஆன்மீகம்

## இயேசுவின் அதிகாரம்

இயேசு தனது அதிகாரத்தை சீடர்களுக்கு கொடுக்கிறார். இயேசு உயிரோடு, அவர்களில் ஒருவராக வாழ்ந்தபோதும், சில இடங்களுக்குப் போதிப்பதற்கு அனுப்புகிறார். அப்போதும் அவர் அவர்களுக்கு அதிகாரம் வழங்குகிறார். இப்போது, உயிர்த்து விண்ணகம் செல்வதற்கு முன்னதாக, தனது சீடர்களுக்குப்போதிக்கிறார். இரண்டிற்கும் இடையில் மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது.

இரண்டுமே அதிகாரம் தான். ஆனால், உயிர்த்தபிறகு கொடுத்த அதிகாரம், சீடர்களுக்கு உண்மையிலே வலிமையைத் தந்திருக்கும். ஏனென்றால், இப்போது அவர்களே உணர்ந்துகொண்டார்கள். இயேசுவின் வல்லமையை அனுபவித்துவிட்டார்கள். எனவே, முன்னைய போதித்தலைவிட இப்போது நிச்சயமாக அவர்களிடத்தில், நம்பிக்கை அதிகமாக இருந்தது. வேகம் அதிகமாக இருந்தது. எத்தகைய துன்பம் வந்தாலும், அதை எதிர்த்து நிற்கலாம் என்கிற வேகம் அவர்களுக்குள்ளாக வந்தது. அந்த வேகம்தான், மூவொரு இறைவனின் மகிமையை, உன்னதத்தை, மாட்சிமையை உலகிற்கு எடுத்துரைப்பதற்கு உதவியாக இருக்கப்போகிறது.

சீடர்களிடம் இருந்த அந்த வேகம், ஆண்டவரின் நற்செய்தியைப் போதிக்க வேண்டும் என்கிற உற்சாகம் ஒவ்வொரு கிறிஸ்தவர்களிடம் இருக்க வேண்டும் அந்த உற்சாகம், ஒவ்வொருநாளும் அதிகப்படவேண்டும். நம்பிக்கையோடு, ஆண்டவரைநோக்கி வருவதற்கு, அது உதவியாக இருக்கவேண்டும்.

## நோற்போம் நோன்பு

அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமான வணக்கமே நோன்பு. இதனால்தான் நற்செயல்கள் அனைத்துக்கும் மலக்குகள் மூலம் பிரதிபலனை வழங்கும் அல்லாஹ் நோன்பு என்பது தூய்மையானது. இது எனக்காக வேண்டியே நோற்கப்படுவதனால் இதன் பிரதிபலனை நானே வழங்குகிறேன் என்று கூறுகின்றான்.

எனவே நாம் இதில் நமது நாவைப் பேணி, புறம், தோள், பரிகாசம், வீண் பேச்சு, திட்டல், தூற்றல் போன்றவற்றில் இருந்து தவிர்ந்து கொள்ளவேண்டும்.

நாம் ஓர் ஆண்டின் பதினோரு மாதங்களை வீணாக்கி இருந்தால் இந்நல் மாத ரமழானை நல்ல முறையில் பயன்படுத்தி நாம் இதில் நோன்பு நோற்க வேண்டும். புனித ரமழான் மாதத்தின் ஒரு வினாடி நேரத்தைக்கூட வீணாகக் கழித்துவிடக் கூடாது என்பது இதைதூதரின் எச்சரிக்கை. ஆகவே நாம் இதில் நோற்போம் நோன்பு.

எம்.சி.கலீல், கல்முனை - 05

---

## கவிதைப்போட்டி 1122



● பாராட்டுக்குரியது ●

### நிவாரணம் யாருக்கு?

இயற்கை
அனர்த்தங்களால்
பாதிக்கப்பட்டோருக்கு
வெளிநாட்டவர் அளித்த
நிவாரணப் பொருட்கள்
இரவோடு இரவாக
ஓர் அரசியல்வாதியின்
மாளிகைக்குள்
முடங்கப் போகிறதோ.

அ.சந்தியாகோ.
கண்டி.

## கவிதைப் போட்டி இல 1125



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12. 07. 2015

கவிதைப் போட்டி இல. 1125 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### சாதனைக்கா? சாவுக்கா?

சாதனை படைக்க
சாலையில் இவர்
இப்படி பொருட்களை
ஈருளியில் எடுத்துச் செல்வது
சாதனைக்கா? சாவுக்கா?

எம்.சி.கலீல்,
கல்முனை – 05

### எது சுமை?

நான் என் சைக்கிளில்சுமந்து
செல்லும் இந்தச் சுமை
எனக்குப் பெரிதாய்த்
தோன்றவில்லை வாழ்வில்
என் கழுத்தை நெரிக்கும்
விலைவாசிச்
சுமையோடு ஒப்பிடுகையில்...

சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை.

### நிறைகுறை

இவர் கொண்டு செல்வது
உருவத்தில் தான் பெரிது
நிறையில் மிகமிகக்
குறைவு - இவை
குழந்தைகள் குதித்து
விளையாடும்
காற்றடைந்த பைகள்.

இஷாரா பேகம்,
கண்டி.

### விலையேற்றம்

எவ்வளவு சுமைதூக்கி
வருமானம் ஈட்டினாலும்
வாழ்க்கைச் சுமையை
சுமக்க வருமானம்
போதவில்லை - இந்த
விலையேற்ற காலத்தில்...

ஜெ.சிந்து,
வேலணை –02

## உங்கள் பக்கம்

### வளலாய் கிராமத்திற்கு மின்சாரம் வேண்டும்

கடந்த 25 வருடங்களுக்கு பின்பு அண்மையில், வளலாய் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டது. சில அடிப்படை வசதிகள் இன்றி மக்கள் பெரும் கஸ்டப்படுகின்றனர்.

வலிகாமம் கிழக்கு. வளலாய் பகுதியில் மீள்குடியேறியுள்ள மக்கள் தங்களுக்கு மின்சார வசதி செய்து தரப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பிரதேசத்தில், மீளக்குடியமர 113 குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளதுடன், 25 குடும்பங்கள் தற்காலிக கொட்டில்கள் அமைத்து அங்கு வாழ்ந்துவருகின்றனர்.

தற்காலிக கொட்டகைகள் அருகில் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதுடன், வீடுகள் உடைத்த கற்குவியலும் காணப்படுகின்றது. இரவுவேளைகளில், அவற்றுக்குள் இருக்கும் விஷஜந்துக்கள் தற்காலிக கொட்டகைக்குள் வருகின்றமையால் தாங்கள் இரவுவேளைகளை பயத்துடன் கழிப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்காலிக கொட்டகைகளை சுற்றி மீன்பிடிப்பதற்கு பயன்படுத்தப்படும் வலைகளை கொண்டு பாதுகாப்பு அமைத்துவிட்டே உறங்கிறோம்.

மக்களின் பாதுகாப்பு கருதி முதலாவதாக மின்சார வசதியை பெற்றுத்தருமாறு தினமுரசின் உங்கள் பக்கமூடாகக் உரிய அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

க.பரமேஸ்வரன், வளலாய்.




## வாசகர்சாலை

### பிரமாதம்

வாரமொரு முறை வந்து வசந்தம் வீசுகின்றாய். உன் அறிவு மழையில் நான் நனைந்த நனைகின்ற காலங்களை தந்து கொண்டிருக்கின்றாய். பாப்பா முரசில்வரும் ஒவ்வொரு சின்னஞ்சிறிய தகவல்களும் பிரமாதம், பிரமாதம். அதைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. புதிர்ப்போட்டியை முரசு இப்பக்கத்தில் தொடங்கலாமே. உன் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

ஆர்.எம்.ஹமியா, கிண்ணியா.

### வாழ்த்துக்கள்

தினமுரசு வாரமலர் அள்ளிவரும் அம்சங்களுமே சிந்தை [illegible] பல விடயங்களை [illegible] முடிகின்றது. சமுதாயத்திற்கு [illegible] செய்திகளை தாங்கி வருவதில் தினமுரசுக்கு நிகர் தினமுரசே. உன்னில் பேனா நண்பர் பகுதி ஆரம்பித்தால் மேலும் சிறப்புறுமல்லவா.

எஸ்.ராகனி,
உமையாள்புரம்.

### ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

அற்புதனுக்குப் பிறகு முரசின் வளர்ச்சி மிகவும் சிறப்பானது. பல சவால்களையும் தாண்டி அற்புதன் காட்டிய வழியில் முரசின் வழி தொடருவது பாராட்டத்தக்கது. அவர் மறைந்தாலும் அவரது எழுத்துக்கள் எம்மை வழிகாட்டவைக்கின்றது. அவரின் எழுத்துக்களை இன்றும் நாம் வாசிக்கும்போது உயிர்த் துடிப்புள்ள ஏதோவொரு சிறப்பு இருப்பதாகவே தோன்றுகின்றது. அற்புதன் ஆத்மாசாந்தியடைய நான் பிரார்த்திக்கின்றேன்.

கே. பாலச்சந்திரன்,
யாழ்ப்பாணம்.

### வளர்க தினமுரசு

பல்சுவை அம்சங்களில் ஜொலிக்கிறாய். சினிமா பக்கத்தில் படங்கள் ஜொலிக்கிறது. கவர்ச்சிப் புயல்கள் நெஞ்சை தொட்டுவிட்டு செல்கிறது. சினிமா செய்திகளும் சூப்பர். 24ஆம் பக்கம் விளம்பரப் பக்கமாக வருகிறது. ஆனால் இத்தகவல்களை வேறு பக்கத்தில் முரசு பிரசுரிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

என்.நாவிதா, கண்டி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com

### அமைதியின் சொற்கள்

அமைதி ஒரு புத்தகத்திலோ, ஒரு இடத்திலோ, ஒரு மலை உச்சியிலோ இல்லை. ஆனால் அது ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் குடி கொண்டிருக்கிறது.

இணையத்தளம்: www.wopg.org
- பிரேம் ராவத்

# நிலங்களை மீளளிக்க படையினரே தடை

## முன்னாள் அமைச்சர்

**யாழில் பாதுகாப்பு தரப்பினரே மக்களின் மீள்குடியமர்வுக்குத் தடையாக இருக்கின்றனர் என்று பகிரங்கமாகத் தெரிவித்தார் முன்னாள் மீள்குடியேற்ற அமைச்சர் டி .எம். சுவாமிநாதன். அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியிடமும் பலதடவைகள் மக்களின் மீள்குடியமர்வு பற்றியும், புதிதாக காணிகளை விடுவிப்பது தொடர்பிலும் தெரிவித்துள்ளோம். ஆனால் எந்தப் பதிலும் இல்லை. பாதுகாப்புத் தரப்பினரே மக்களின் மீள்குடியமர்வு க்கு தடையாக உள்ளனர் என்று டி.எம்.சுவாமிநாதன் பகிரங்கமாக அந்தக் கலந்துரையாடலில் குறிப்பிட்டார்.**

யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த 29ஆம் திகதி வலி.வடக்கு மீள் குடியமர்வு தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. அந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி மைத்திரிபால அரசு பதவியேற்றபின்னர் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட இடங்களிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கூட்டத்தில் முக்கியமாக உரையாடப்பட்டது. இராணுவத்தினர் வசம் உள்ள வசாவிளான் சந்தி விடுவிக்கப்படவேண்டும். வல்லை - அராலி வீதியில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கும் 4 கிலோமீற்றர் நீளவீதி விடுவிக்கப்படவேண்டும். முன்னரே விடுவிக்கப்பட்ட நகுலேஸ்வரம் பகுதியில் மக்கள் மீள்குடியேற அனுமதிக்க வேண்டும். வசாவிளான் றோ.க. பாடசாலை விடுவிக்கப்படவேண்டும் காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி விடுவிக்கப்படவேண்டும். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விடுவிக்கப்படவேண்டும் என்றும் பல கோரிக்கைகள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

வலி.வடக்கில் ஆயிரம் ஏக்கர் விடுவிப்பதாகச் சொல்லப்பட்ட ஆயிரம் ஏக்கரில் நானூறு ஏக்கர்களை விரைவாக விடுவிக்கவேண்டும் என்றும் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட வளலாய் பகுதியை ஆயிரம் ஏக்கர் விடுவிப்புக்குள் அடக்க முடியாதென்றும் வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டது.

எனினும் மேற்படி கலந்துரையாடல் காணி விடுவிப்புக்கள் தொடர்பில் விடுவிக்கப்பட்ட பகுதியில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றிய எந்தவொரு தீர்க்கமான முடிவும் எட்டப்படாமலேயே முடிவடைந்தது. யாழ்ப்பாணத்தின் இந்தக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் முப்படையினர், வடக்கு மாகாண பிரதம செயலாளர்கள், யாழ்.மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

## உப்பு அறுவடை ஆரம்பம்

மன்னார் மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்தில் உற்பத்திசெய்யப்பட்ட உப்பு அறுவடை கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுவந்தது.


இந்த நிறுவனம் அரச நிதி உதவியைப் பெற்று 2010ஆம் ஆண்டளவில் மேலும் சில பிரதேசங்களை அபிவிருத்தி செய்து தற்போழுது சுமார் 5 ஆயிரம் தொடக்கம் 6 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பை உற்பத்தி செய்துவருவதாக மன்னார் மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்தின் (மாந்தை சோல்ட் லிமிற்றெற்) பொது முகாமையாளர் எம்.ஏ.துவான் மன்சில் தெரிவித்துள்ளார். இதன்போது சுமார் 40 இற்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் கலந்துகொண்டு உப்பு அறுவடையை மேற்கொண்டு வருகின்றனர்.

## புதையல் தோண்டியவர்களுக்கு விளக்கமறியல்

அம்பாறை மாவட்டம் மஹாஓயா பொலிஸ் பிரிவிலுள்ள நுவரகலதென்ன எனும் வனப் பகுதியில் புதையல்தோண்டும் வேலைகளில் ஈடுபட்டிருந்த சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட மூவரையும் கடந்த திங்களன்று தெஹியத்த கண்டிய நீதிமன்றில் ஆஜர் செய்தபோது ஜூலை 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக மஹாஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களிடமிருந்து பொலிஸார் கைப்பற்றிய புதையல் தோண்டுவதற்காக அவர்கள் பயன்படுத்திய உபகரணங்களையும் பொலிஸார் மன்றில் சமர்ப்பித்தனர்.

மாலபேயைச் சேர்ந்த மனம்பேரி ஜயவர்தன (வயது 36) அக்போபுர, ஹதரலியத்த, கண்டியைச் சேர்ந்த ஆர்.ஈ.எம். திலக்ருஷாந்த ராஜகருணா (வயது 41), மயான வீதி, மாகொல வடக்கு, மாகொல எனும் முகவரியைச் சேர்ந்த கனத்த மானகே உபுல் சந்தன (வயது 43) ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளோராவர். இது விடயமான மேலதிக விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.



# மெல்லிசை மன்னரும் கவியரசரும்...

இந்தியா முழுவதிலும் பல இசை அமைப்பாளர்களை நான் சந்தித்திருக்கிறேன்.

இந்தியாவின் எந்த மொழியிலும் தம்பி விஸ்வநாதனுக்கு இணையான ஓர் இசை அமைப்பாளரை நான் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை.. "ஆமாம்... நீ அடிக்கடி சந்திக்கும் விஸ்வநாதனைப் பற்றி இந்த வாரம் சந்தித்தேன் என்று எழுதுவதில் என்ன பொருள்?" என்று நண்பர்கள் கேட்கக் கூடும். காரணம் உண்டு. தம்பி விஸ்வநாதனை மூன்று வாரங்களாக நான் சந்திக்கவில்லை. இவ்வளவு பெரிய இடைவெளி எங்களுக்குள் விழுந்ததில்லை. தம்பி ஏராளமான ரீ - ரெக்கோர்டிங்குகளில் மாட்டிக்கொண்டதால், இந்த வாரம்தான் சந்தித்தேன்.

உலகத்தில் எந்தப் பாகத்தில் என்ன இசை இருக்கிறது என்பது விஸ்வநாதனுக்குத் தெரியும். விஸ்வநாதனுடைய இசைக்கு நான் பாட்டெழுதத் தொடங்கி முப்பது ஆண்டுகள் முடிந்துவிட்டன. இந்த முப்பது ஆண்டுகளில் தம்பியின் திறமையை நான் கண்டு வியந்திருக்கிறேன்.

பட்டத்து ராணி பார்க்கும் பார்வையில் எகிப்திய இசையைக் கேட்டேன். "தென்றல் வந்து வீசாதோ ?" பாடலில் தென்பாண்டி மண்டலத்தின் மண்வாடையைக் கண்டேன், அபூர்வ ராகத்தில் நளினமான கர்நாடக சங்கீதத்தை அனுபவித்தேன். "முத்தமிடும் நேரம் எப்போ" என்ற பாடலில் மெக்ஸிகன் ஆர்ப்பாட்டத்தைக் கண்டேன்...சொல்லிக்கொண்டே போனால் இடம் போதாது.

கடுமையான உழைப்பாளி. தூங்குகிற நேரம் மிகவும் குறைவு. நாள் முழுதும் உழைப்பு. இசையைத் தவிர வேறு உலகம் தெரியாது.

"ஊமைத்துரையில் 'துரை' என்று வருகிறதே அண்ணே, அவன் வெள்ளைக்காரனா? என்று ஒருமுறை கேட்டான். காபூல் நகரில் தங்கி இருந்தபோது, "இங்கிருந்துதான் கஜினி முகம்மது நம் நாட்டின்மீது படை எடுத்தான்" என்றேன். யாரண்ணே கஜினி முகம்மது? என்றான்.

பூகோளம், சரித்திரம், இன்றைய அரசியல் பற்றி அவன் கேட்கும் கேள்விகளை நினைத்தால் சிரிப்புவரும். ஆனால் அவனோடு பாட்டெழுத உட்கார்ந்துவிட்டால் பொழுது போவதே தெரியாது.

**முப்பது வருடங்கள்...**

தொழிலில் தளர்ச்சி இல்லாமல் தம்பியும் நானும் கண்ட அந்த எல்லையை, இந்தத் தலைமுறையில் வேறு யாரும் காண முடியாது.

எல்லோருமே விதைபோட்ட அறுபது நாளில் அறுவடையாகும் கீரைப்பாத்திகள். இரண்டாண்டுகள் ஆட்டம் போட்டுவிட்டு இருந்த இடம்தெரியாமல் ஓடிப்போன இசை அமைப்பாளர்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன்.

தம்பிக்கும், மாமா (கே.வி.மகாதேவன்)வுக்கும் அஸ்திவாரம் மிகப்பெரியது.

ஏழு வயதில் இரண்டு ரூபாய் சம்பளத்தில் கம்பெனி நடிகனாக வாழ்க்கையைத் துவங்கிய விஸ்வநாதன், பட்டபாடு கொஞ்சமல்ல. பதினாறு வயதில் வைரம் நாடகக் கம்பெனியில் வேலை பார்த்தபோது ஒரு நெக்லஸைத் திருடிவிட்டதாகத் தம்பியைப் பொலிஸில் ஒப்படைத்தார்கள். பொலிஸார் அவனை அடித்தும்விட்டார்கள். பிறகு செட்டியாருடைய மெத்தைக்கு அடியிலேயே நெக்லஸ் கிடைத்தது.

ஜூப்பிடரில் நடிகனாகி, ஓபீஸ் பையனாகி, ஆர்மோனிஸ்ட்டாகி, சுப்பராமன் இறந்தபிறகு இசை அமைப்பாளனாகி, எடுத்த எடுப்பிலேயே உச்சஸ்தாயில் பல்லவி பாடியவன் தம்பி.

முன்பெல்லாம் இரவு பதினொரு மணிக்கு டெலிபோன் மணி அடித்தால் அது ஏ.எஸ்.எஸ் அல்லது விஸ்வநாதனாக இருக்கும். இப்போது விஸ்வநாதன் மட்டுமே.

இசைக்குப் பாட்டா?, பாட்டுக்கு இசையா? இரண்டும் பாதிபாதி.

"ஆகாயப் பந்தலிலே..." இசைக்கு எழுதபட்ட பாட்டு. "சோதனைமேல் சோதனை..." பாட்டுக்குப் போடப்பட்ட இசை.

"இது நன்றாக இல்லை" என்று என்னிடம் சொல்லக்கூடிய ஒரே இசை அமைப்பாளர் விஸ்வநாதன்.

"மாலையிட்ட மங்கை" படத்தில் இருந்துதான் எனக்கு மார்கெட் ஏறிற்று. காரணம், தம்பி விஸ்வநாதனின் இசை.

ஆயிரம் புகழ்வந்தாலும், யாரையும் எடுத்தெறிந்து பேசாத குணம், தம்பி, மாமா, புகழேந்தி மூவருக்கும் உண்டு.

நானும் தம்பியும் பத்தே நிமிடங்களில் போட்டு முடித்த பாட்டு, 'நெஞ்சில் ஓர் ஆலயத்தில்' வரும் "முத்தான முத்தல்லவோ..." நான்கு மாதங்கள் உயிரைவிட்ட 'பாட்டு நெஞ்சம் மறப்பதில்லை' என்ற படத்தில் வரும் "நெஞ்சம் மறப்பதில்லை..." என்ற பாட்டு.

எந்த இரவிலும் நான் போட்டுக் கேட்பது நான் எழுதி தம்பி இசையமைத்து, சரஸ்வதி ஸ்டோர் பதிப்பித்த ஸ்ரீ கிருஸ்ண கானமே அதைக் கேளாமல் நான் தூங்கியதே இல்லை. இதுவரை அதுபோல் ஒரு பக்திப் பாடல் வந்ததாகவும் எனக்கு ஞாபகம் இல்லை.

எழுத எழுத எவ்வளவு விஷயங்கள் வந்து குவிகின்றன எதைச் சொல்வது, எதை விடுவது ?

பெங்களூர் உட்லண்ட்ஸ், ரூம் நெம்பர் முப்பத்தாறு. கர்ணன், பாத காணிக்கை எல்லாமே அங்கேதான். 'வீடு வரை உறவு...' பிறந்த இடமும் அதுதான்.

பம்பாய் ஜன்பத் ஓட்டலில், எழுதி எழுதிப் பார்த்து முடியாமல் திரும்பிவிட்டோம்.

நானும் தம்பியும் பாண்டிச்சேரியில் எழுதிக் கொண்டிருந்தபோதுதான், காரைக்குடியில் என் சுவீகாரத்தாயார் இறந்துவிட்ட செய்திவந்தது. தம்பியின் காரை எடுத்துக் கொண்டே போய்ச் சேர்ந்தேன்.

1962ல் நான் இறந்துவிட்டதாக தம்பிக்கு யாரோ. தொலைபேசியில் சொன்னார்கள். தம்பி சாரதா ஸ்ருடியோவில் ரெக்கோர்டிங்கை நிறுத்திவிட்டு முட்டி மோதிக் கொண்டு ஓடிவந்தான். அதுபோலவே செய்தி கேட்டு எம்.வி. ராஜம்மா, எம்.ஆர்.ராதா, கிருஸ்ணன் - பஞ்சு, பீம்சிங், ஸ்ரீதர், சம்பத் ஆகியோர் ஓடிவந்தார்கள்! எம்.ஜி.ஆர். டெலிபோனில் துளாவினார்.

நான் கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருந்தேன்.

தொலைபேசியில் வதந்தி பரப்பியது யாருமல்ல... நானேதான்!

தம்பி என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதான். இந்தவகையில் அவனை நான் முந்திக்கொள்ளவேண்டும் என்பதே என் ஆசை!

தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

### இனியும் தமிழர்களை ஏமாற்ற முடியாது!

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தர் புதிய கண்டுபிடிப்பொன்றை வெளியிட்டுள்ளார். அதாவது எந்தக் கட்சி தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வை தமது விஞ்ஞாபனத்தில் சேர்த்துக் கொண்டு வெளியிடுகின்றதோ அந்தக் கட்சியையே தேர்தலுக்குப் பின்னர் ஆதரிப்பதென்று கூறியிருக்கின்றார்.

நேற்றுவரை ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேசிய நிறைவேற்றுச் சபையில் பங்காளிகளாக இருந்து சட்டங்களையும், கொள்கைகளையும் வகுத்தவர்கள் இன்று இவ்வாறு கூறுவது வேடிக்கையானது.

அவர்களிடமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை உள்ளடக்கும் விஞ்ஞாபனத்தை வெளியிடுமாறு ஆலோசனை கூறியிருக்கலாம். அப்படியான சூழலிலேயே தேர்தலுக்குப் பின்னரும் கூட்டமைப்பு பங்காளியாக இருக்கும் என்பதை பேரமாக முன்வைத்திருக்கலாம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அவ்வாறானதொரு கோரிக்கையை நிராகரிக்கமுடியாமல் இருந்திருக்கும். அதை தமிழ் மக்களிடம்கூறி அதற் கான ஆணையை வாக்குகளாக கூட்டமைப்பு பெற்றிருக்கலாம். ஆனால் கூட்டமைப்பு அவ்வாறு செய்யவில்லை. அவ்வாறான உறுதியான முயற்சியின் ஊடாகத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் விருப்பமும் கூட்டமைப்புக்கு இல்லை.

ஏனென்றால், நிச்சயமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போ, சுதந்திரக் கட்சியோ ஆட்சியமைக்குமாக இருந்தால் அவர்களுடன் கூட்டமைப்பு பங்காளிகளாக இருக்கப்போவதில்லை. ஜனாதிபதி மைத்திரி இருந்தாலும் கூட்டமைப்பினர் ஜனாதிபதியையோ, அவரது வாக்குறுதிகளையோ நம்பி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் ஆட்சியை பங்கு போடப்போவதில்லை.

உண்மை இவ்வாறிருக்க, சம்மந்தன் மேலே கூறியிருப்பது தமிழ் மக்களை ஏமாற்றும் தந்திரோபாய வார்த்தைப் பிரயோகமாகும். "சொல்லுறவன் சொன்னால் கேக்கிறவனுக்கு புத்தி எங்கே போய்விட்டது" என்று கூறுவதைப்போல் காலங்காலமாகத் தமிழ் மக்களை முட்டாள்களாக்கும் இதுபோன்ற உணர்ச்சிப்பேச்சுக்களைக்கூறி வாக்குகளை அபகரிக்கும் கூட்டமைப்பின் தந்திரோபாயத்துக்கு இம்முறை தமிழ் மக்கள் ஏமாந்துவிடக்கூடாது.

தென்னிலங்கையில் தொடர்ச்சியாக ஒரே ஆட்சியாளர்கள் இருக்கக்கூடாது என்றும் ஆட்சியாளர்கள் மாறிமாறி அதிகாரத்திற்குவருவதே ஜனநாயகமாகும். என்று எதிர்பார்க்கும் தமிழ் மக்கள் தம்மிடையேயும் தொடர்ச்சியாக வாக்குகளை அபகரித்து சர்வாதிகார அரசியல் நடத்தும் கூட்டமைப்பினரையும் களத்தில் மாற்றத்திற்குட்படுத்தவேண்டும். தமிழ் மக்களிடமும் அரசியல் ஜனநாயகத் தன்மைகளுக்கான அபிலாஷைகள் இருக்கின்றது என்பதை இம்முறை வெளிப்படுத்தவேண்டும்.

அடிப்படையற்ற உணர்ச்சிப் பேச்சுக்களுக்கும், சர்வதேசம் உன்னிப்பாக தமிழ் மக்களை பார்த்துக் கொண்டிருக்கின்றது என்ற சிறுபிள்ளைத்தனமான வார்த்தைகளுக்கும் தமிழ் மக்கள் இனியும் ஏமாந்து வாக்களிக்கமாட்டார்கள் என்ற தீர்மானத்தை தமிழ் மக்கள் தமது ஜனநாயகத்துக்கான விருப்பமாக மனதில் நிறுத்தி வாக்களிப்பார்கள் என்று நம்புவோம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# கலைந்தது நாடாளுமன்றம்

# அரசியல் சமர் ஆரம்பம்

நாடாளுமன்றத்தை பலத்த சங்கடங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி கலைத்துவிட்டார். இனியும் நாடாளுமன்றத்தை நீடிக்கமுடியாது. சிறுபான்மையான ஆளும் கட்சியும், பெரும்பான்மையான எதிர்க்கட்சியையும் வைத்துக் கொண்டு ஒரு நாட்டாமைபோல் ஜனாதிபதி மைத்திரிபால இருக்கமுடியாது.

அதிலும் எதிர்க்கட்சியாக இருக்கும் கட்சி அவரது கட்சி. அவர் தனது கட்சியினரை அடக்கி எதிர்க்கட்சியை பாதுகாக்க முயற்சிக்கின்றார் என்று கட்சிக்குள்ளேயே விமர்சனங்கள் எழத்தொடங்கியிருந்தது.

இதுதவிரவும் தேசிய அரசாங்கத்தில் பங்காளிகளாக இருந்தவர்களும் ஜனாதிபதியை விமர்சிக்கத் தொடங்கியதோடு, எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கத் தொடங்கியிருந்தார்கள்.

மறுபக்கத்தில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமையில் ஒரு அணியாகவும் ஜனாதிபதி மைத்திரிபாலவின் தலைமையில் ஒரு அணியாகவும் செயற்பட்ட நிலையில் பலகட்டப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் ஐ.ம.சு.முன்னணியாக இணைந்து செயற்படுவது என்ற முடிவுகள் எட்டப்பட்டதாகத் தெரியவருகிறது. இதில் மீண்டும் மகிந்த அரசியல் அதிகாரத்திற்குள் வராமல் இருப்பதை அல்லது வருவதைத் தடுப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, ஜனாதிபதி மைத்திபால சிறிசேன ஆகியோர் முனைப்புக்காட்டுவதால் சில வேளை மாற்றங்களுக்கும் இடமுண்டு.

ஒரு கட்சிக்கு இரண்டு தலைவர்கள் இருக்கமுடியாது என்பதை பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி தனது கட்சிக்காரர்களுக்கு சுட்டிக்காட்டியதோடு, அவ்வாறானதொரு நடைமுறையானது தேவையற்ற குழப்பங்களுக்கே வழிவகுக்கும் என்பதையும் கூறியிருந்தார்.

ஆனால் ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களுக்கு கட்டுப்பட்டு நடக்க கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் தயாராக இருக்கவில்லை. அவர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவான கூட்டங்களில் கலந்துகொண்டார்கள். பிரதமர், நீதியமைச்சர் ஆகியோருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை கொண்டுவருவதில் உறுதியாக இருந்தார்கள்.

ஆனால் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கோ, கட்சிசார்ந்த குழப்பங்களுக்கு நடுவே புதிய தேர்தல் திருத்தச் சட்ட மூலமான இருபதாவது சட்டதிருத்தத்தை எப்பாடுபட்டேனும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிவிட வேண்டுமென்பதில் அக்கறையோடு இருந்தார்.

ஆனால் இருபதாவது திருத்தச் சட்டமானது, சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளுக்கு பாதகமாக அமைவதோடு சிறுபான்மை மக்களின் அபிலாசைகளுக்கு பாதகமான அம்சங்களும் உள்ளடங்கியுள்ளதாக அரசின் பங்காளிக் கட்சிகளும், அரசுக்கு வெளியில் இருந்த கட்சிகளும் பகிரங்கமாகவே எதிர்த்தன.

சிறுபான்மை மக்களின் வாக்குகளால் வெற்றிபெற்று ஜனாதிபதியான மைத்திரிபால, சிறுபான்மை மக்களுக்கு பாதகமான சட்டமாக குறிப்பிடப்படும் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு கட்டத்தில் தயங்கினார்.

சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகள் ஆலோசனைகளை முன்வைக்கலாம் என்று ஜனாதிபதி தெரிவித்தபோதும், அக்கட்சிகள் முன்வைத்த யோசனைகளையோ, திருத்தங்களையோ அமைச்சரவை அங்கீகாரத்துக்கு முன்வைக்கப்பட்ட தேர்தல் திருத்த யோசனையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதே சிறிய கட்சிகள் அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து சட்டதிருத்தத்தை எதிர்க்கக் காரணமாக அமைந்தது.

இந்த நிலையில் வாக்கெடுப்புக்கு இருபதாவது சட்டதிருத்தத்தை நாடாளுமன்றத்திற்கு கொண்டுவந்தால் நிச்சயமாக சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் எதிர்த்தே வாக்களிக்கும் என்பதையும் ஜனாதிபதி தெரிந்துவைத்திருந்தார். இந்த நிலையிலே நாடாளுமன்றத்தை கலைத்துவிடுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

ஜூன் மாதத்தில் இருபதாவது திருத்தச் சட்டத்தை ஏற்படுத்திக் கொண்டுவிட்டால் எப்படியும் ஜூலை மாத முற்பகுதியில் நாடாளுமன்றத்தை கலைத்து செப்ரெம்பர் மாதமளவில் புதிய அரசாங்கத்தை அமைத்துவிடுவதே ஜனாதிபதியின் திட்டமாக இருந்திருக்கவேண்டும்.

ஏனென்றால், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகமான பான் கீ மூனுடன் அண்மையில் தொலைபேசிமூலமாக கலந்துரையாடிய ஜனாதிபதி மைத்திரிபால செப்ரெம்பர் மாதம் புதிய அரசாங்கத்தை அமைத்துவிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வுகளுக்கு வருகை தருவதாகக் கூறியிருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தது.

அது ஒரு காரணமாக இருந்தாலும் உள்நாட்டில் இன்னொரு காரணமும் இருந்தது. அது சுதந்திரக் கட்சிக்குள்ளே ஏற்பட்டிருந்த குழப்பங்களை தீர்த்து கட்சியை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த மீதான எதிர்பார்ப்புக்கள்மீது மக்களுக்கு ஒரு சலிப்பு ஏற்படுவதற்கும் சிலகாலத்திற்கு காத்திருக்க வேண்டி இருந்தது. இந்தக் காத்திருப்பு ஜூலை ஆரம்பம்வரை மட்டுமே இருந்திருக்கும்.

இப்போது எதிர்பாராத சூழலில் அதாவது முதல் நாள் தன்னோடு உயிர்ப்போராட்டத்துடன் முன்னைய அரசாங்கத்தைவிட்டு வெளியேறிய நெருங்கிய சகாவான அமைச்சர் ராஜித ஊடகங்களுக்கு கருத்துக் கூறும்போது, இருபதாவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிய பின்னரே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைப்பார் என்றுகூறி இருபத்துநான்கு மணிநேரத்துக்குள் ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்தார் என்ற செய்தி வெளியாகியது என்றால் நெருங்கிய சகாவோடுகூட கலந்துரையாட அவகாசமில்லாமல் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்திருக்கின்றார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு நாட்டின் மதிப்புக்குரிய உயர் நியமனம் ஒன்றை வழங்கி அவரை தேர்தலில் போட்டியிடாமல் தடுப்பதற்கு சில முயற்சிகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளும் நடைபெற்றுள்ளது.

ஆனால் அது காலம் தாழ்த்திய யோசனை என்றும், தேர்தலில் போட்டியிட வேண்டிய அவசியத்தை சமகால நிகழ்வுகள் ஏற்படுத்தியிருப்பதாகவும் மகிந்த ராஜபக்ச தெரிவித்திருப்பதானது அவர் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதை உறுதி செய்கின்றது.

இதற்கிடையே, அண்மையில் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் கருத்துக் கணிப்பில் ஐக்கிய தேசியக் கட்சி கூடுதல் ஆசனங்களைப்பெறுமென்றும், இரண்டாமிடத்தை மகிந்த தலைமையிலான 'அணியினர் பெறுவார்கள் என்றும், மூன்றாமிடத்தை சுதந்திரக் கட்சி பெறுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கருத்துக் கணிப்பு உண்மையா? பொய்யா? என்பது ஒரு புறமிருக்கட்டும். சிலரின் விருப்பமும் அதுவாக இருக்கலாம். ஆனால் அந்தக் கருத்துக் கணிப்பு கூறுவதாகக் கூறப்படும் செய்தியில் மகிந்த அணியும், சுதந்திரக் கட்சியும் இரண்டு அணிகளாக 'ஆசனங்களைப் பெறுவார்கள் என்பதும், அவ்விரு அணியினரும் கணிசமான ஆசனங்களைப் பெறுவார்கள் என்பதையும் அந்தக் கருத்துக் கணிப்பாளர்கள் கூறியிருக்கின்றார்கள்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு நேரடி போட்டியாளராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த இருக்கப்போகின்றார். கடந்த காலத்தில் மகிந்தவோடு போட்டியிட்டு ஐக்கிய தேசியக் கட்சி இருபத்துயேழு தேர்தல்களில் தோல்வியை சந்தித்துள்ளது. அப்படி ஒரு சூழலில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் கடுமையான போட்டியாகவே இருக்கப்போகின்றது.


அமெரிக்காவின் கண்காணிப்பாளர்களை அழைக்கவேண்டும் என்றும், கபே அமைப்பு ஐம்பது வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை அழைக்கின்றது என்றும் இப்போதே தேர்தல் பரப்புரைகளுக்கு ஒரு விறுவிறுப்பைக் கூட்டியிருக்கின்றார்கள்.

மலையகக் கட்சிகள் தேசியக் கட்சிகளோடு இணைந்தே பெரும்பாலும் தேர்தலை எதிர்கொள்ள வாய்ப்புக்கள் இருக்கின்றன. முஸ்லிம் கட்சிகள் தேசியக் கட்சிகளோடு கூட்டணி அமைப்பதற்கான இணக்கப்பாடுகளை காணமுடியுமான வாய்ப்புக்கள் இருக்கின்றபோதும், தனித்து போட்டியிடுவதில் கிடைக்கக் கூடிய இலாபங்களையே அதிகமாக கணக்கிட்டுக் கொண்டிருக்கின்றன.

முஸ்லிம் கட்சிகள் ஓரணியாக சேர்ந்து பொது நிலைப்பாட்டோடு தேர்தலை எதிர்கொள்ளமுடியாத தந்திரோபாயத்தில் தேசியக் கட்சிகள் வெற்றிபெற்றுள்ளதால், தமிழ்க் கட்சிகளைப்போல் பொது வேலைத்திட்டம் ஒன்றின் அடிப்படையில் ஓரணிசேர்ந்து தேர்தலை எதிர்கொள்ளாது என்றே நம்பலாம்.

வாக்காளப் பெருமக்கள் அறிவுள்ளவர்களாக இருந்தால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இதே கட்சிகளும், வேட்பாளர்களும் எதைக் கூறினார்கள். தொடர்ச்சியாக எதைக் கூறுகின்றார்கள்? ஆறு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இவர்கள் என்ன கூறினார்கள்? என்பதை சிரமப்பட்டு ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். வாக்களிப்பதற்கு முன்னர் என்ன தீர்மானத்தை எடுப்பதற்கு ஞாபகங்களே அவசியம். மக்களின் மறதியே அரசியல் கள்வர்களுக்கு ஆதாரம்.





# புலிகளின் வதை முகாமில்

## மணியம்

### தொடர் 172

இந்திய விமானப்படை விமானங்கள் இலங்கைக்குள் அத்துமீறி வீசிய உணவுப் பொட்டலங்களை எடுத்த பொதுமக்கள் அவற்றைத் தம்மிடம் ஒப்படைக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்த புலிகள், அவற்றைக் காட்சிக்கு வைத்து, அதன்மூலம் இந்தியா பற்றிய பெரும் எதிர்பார்ப்பை தமிழ் மக்களிடம் விதைத்ததும் தற்செயலான சம்பவம் அல்ல.

இந்தவிதமான எந்தவிதமான அரசியல் ஞானமும் அற்ற, கண்மூடித்தனமான இந்திய ஆதரவு மாயையை உருவாக்கியதில் வெறும் தேசிய வெறியர்களான வலதுசாரிப் புலிகளுக்கு மட்டும்தான் பங்கு என்றில்லை. முற்போக்கு, ஏகாதிபத்திய எதிர்ப்பு என்று பேசித் திரிந்த பலரும்கூட இதே நிலைப்பாட்டில்தான் இருந்தனர். அப்படியானவர்களைப் பொறுத்தவரை அவர்கள் பார்த்தது என்னவெனில், ஜே.ஆர். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குச் சார்பானவர். அவரை எதிர்க்கும் இந்திராகாந்தி சோசலிஸ சோவியத் யூனியனுக்குச் சார்பானவர். எனவே இந்தியா செய்வது மனப்பூர்வமாக இலங்கைத் தமிழரின் நன்மைக்காகவும், முற்போக்காகவும்தான் இருக்கும் என்பதாகும். அவர்கள் இரண்டும் இரண்டும் நான்கு என்பதுபோல, வெகு சுலபமாக விடயங்களைக் கணித்துவிட்டனர். சோவியத் யூனியனில் இருந்த சோசலிஸ அரசு எப்பொழுதோ அழித்தொழிக்கப் பட்டுவிட்டது என்பதையும், அங்கு இப்பொழுது இருப்பது அமெரிக்க ஏகாதிபத்திய வல்லரசுடன் உலக ஆதிக்கத்திற்காகப் போட்டியிடும் இன்னொரு மேலாதிக்க வல்லரசு என்பதைப் பார்க்கத் தவறிவிட்டனர்.

இங்கு ஒரு உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். புளொட் இயக்கத்திற்குள் தலைமைக்கும் சில கீழ்மட்ட அணிகளுக்கும் இடையில் உருவான முரண்பாடு காரணமாக, அதில் இருந்து பிரிந்தவர்கள் சந்ததியார் என்பவர் தலைமையில் தீப்பொறி என்றொரு இயக்கத்தை உருவாக்கினர். அதில் இணைந்தவர்கள் பெரும்பாலும் முற்போக்கான கருத்துக் கொண்டவர்களாகவும், நேர்மையானவர்களாகவும், அர்ப்பணிப்புக் கொண்டவர்களாகவும் இருப்பதை அவதானித்திருக்கிறேன். ஆனாலும் அவர்களிடமும் இந்தியா பற்றிய தவறான கருத்தே இருந்தது ஒரு கசப்பான உண்மை.

"வங்கம் தந்த பாடம்" என்ற தலைப்பில் எப்படி பங்களாதேஸ் வலதுசாரி இராணுவ அதிகாரிகள் வங்கப் புரட்சிக்குத் துரோகம் இழைத்தார்கள் என்பது பற்றி வங்கப் புரட்சிவாதி ஒருவர் எழுதிய புத்தகத்தை மொழிபெயர்த்து தமிழில் வெளியிட்ட தீப்பொறி இயக்கத்தினர், இந்திய பெரும் முதலாளித்துவ தேச விஸ்தரிப்புவாத அரசின் தன்மையைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர். அதற்கு ஒரு சுவாரசியமான உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்திராகாந்தி ஆட்சிக் காலத்தில் பஞ்சாப்பில் சீக்கியர்களின் பொற்கோவில்மீது இராணுவம்மூலம் தாக்குதல் நடாத்தியதற்காகவும், அவர்களது தீவிரவாதத் தலைவர் பிந்தரன் வாலேயைக் கொலை செய்ததிற்காகவும், இந்திராவின் சீக்கிய மெய்ப்பாதுகாவலர்களே அவரைச் சுட்டுப் படுகொலை செய்து பழிக்குப் பழிவாங்கிய சம்பவம் நிகழ்ந்தது. இந்தச் சம்பவம் நடைபெற்றபோது இலங்கைத் தமிழர்கள் மத்தியில் இந்திய ஆதரவு, இந்திரா ஆதரவு அலை உச்சத்தில் இருந்தது. யாராவது சீக்கியன் ஒருவன் யாழ்ப்பாண வீதிகளில் அகப்பட்டிருந்தால், அவன் உயிருடனேயே நாராகக் கிழிக்கப்பட்டிருப்பான் என்ற நிலைமை.

இந்தச் சம்பவம் நடந்த அன்று இரவு வழமைபோல இரவு நான் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்னால் இருந்த எனது கடையைப் பூட்டிவிட்டு, வீடு செல்வதற்காக எனது துவிச்சக்கர வண்டியை எடுக்கப்போனபோது அதைக் காணவில்லை. எனது பழைய வண்டியை யார் இவ்வளவு அக்கறையுடன் திருடியிருப்பார்கள் என்ற சிந்தனையுடன், எனது பக்கத்துத் தேநீர்க்கடைக்காரரின் சைக்கிளை இரவல் வாங்கிக் கொண்டு அன்றிரவு வீடுசென்றேன்.

அடுத்த நாள் அதிகாலை 6 மணியளவில் வழமைபோல நான் எனது உடையைத் திறக்கச் சென்றபோது, எனது கடைவாசலில் எனது சைக்கிள் நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்ட போது, எனக்கு மிகவும் ஆச்சரியமாகப் போய்விட்டது.

(தொடரும்...)

---




இரண்டிலும் இருந்து விலகி, எதிர்த்திசையில் கார்ட் அமரும் சீட் இருந்தது. அதில்தான் இவர் அமர்ந்து இருந்தார்.

இவரைத் தவிர வேறு யாருமற்ற கார்ட் வேகனுக்குள் திடீரென கேட்ட ஒரு குரல் பேர்க்ஸை தூக்கி வாரிப் போட்டது. 'பேர்க்ஸ் சீக்கிரம் திறந்துவிடுங்கள்'

"யாரது. எங்கே இருக்கிறீர்கள்?" முட்டாளே. இதோ சவப் பெட்டிக்குள் இருக்கிறேன். சீக்கிரம் திறந்து விடுங்கள்.

"ச.. ச..." சவப்பெட்டிக் குள்ளா? 'நீங்கள் சாக வில்லையா?" திகிலுடன் கேட்டார் பேர்க்ஸ்.

"சாவதா? முட்டாளே. நான் தான் ரொபேர்ட். பெட்டியின் மூடியைத் திறந்துவிடுங்கள்"

'ரொபேர்ட்டா' என்று ஆச்சரியத்துடன் சொல்லியபடி சவப்பெட்டியின் மூடியில் பொருத்தி இருந்த ஸ்குரூக் களை அகற்றத் தொடங்கினார் பேர்க்ஸ். சவப்பெட்டிக்கு மேலே இருந்த மணி ஒலித்தது.

'ஓகோ. இதுதான் திட்டமா?'

'இது மட்டுமல்ல. வேறும் இருக்கின்றது' என்றபடி சவப்பெட்டியிலிருந்து வெளியே எழுந்தார் ரொபேர்ட். அவர் இறந்ததுபோல காட்சியளிப் பதற்காக அவரது முகத்தில் லேசாக நீலநிறம் பூசப்பட்டு இருந்தது. உடலில் இருந்து துர்நாற்றம் வந்தது.

'சேச்சே. இறந்துபோன பூனையுடன் இவ்வளவு நேரம் படுத்திருப்பது என்பது எவ்வளவு கொடுமையான அனுபவம்' என்றார் ரொபேர்ட் தனது உடைகளைத் தட்டிய படி.

"இறந்துபோன பூனையா? அதுவா இந்த துர்நாற்றம் வீசுகிறது"

"பின்னே வேறு என்ன? என்னில் இருந்தா துர்நாற்றம் வீசுகிறது. அதோ பாருங்கள்" சவப்பெட்டிக்குள் இறந்துபோன பூனை இருந்தது. ரொபேர்ட் மூக்கைப் பொத்தியபடி சவப் பெட்டியை மூடினார். துர்நாற்றம் குறைந்தது.

உடனடியாகக் காரியத்தில் இறங்கினார் ரொபேர்ட். தான் வைத்திருந்த நான்கு சாவி களையும் ஒவ்வொன்றாகப் போட்டுத் திறந்தார். இரும்புப் பெட்டகத்துக்கு உள்ளே தங்கப்பாளங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

பேர்க்ஸ் திகிலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"அதோ அந்த சூட்கேஸ் களை இந்தப் பக்கமாகத் தள்ளுங்கள்" அவர் காட்டியவை எட்வேர்ட்டின் சூட்கேஸ்கள்.

பேர்க்ஸ் சூட்கேஸ்களைத் தள்ளிவிட, அதைத் திறந்தார் ரொபேர்ட். உள்ளே சிறுசிறு துணிப்பைகளில் எடை அதிகமான துப்பாக்கிக் குண்டு கள் இருந்தன.

தங்கப் பாளங்களை சூட்கேசுக் குள் அடுக்கிவிட்டு, இரும்புக் குண்டுகள் அடங்கிய துணிப் பைகளை இரும்புப் பெட்டகத் துக்குள் வைத்தார்.

மீண்டும் நான்கு சாவிகளால் இரும்பு பெட்டகம் பூட்டப் பட்டது.

"எல்லாம் சரிதான். ஆனால் கார்ட் வேகன் வெளியே பூட்டப்பட்டிருக்கிறதே. எப்படி வெளியே கொண்டு போகப் போகிறீர்கள்"

'அதற்கெல்லாம் ஏற்பாடுகள் இருக்கின்றன. எங்களது நண்பர் வருவார்'

'யார்'

'எட்வேர்ட்'

'எப்படி வரப்போகிறார்'

'இருந்து பாருங்களேன், எப்படி வருவாரென்று'

'ஒருவேளை ஓடும் ட்ரெயினுக்கு மேலாக ஓடி வரும் சாகச திட்டம் ஏதாவது இருக்கிறதோ'

'கிட்டத்தட்ட அதுதான். எட்வேர்ட் மலை ஏறிய அனுபவம் உடையவர். வந்துவிடுவார்'

'அடப்பாவிகளா. திட்டத்தைச் சொல்லுங்கள். அது சாத்தியமா இல்லையா என்று நான் சொல்கிறேன். நான் இருபது வருடங்களாக ரெயில்வே அனுபவம் உடைய ஆள். என்னால் சொல்ல முடியும்'

'ட்ரெயின் இப்போது எங்கே ஓடிக்கொண்டு இருக்கிறது?'

'ஓடும் சத்தத்தை வைத்துப் பார்த்தால் இப்போது கிரிஸ்டல் பாலஸை கடந்து சென்று கொண்டு இருக்கிறது. இது வரை தெற்கு நோக்கி ஓடிக் கொண்டிருந்த ட்ரெயின் கிரிஸ்டல் பாலஸ் தாண்டி இருபது மைல்களின் பின் தென்கிழக்கே திரும்பி குரொய்டன் ஸ்டேஷனை நோக்கி ஓடத்தொடங்கும்.

அதன்பின் ரெட்ஹில் ஸ்டேஷன் வரும். அதன்பின் கிழக்குத் திசையில் போக்ஸ் டோன் ஸ்டேஷனை நோக்கிப் போகத் தொடங்கும்.

எத்தனை வருட அனுபவம்... ட்ரெயினின் ஒவ்வொரு அசைவும், திருப்பமும் எனக்குத் தெரியும். கண்களை மூடிக்கொண்டே சொல்வேன். எட்வேர்ட் எந்த இடத்தில் ட்ரெயினுக்கு மேலே நடந்துவருவதாகத் திட்டம்?'

'ரெட்ஹில் ஸ்டேஷனில் இருந்து ட்ரெயின் புறப்பட்ட வுடன், ட்ரெயினின் கூரைக்கு மேல் ஏறி இங்கே வருவார். வெளி கதவைத் திறந்து விடுவார். அதன்பின்னர் மீண்டும் கூரை வழியாகப் போய் அஷ்போர்ட் ஸ்டேஷன் வருவதற்குமுன் தனது பெட்டிக்குப் போய்ச் சேர்ந்து விடுவார்.

ரெட்ஹில் ஸ்டேஷனுக்கும் அஷ்போர்ட் ஸ்டேஷனுக்கும் இடையே இருப்பது நாட்டுப் புறம். பெரும்பாலும் வெட்ட வெளி.



(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்

160

**பா.ராகவன்**

நடந்த சம்பவங்களைத் தொகுத்துப் பார்க்கும்போது பின்வரும் முடிவுகளுக்கு நாம் வந்து சேரவேண்டி இருக்கிறது:

01. பலஸ்தீன் போராளி இயக்கங்களே சாதிக்க முடியாத பலவற்றை இந்த மக்கள் எழுச்சி ஊர்வலங்களும் அதன் தொடர்ச்சியான கலவரங்களும் சாதித்தன. பலஸ்தீன் பிரச்சினை குறித்த சர்வதேச கவனமும் அக்கறையும் உண்டாக இந்த இண்டி:.பதாதான் ஆரம்பக் காரணமானது.

பலஸ்தீன் விஷயத்தை ஐ.நா. மிகத் தீவிரமாக கவனிக்கவும் பின்னால் பி.எல்.ஓ.வுக்கு ஐ.நா.வில் பார்வையாளர் அந்தஸ்து அளிக்கவும்கூட இதுதான் மறைமுகக் காரணம்.

மறுபுறம் அமெரிக்க அரசு, தனது விருப்பத்துக்குரிய தோழனான இஸ்ரேலிய அரசுக்கு ஏகப்பட்ட நிபந்தனைகளையும் மிரட்டல்களையும் முன்வைத்து வயிற்றில் புளியைக் கரைக்கத் தொடங்கியது.

குறிப்பாக எழுச்சிப் பேரணியின் ஒரு குறிப்பிட்ட தினத்தில் பதினாறு வயதுக்குட்பட்ட 159 அரேபியக் குழந்தைகள் மொத்தமாக இஸ்ரேலியக் காவல்துறையினரால் கொல்லப்பட்டதை அடுத்து, அமெரிக்க ஊடகங்கள் அத்தனையும் தம் அரசின் இஸ்ரேலிய ஆதரவுநிலையை எதிர்த்துக் கண்டனம் தெரிவிக்க ஆரம்பித்தன. வேறு வழியில்லாமல் அமெரிக்க அரசு இது தொடர்பாக இஸ்ரேலைக் கண்டித்ததுடன் மட்டுமல்லாமல், ஒரு சில உதவிகளைத் தாம் நிறுத்தவேண்டி



வரும் என்று எச்சரிக்கையும் செய்தது.

02. அக்கம்பக்கத்து அரபு தேசங்களின் தொடர்போ, ஒத்துழைப்போ இல்லாமல், பலஸ்தீனிய அரேபியர்கள் தாங்களாகவே வழிநடத்தி, முன்னெடுத்துச் சென்ற இந்த மிகப்பெரிய எழுச்சி ஊர்வலங்கள், அரசியலைத் தாண்டி அனுதாபத்துடன் பிரச்சினையைப் பார்க்க வழிசெய்தன.

03. அதுவரை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பலஸ்தீனிய அரேபியர்களை '2South Syrians' என்று சிரியாவின் குடிமக்களாக முன்னிலைப்படுத்தியே பேசிவந்த இஸ்ரேலின் குள்ளநரித்தனம் உலக மக்களால் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டு, பலஸ்தீனியர்களின் சுயஅடையாளம் முதன்மைப் படுத்தப்பட்டு அவர்களுக்கான நியாயம் என்று பேச வழிவகுத்தது.

04. இந்த இண்டி:.பதாவுக்குப் பிறகு சற்றும் நம்பமுடியாதபடியாகப் பல்வேறு ஐரோப்பிய தேசங்களின் அரசுகள் பி.எல்.ஓ.வுக்கும் wp.fp என்று சுருக்கமாகச் சொல்லப்படும் 'பலஸ்தீனியன் அத்தாரிடி' என்கிற அரபுகளின் ஆட்சிமன்றக் குழுவுக்கும் வெள்ளமென நிதியுதவி செய்ய ஆரம்பித்தன.

05. இஸ்ரேல் அரசின் நிதி ஆதாரம் கணிசமாக பாதிக்கப்பட ஆரம்பித்தது. ஒரு வருட காலத்தில் சுமார் 650 மில்லியன் டொலர் ஏற்றுமதி இதனால் கெட்டது என்று பேங்க் ஓ:.ப் இஸ்ரேல் அறிக்கை அளித்துக் கலவரமூட்டியது.

இந்தப் போராட்டங்களினால் இஸ் ரேலின் சுற்றுலா வருமானம் சுத்தமாக நின்றுபோனது.

06. அதுவரை அரேபியர்களின் அனைத்துப் போராட்டங்களையும் தீவிரவாதச் செயல்களாக மட்டுமே சொல்லிவந்த இஸ்ரேலிய அரசுக்கு இண்டி:.பதா எழுச்சிப் பேரணிகளை என்ன சொல்லி வருணிப்பது என்று தெரியாமல்போனது.

தேசத்தின் ஒட்டுமொத்த மக்களும் கலந்துகொள்ளும் பேரணிகளை எப்படித் தீவிரவாதச் செயலாக முன்னிலைப்படுத்த முடியும்? அதுவும் சர்வதேச மீடியா முழுவதும் அப்போது பலஸ்தீனில் குடிகொண்டு இருந்தது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**(தொடரும்)**

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

10



# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

**தென்னாபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக்கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங்களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.**

மண்டேலாவிற்கு 1937 இல் கிளார்க்பெரி இன்ஸ்டிடியூட் படிப்பு முடிவடைந்தது. அப்போது அவனுக்கு பத்தொன்பது வயது.

அதன்பின்னர் ஜஸ்டிஸ் படித்துக் கொண்டிருந்த ஹில்டன் எனும் வெஸ்லியன் கல்லூரியில் மண்டேலா சேர்க்கப்பட்டான். பியூ:.போர்ட் கோட்டையில் இக்கல்வி நிலையம் அமைந்திருந்தது. ஹில்டன் உயர் பள்ளியும் கிளார்க்பெரி இன்ஸ்டிட்யூட் போலவே மெதடிஸ்ட் தேவாலயத்தால் நடாத்தப்பட்டது. அந்தப் பள்ளியில் இருந்தது போன்றே இந்தப் பள்ளியிலும் ஒரு கண்டிப்பான பேர்வழிதான் அதிபராக பணியாற்றிக்கொண்டிருந்தார். அவர் பெயர் டொக்டர் ஆர்தர் வெலிங்டன். அவரும் ஒரு வெள்ளைக்காரர். பருத்த தோற்றமுடைய அவர் பென்னாம் பெரிய வயிற்றுடன் காணப்பட்டார். மண்டேலாவுக்கு முதன் முதலாக அவரைப் பார்த்தவுடனேயே அவனை அறியாமலேயே சிரிப்பு வந்துவிட்டது. புது அதிபர் வெள்ளைக்காரர் என்ற செருக்குடன் நடந்துகொண்டார். அது மண்டேலாவுக்கு சற்றும் பிடிக்கவில்லை. இப் புது அதிபர் ஹாரிஸ் பாதிரியார்போல நல்ல குணமுடையவர் அல்ல என்பதை வெகு சீக்கிரத்திலேயே மண்டேலா புரிந்துகொண்டான். வரலாற்றுக் கதைகளை படிப்பிக்கும்போது பூர்வ குடிகள், பழங்குடிகள் எனும் பதத்தைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் புது அதிபரின் குரலில் அலட்சியமும் அருவருப்பும் மேலோங்கியிருப்பதை மண்டேலா கண்டுகொண்டான்.

அவன் செய்வது அறியாது வாய்மூடி மௌனியாக நின்றான். ஆனால் அவன் உள்ளக் குமுறல்கள் வெடித்தன. ஒரு சந்தர்ப்பத்தில் டொக்டர் ஆர்தர் வெலிங்டன் என்ற புது அதிபர் "ஆபிரிக்கர்கள் நாகரிகமற்ற காட்டுவாசிகள். நாங்கள்தான் நாகரிகத்திலேயே பிறந்தவர்கள். இன்று ஆபிரிக்கா ஓரளவேனும் நாகரிகமாக இருக்கின்றதென்றால் அதற்கு காரணம் நாங்கள்தான். சிறந்த நாடு இங்கிலாந்து, சிறந்த மொழி ஆங்கிலம்" என்று மார்தட்டி பேசினார். இதனைக் கேட்ட மண்டேலாவிற்கு கோபம் தலை விரித்து தாண்டவமாடியது.

நேராக அரண்மனைக்கு வந்து ஜோங்கிந்தாபாவிடம் நடந்ததைக் கூறினான். ஜோங் கிந்தாபா அவனை அமைதிப்படுத்தி "நீ பொறுமையாக இருந்து முதலில் நன்றாகப்படி. படித்து முன்னேறி மக்களுக்குத் தலைவனாகி நியாயத்திற்காக போராடு. அதுவரைக்கும் பொறுத்துக் கொள் மகனே. உன் இளம் இரத்தம் கொதிக்கிறது. இந்நாட்டுப் பற்றும்



எனக்குப் புரிகிறது. என்ன செய்வது நாம் இன்று ஆங்கிலேயர்களின் பிடியில்தான் சிக்குண்டு சின்னா பின்னமாக கிடக்கின்றோம். இதற்கு விடிவு காலம் வெகுசீக்கிரத்திலேயே வரும். நீ அதற்கு தயாராகு. சென்று வா மகனே வென்று வா" என்று கூறி அவனை ஹில்டன் உயர்பள்ளிக்கு அனுப்பிவைத்தார். மண்டேலாவும் எதிர்காலத்தை எண்ணியபடி மனதில் தைரியத்தையும் பொறுமையையும் வரவழைத்துக்கொண்டு சினங்கொண்ட சிங்கமும் வெறிகொண்ட வேங்கையுமாக பள்ளிக்கு விரைந்தான்.

**(தொடரும்)**

# கிழக்குப் பல்கலையில் குழப்பங்கள்!

" பல்கலைக்கழக நிர்வாகத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் பல்கலைக் கழக மாணவர்களோ, அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களோ பாதிக்கப்பட்டுவிடக்கூடாது. அதேவேளை மாணவர்களினாலோ, அங்கு கற்பிக்கும் ஆசிரியர் களினாலோ பல்கலைக்கழக நிர்வாகமும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது.

மேலோட்டமான சில காரணங்களைக் காட்டி பல்கலைக்கழகங்களை மூடும் நிலைக்கும் கொண்டு சென்று விடக்கூடாது. பல்கலைக்கழக சிரேஸ்ட ஆசிரியர்கள், பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளன பிரதிநிதிகள், மாணவ அமைப்புக்கள், பல்கலைக்கழக நிருவாகம் எல்லாமே சட்ட வரையறைகளுக்குட்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுதலை உறுதிப்படுத்தவேண்டும். "




ஏ.எச்.ஏ.ஹுஸைன்

**மட்டக்களப்பு,** வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் மாணவர்கள் தமது உயர் கல்வியைத் தொடர்கின்றார்கள்.

இதேபோன்று நாட்டின் சகல பாகங்களிலுமுள்ள பல்கலைக் கழகங்களிலும் மூவின மாணவர்களும் கற்கிறார்கள். நாட்டின் நாலா புறங்களிலுமிருந்தும் வந்துசேரும் பல சமூகங்களையும் சேர்ந்த மாணவர்கள் இங்கு பல்துறைசார்ந்த கல்வியை மேற்கொண்டு பட்டம் பெற்றும் வெளியேறுகின்றார்கள்.

ஆகையினால், நாட்டில் இனங்களுக்கிடையே சகவாழ்வை ஏற்படுத்துவதற்கு புத்திஜீவிகளாக வெளியேறும் இந்த இளஞ் சமுதாயத்தினர் சங்கமிக்கும் இந்த இடம்தான் மிகப்பொருத்தமானது என்றால் அதில் இருவேறுபட்ட கருத்துக்கு இடமில்லை. ஆனாலும் நாட்டைக் கொஞ்சக் காலம் பீடித்திருந்த இனத்துவேஷ இழி நிலைகளின் எச்சசொச்சங்கள் பெரும்பாலானோரின் அடிமனங்களில் இன்னமும் புகைந்துகொண்டு இருக்கிறது.

இது பல்கலைக்கழகத்தின் லெக்சரரில் தொடங்கி லேபரர்வரை அவர் தம் மனநிலைகளில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. அந்த பாகுபாட்டின் வெளிப்பாடுகள் எதையுமே இனச்சாயம்பூசி வெறுப்புணர்வோடு நோக்கவைக்கின்றது. இளமைக் கல்வியை இனசௌஜன்யத்தோடு கற்று நாட்டில் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான இடம் பல்கலைக்கழகங்களேயன்றி வேறெதுவும் இருக்கமுடியாது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன உணர்வுகளை உசுப்பேற்றிவிடும் இடமாகப் பல்கலைக்கழகங்களை பாவிப்பதற்கு ஒரு சாரார் எடுத்த முயற்சி சிலவேளை கறைபடிந்த தடத்தைப் பதித்திருக்கக்கூடும். ஒரு காலகட்டத்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்தை பொங்குதமிழ் நிகழ்வுகளை நடத்தும் இன உணர்வின் மைய இடமாகக்கூட புலிகள் பயன்படுத்தியிருந்தனர்.

களங்கமற்ற கல்வி நடவடிக்கைக்கு இது ஒரு தவறான முன்னுதாரணம் என்பதை கறைபடிந்த கடந்த காலப் பதிவுகள் ஏற்படுத்திவிட்டுச் சென்றுள்ளன.

இந்த வரலாற்றைக் கொண்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இப்பொழுது எல்லா இன மாணவர்களும் இணைந்து கல்வி பயிலக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் இனஉணர்வுகளின் இழி நிலை அவ்வப்போது இந்த மகோன்னத இடத்திலும் மின்னல்போல் வெளிப் பட்டு மறைகின்றது.

இதனிடையே கிழக்குப் பல்கலைக் கழகம் சர்வதேச புகழ் பெறவேண்டும் என்று முன்னாள் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க வாழ்த்தியிருந்ததோடு கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜாவின் நிர்வாகக் காலகட்டத்தில் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றுவந்த மெச்சத் தக்க அபிவிருத்திகளை தான் பாராட்டுவதாகவும் அவர் அப்போது தெரிவித் திருந்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகம் சர்வதேச புகழ் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக இந்த பல்கலைக்கழகத்திலுள்ள கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் பல்கலைக்கழகத்தின் நவீன நிர்மாண வேலைகளுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்றும் அதில் சிரத்தை எடுக்குமாறும் அவர் கேட்டிருந்தார்.

இதுவொரு சாதாரண உயர்கல்விக் கூடம் என்றில்லாமல் இதை சர்வதேச உயர்கல்வி நிலையமாக மாற்றும் பிரயத்தனங்களில் எல்லோருமாக ஈடுபட்டு உலகப் புகழ்பெற்ற ஒரு உயர்கல்வி நிலையமாக இதனைக் காண்பிக்கவேண்டும்.

வேறு பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் அபிவிருத்தியோடு கிழக்குப் பல்கலைக்கழக அபி விருத்திச் செயற்பாடுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் இங்கு இடம்பெறும் அபிவிருத்தி மெச்சத்தக்கதாக உள்ளது என்றும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறியிருந்தார்.

நூலகக் கட்டடத் தொகுதி, கலைப் பீட கட்டிடத் தொகுதி, வணிக முகாமைத்துவப் பிரிவின் கட்டடத் தொகுதி உடற்பயிற்சிக்கான கட்டடத் தொகுதி என்பன நவீனமயமாக்கப் பட்டு சகல வசதிகளோடும் அமைந்ததாக உள்ள கிழக்குப் பல்கலைக் கழகம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் திறந்தும் வைக்கப்பட்டது.

இதனிடையே கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 18ஆவது பட்டமளிப்பு வெகுவிமரிசையாக இடம்பெற்று முடிந்துவிட்டது. 754 பேர் பட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். இப்படியெல்லாம் பல்வேறு மாற்றங்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடந்திருந்தும் இன்னமும் அங்கு ஆளுக்காள் சீண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் கலாசாரம் ஓயவில்லை.

கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்த பேராசிரியர் உமா குமாரசுவாமிக்கு எதிராக இப்பொழுது அநாமதேய துண்டுப் பிரசுரம் வெளியாகியிருக் கின்றது. இந்த அசிங்கமான கலாசாரத்தை இன்னமும் ஏன் இந்த மகோன்னத இடத்தில் வைத்து உரமூட்டி வளர்க்கின்றார்கள் என்பது சற்று மனவேதனைப்படவும் வெட்கப்படவும் விசனிக்கவும் வேண்டிய விடயமாகவுள்ளது.

கடந்த வாரம் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் வெளியிடப்பட்ட அந்த அநாமதேய துண்டுப் பிரசுரத்தைக் கண்டித்த பதாதைகள் கிழக்குப் பல்கலைக்கழக நுழைவாயிலில் கட்டப்பட்டிருந்தது. எந்தவகையில் பார்த்தாலும் இந்த சிண்டு முடிந்து விடுதல்களும், நிர்வாகத்தைச் சீர்குலைக்க எத்தனிப்பதும் ஆக்க பூர்வமானதாகவும் அறிவார்ந்ததாகவும் இருக்கமுடியாது.

இத்தகைய அநாமதேயக் கலா சாரத்தை உரமூட்டி வளர்க்க எவரும் எத்தனித்தால் அது ஆக்கத்திற்குப் பதிலாக அழிவையே கொண்டுவரும். அழிவு எவ்வளவு மோசமானது என்பதை நாம் கடந்த கால் நூற்றாண்டுகளாக இடம்பெற்ற யுத்தத்தின்போது நன்கு அறிந்தே வைத்திருக்கின்றோம்.

எனவே, அழிவுக்கான சிந்தனைகளை விதைக்கின்ற ஒரு இடமாக பல்கலைக்கழகங்களை மாற்றிக் கொள்ளாமல் ஆக்கத்துக்கான உயரிய இடமாக அதனைக் கருதி செயற்படவேண்டும். இலவசக்கல்வி என்னும் அற்புதமானதொரு செயற்றிட்டம் நம் நாட்டில்தான் இருக்கின்றது. அதுவும் முதலாம் தரத்தில் தொடங்கி முதுநிலை பட்டதாரியாகும்வரை இந்த இலவசக் கல்வியை அனுபவிக்கக்கூடியதாக இருக்கின்றது. எனவே இந்த வரப்பிரசாதத்தை நாம் இனங்கள் என்ற அடிப்படையில் இணைந்து பெற்றுக் கொள்ளவேண்டும்.

இலவசக் கல்வியின் பயனைப் பெற்றுக்கொள்ளும் எவரும் அதன் பிரதிபய்னாக இந்த நாட்டுக்கு என்னென்ன நல்லதைச் செய்ய முடியுமோ அதனைச் செய்வதற்கு முயற்சிக்கவேண்டும். இலங்கையில் கல்விச் செயற்றிட்டம் தொடர்பான அடிப்படைத் தத்துவம், சமூக மற்றும் பொருளாதார நிலைமைகள் கடந்தநிலையில், தரமிக்கதொன்றாக நீண்டகாலமாக நிலைபெற்றிருந்தது. அது தொடர்ந்தும் அந்த தராதரத்தையும் கடந்து இன்னும் சிறப்புற பாடுபடவேண்டும்.


பல்கலைக்கழக நிர்வாகத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் பல்கலைக்கழக மாணவர்களோ, அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களோ பாதிக்கப் பட்டு விடக்கூடாது. அதேவேளை மாணவர்களினாலோ, அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களினாலோ பல்கலைக்கழக நிர்வாகமும் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது.

மேலோட்டமான சில காரணங் களைக் காட்டி பல்கலைக்கழகங் களை மூடும் நிலைக்கும் கொண்டு சென்றுவிடக்கூடாது. பல்கலைக்கழக சிரேஷ்ட ஆசிரியர்கள், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளன பிரதிநிதிகள், மாணவ அமைப்புக்கள், பல்கலைக்கழக நிருவாகம் எல்லாமே சட்டவரையறைகளுக்குட்பட்ட செயற் பாடுகளில் ஈடுபடுதலை உறுதிப்படுத்த வேண்டும்.

இதனிடையே பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் உபவேந்தர்களுக் கும் இடையில் சினேகமான ஆக்க பூர்வக் கலந்துரையாடல்கள் அடிக்கடி இடம்பெறுவது அவசியம். பல்கலைக் கழகங்களின் சுயாதீனத்தன்மையை வலுப்படுத்த இது உதவும்.

இவ்வாறான கல்வி சம்பந்தப்பட்ட மனநிலை மாற்றம் ஏற்படாத பட்சத்தில், இலங்கையில் கல்வித்துறையானது எதிர்காலத்தில் வீழ்ச்சியடையும் என்பது திண்ணம். ஆனால், அந்த அழிவு நிலைக்கு இந்த அற்புதமான இலவசக் கல்வியைக்கொண்டு செல்ல எவரும் யாருக்கும் இடமளித்துவிடக்கூடாது.

கிழக்குப் பல்கலைக்கழக நெருக் கடிகள் இனித் தொடராது என்று நம்புவோமாக!



# நல்லாட்சியும் ஏமாற்றங்களும்

**இலங்கையின் தமிழ்ப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களை எடுத்துப் பார்த்தால் அங்கே சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களிலெல்லாம் அடுத்த பிரதமர் யார்? எனும் கேள்வியே எழுந்து நிற் கின்றது. மகிந்தவா?, மைத்திரியா? எனும் நிலைமாறி இப்போது மகிந்தவா?, ரணிலா? எனும் கேள்வி தலைதூக்கி நிற்பதைக் காணலாம்.**

அளவெட்டி
ப.உதயகுமார்

இவ்வருடம் முற்பகுதியிலே இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசிலே ஆட்சி மாற்றமொன்று உண்டானது. இந்த மாற்றமானது பல கட்சிகள் சேர்ந்து மாற்றம் ஒன்று தேவை எனும் தொனிப்பொருளுடன் கூட்டுச் சேர்ந்தமையினால் மாற்றம் ஏற்பட்டது! "புதுத் தும்புத்தடி நன்றாகக் கூட்டும்" என்பதற்கிணங்க புதிய அரசும் சில நன்மைகளைச் செய்ததன் விளைவினால் நல்லாட்சி அரசு என்னும் பட்டம் இந்த அரசுக்கு கிடைத்தது.

நூறு நாளில் சகலதையும் முடிப் பேன் என்று வீரமுழக்கமிட்டவர் களினால் அவற்றை எல்லாம் கணக்கிட்டபடி செய்யமுடியாமல் போனது. இருப்பினும் வெளிநாட்டுச் சக்திகளின் பின்புலம். அதுவும் மிகப் பெரிய வல்லரசுகளின் ஆதரவும் மகிந்தவை எதிர்த்தவர்களும். ஒன்றுகூடி மாற்றத்தின் தேவையை உணர்த்திவருவதனாலும் நல்லாட்சி அரசு என்னும் பெயர் இன்றும் நிலைத்து நிற்கின்றது. நல்லதொரு ஆட்சி ஒரு நாட்டிலே நிலவுமானால், அது அந்த நாட்டிலே வசிக்கும் சகல இன, மத மக்களின் மனதிலே நீங்காத இடம்பிடித்து, பாகுபாடு பாரபட்சம், இன மத வேறுபாடுகள் இல்லாது நகர்ந்து செல்லுமாகில் அந்த அரசினை நல்லாட்சி அரசு என்று அழைப்பதிலே அர்த்தமிருக்கும். அந்த நாட்டு மக்களிடையே ஆனந்தம் பிறக்கும். அமைதி உண்டாகும்.

ஒரு நாட்டு மக்களையே வேறு படுத்தி பார்க்கக்கூடாது. மதம், இனம் சார்ந்து பேதம் பார்க்காமல் அனைவ ரும் இந்நாட்டு மக்களே எனும் எண்ணத்துடன் இருக்கும் அரசை நல்லாட்சி அரசு என்று அழைப்பது நியாயம். நல்லாட்சி அரசு என்று ஒரு பகுதி அரசியல்வாதிகளாலும், ஒரு பகுதி மக்களினால் மட்டும் சொல்லப்படும் அரசினை எவ்வாறு நல்லாட்சி அரசு என்று அழைக்கலாம்.

ஆட்சி அமைந்து ஆறு மாதங்கள் முடிவதற்குள்ளேயே புதிய அரசு ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. மாற்றம் உருவாகவேண்டும். ஆட்சி மாறவேண்டும் என்று முதன் முதல் எவ்வித தயக்கமும் இல்லாமல் பயமில்லாமல் கருத்து வெளியிட்ட கட்சி ஜே.வி.பி கட்சியே.

ஜே.வி.பியின் அறைகூவலை அடுத்தே ஏனையோரும் கருத்து வெளியிட்டனர். ஆனாலும் அன்று நல்லாட்சியை வேண்டி பாடுபட்டு வெற்றியீட்ட வைத்த ஜே.வி.பி இன்று புதிய அரசினை வீட்டுக்கு அனுப்புவோம் என்று போராடத் தொடங்கி ஆர்ப்பாட்டப் பேரணிகளை கூட தொடங்கிவிட்டனர். ஜே.வி.பி. எதிர்பார்த்த நல்லாட்சி என்பது இந்த அரசிடம் இல்லை என்றே அவர்கள் போராட்டம் உருவாக்கிவருகின்றனர்.

இவர்களின் பின்னால் இளம் சந்ததியும், தொழிற்சங்கங்களும் புத்திஜீவிகளும் அணிசேரக்கூடிய வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

இலங்கையின் தமிழ்ப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களை எடுத்துப் பார்த்தால் அங்கே சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களிலெல்லாம் அடுத்த பிரதமர் யார்? எனும் கேள்வியே எழுந்து நிற்கின்றது. மகிந்தவா?, மைத்திரியா? எனும் நிலைமாறி இப்போது மகிந்தவா?, ரணிலா? எனும் கேள்வி தலைதூக்கி நிற்பதை காணலாம்.

தமிழ் இளைஞர்கள் சிறைகளில் உள்ளனர். காணாமல் போனவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. போராடிய புலிகள் வெளியே உலாவு கின்றனர். உணவுகொடுத்து, உதவி செய்த சருகுப்புலிகள் அப்பாவிகள் உள்ளே உள்ளனர். மீள்குடியேற்றம் எனும் போர்வையில் குறிப்பிட்ட சில இடங்கள் மட்டுமே விடுவிக்கப்பட்டு உள்ளன. வடபகுதியிலிருந்து ஒரு அங்குலமேனும் படை முகாம்களை அகற்றமாட்டோம் என்று அரசு கூறுகின்றது.

எங்களின் வாக்கினாலேயே மைத்திரி அரசு வென்றது என்று கூட்டமைப்பு புகழ்பாடிக் கூத்தடித்துக் கொண்டிருக்கின்றது.

அதாவது, எதிர்வரும் பொதுத் தேர்தலை மையமாக்கி தமது வாக்கு வங்கியினை நிரப்பவே நல்லாட்சி அரசு முயல்கின்றது. புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையின் பக்கங்களையே புரட்டிப் பார்க்க புதிய அரசு தவறியுள்ளது.

நாங்கள் ஜனாதிபதித் தேர்தலில் வென்றால் பத்து இலட்சம் வேலை வாய்ப்புக்களை வழங்குவோம். அரச ஊழியர்களின் சம்பளத்தினை பத்தாயிரமாக உயர்த்துவோம் என்றது. ஐ.தே.க சொன்னது போல பதவியும் வந்தது. அரச ஊழியர்களுக்கு மகிந்த வழங்கிய மூவாயிரம் ரூபாவினையும் உள்வாங்கியே பத்தாயிரம் வழங்கியுள்ளது. பத்து இலட்சம் வேலைவாய்ப்புக்கள் இன்னும் இல்லை.

வடபகுதியெங்கும் அராஜகம் தலைவிரித்தாடுகின்றது. போதை வஸ்து மூலைமுடுக்கெல்லாம் தாராளம் பாடசாலைக்கு மாணவிகள் செல்லவே முடியாது. கற்பழிப்புகளும், கடத்தல்களும் தாராளம். வாள் வெட்டு, கொலை, கொள்ளை தினசரி நடைபெறுகின்றது! நல்ல ஆட்சி அரசு இவற்றினையெல்லாம் கட்டுப்படுத்த முனைந்திருப்பதாக தெரியவில்லை. போதைவஸ்து பாவனை என்று மில்லாதவாறு அதிகரித்துள்ளது. இந்தியாவிலிருந்து கடல்மார்க்க மாகவே வந்துசேருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. படைப்பலம் கொண்ட நல்லாட்சி அரசு கட்டுப்படுத்த தவறுவது ஏன்! இதுதான் நல்லாட்சி அரசுக்கு அழகா?!

போர்க்குற்ற விசாரணைகள் செப்டெம்பர்வரை தள்ளிப்போயுள்ளது!

ஒவ்வொரு ஆண்டும் கூக்குரல் போடும் கூட்டமைப்பு இம்முறை அடக்கியே வாசிக்கின்றது. நல்லாட்சி அரசுக்கு ஆதரவு தருவதனால் ஜெனீவாவிலே பேசமுடியாத ஊமைகள் ஆகியுள்ளனர். போர்க்குற்றம் புரிந்தவர்களுக்கு இராஜதந்திர பதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது! இவையெல்லாம் வல்லரசுகளின் பின்புலத்துடன் நடைபெறுகின்றது. வெளிநாட்டு சக்திகளின் வழிகாட்டலிலேயே நல்லாட்சி அரசு மலர்ந்துள்ளது. மீண்டுமொரு நல்லாட்சி அரசு அமையும் என்று சொல்லுகின்றார்கள்.

இதனைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் தமிழ் மக்களுக்கே உள்ளன. தமிழ் மக்களின் பிரச்சினைகளை இனம் கண்டு தீர்த்துவைக்க நல்லாட்சி அரசு முன்வரவேண்டும்.

## சிறுமியின் மம்மி கண்களை திறந்து மூடும் அதிசயம்



இத்தாலியில் உள்ள ஒரு அருங்காட்சியகத்தில் 100 வருடங்களுக்கு முன் இறந்துபோன சிறுமியின் உடல் பதப்படுத்தப்பட்டு கண்ணாடி பேழைக்குள் வைக்கப்பட்டுள்ளது. இத்தாலியின் தென்பகுதியில் உள்ள சிசிலியின் பல்மெர்கோ நகரில் அமைந்துள்ள அருங்காட்சியத்தில், 90 வருடங்களுக்கு முன்னர் நிமோனிய காய்ச்சலால் இறந்துபோன 2 வயது சிறுமி ரோசாலியா லம்போட்டாவின் உடல் பதப்படுத்தப்பட்டு கண்ணாடிப் பேழைக்குள் வைக்கப்பட்டுள்ளது.

உலகின் மிக அழகான மம்மியாக இது கூறப்படுகிறது. இதை பார்ப்பதற்கு என்றே சுற்றுலா பயணிகள்வருகின்றனர். உண்மையில் இதை இறந்த உடல் மம்மியாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் ஒரு சிறுமி கண்ணாடி பேழைக்குள் உறங்குவதுபோன்று அழகிய தோற்றத்துடன் உள்ளது. பலர் இதை உறங்கும் அழகி என்றே அழைக்கின்றனர்.

இந்த சிறுமி மம்மியின் கண்கள் அடிக்கடி திறந்துமூடுகிறது. ஆழமான தூக்கத்தில் இருந்து ஒருவர் கண்ணை திறப்பதுபோல் மெதுவாக கண்கள் திறப்பதுபோல் அது உள்ளது. இதுகுறித்து ஆவணப்படம் ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




# கிரீஸின் நிதிச் சீரழிவு



கிரேக்க வங்கிகளின் உடனடியான பொறிவுக்கு அஞ்சி அவற்றில் சேமித்து வைத்திருந்தவர்கள் முன்பில்லாத அளவிலான தொகைகளைச் சேமிப்பில் இருந்து வெளியே எடுத்தநிலையில், ஐரோப்பிய மத்திய வங்கி (ECB) மீண்டும் கிரேக்க வங்கிகளுக்கு உதவ தலையீடு செய்தது.

மேலதிக செலவின வெட்டுக் களுக்கான திட்டங்களின் நிபந்தனை களின்மீது கிரீஸ் மற்றும் அதன் கடன் வழங்குனர்களான ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு இடையே பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்ததை தொடர்ந்து, வைப்பில் வைக்கப்பட்டிருந்த பில்லியன்கணக்கான யூரோக்கள் கிரேக்க வங்கிகளில் இருந்து வெளியே எடுக்கப்பட்டன. ஜூன் மாத வாரங்களில் மட்டும் 4.2 பில்லியன் யூரோ வெளியே எடுக்கப்பட்டது.

நிதியியல் பொறிவைத் தடுப்ப தற்காக மற்றும் 300 பில்லியனுக்கு அதிகமான அதன் மொத்த கடனைத் திரும்பி செலுத்தவியலா நிலைமை யைத் தவிர்ப்பதற்காக, கிரீஸின் மத்திய வங்கிக்கு கூடுதலாக 3.5 பில்லியன் யூரோ கடன்வழங்குமாறு கிரீஸின் சிரிசா தலைமையிலான அரசாங்கம் ECB ஐ கோரியிருந்தது. மொத்தம் 84.1 பில்லியன் யூரோவை எட்டும்வகையில் அவசரகால பண உதவியிலிருந்து யூனில் கிரேக்க வங்கிகளுக்கு மற்றொரு 1.1 பில்லியன் யூரோ வழங்கிய ECB மேற்கொண்டும் கூடுதலாக பணம் வழங்கியது. ஆனால் எவ்வளவு என்பதை வெளியிடவில்லை. சில செய்திகளின்படி, வெறுமனே அது சில நாட்களுக்கு கிரீஸைக் காப்பாற்றுவதற்கே போதுமானது.

கிரீஸ் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக மூலதனக் கட்டுப்பாடுகளை விதிக்கவும் மற்றும் வெளியே எடுக்கும் சேமிப்பு பணத்திற்கு வரம்புகளை நிர்ணயிப் பதற்கும்கூட அது நிர்ப்பந்திக்கப்பட்டு இருக்கலாம் என்று ஊகங்கள் நிலவின. ஜூன் இறுதியில் சர்வதேச நாணய நிதியத்திற்கு திரும்ப செலுத்தவேண்டிய அதன் 1.3 பில்லியன் யூரோமீது கிரேக்க திவால்நிலைமையின் அச்சம், வேகமாக வேறொன்றால் அனேகமாக மிகவும் அபாயகரமான ஒன்றால் தூண்டிவிடப்பட்ட நேர வெடிகுண்டு, அதாவது கிரேக்க வங்கிகளின் கடன்தீர்க்கும் திறனால் எடுத்துக் கொள்ளப்பட்டது என்று பைனான்சியல் டைம்ஸ் குறிப்பிட்டது.

ஐரோப்பிய கவுன்சில் தலைவர் டோனால்ட் டஸ்க் ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய தலைவர்களின் அவசர கூட்டத்திற்குப் பின்னர் ஓர் உடன்படிக்கையை எட்டும் நோக்கில், உடனடியாக நிகழவிருக்கும் பொறிவை முகங்கொடுக்கும் நிலையில் கிரீஸை வைத்திருப்பதே ஐரோப்பிய மத்தியவங்கியின் மூலோபாயமாக உள்ளது. இது அபாயகரமான இராஜதந்திரத்திற்கு ஒரு அசாதாரண-மான மற்றும் பொறுப்பற்ற எடுத்துக் காட்டாகும். அதாவது கிரேக்க பொருளாதாரத்தின் சீரழிவை மட்டும் அச்சுறுத்துவதில்லை. மாறாக ஒட்டுமொத்த ஐரோப்பிய பொருளா தாரத்தின் மீதே தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு பெரும் டோமினோ விளைவைக் கொண்டு அச்சுறுத்துவதாகும்.

இந்த மூலோபாயத்திற்குத்தான் ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்க த்தின் செல்வாக்கு மிகுந்த பிரிவுகள் அனைத்தும் அவற்றின் ஒப்புதலை வழங்கியுள்ளன. அந்த அமைப்புகள், ஏதென்ஸை ஒரு முன்னுதாரணமாக ஆக்குவதுடன் சேர்ந்து, தொழிலாள வர்க்கத்தின் மீதான அவற்றின் கண்டம் தழுவிய தாக்குதல் மூலோபாயத்திற்கு எந்தவொரு தடங்கல்களையும் பொறுத்துக்கொள்ளாது.

இரண்டாண்டுகளில் செயற்படுத்த இருக்கும் 2.5 பில்லியன் யூரோ மதிப்பிலான சிக்கன நடவடிக்கைகளை ஏற்கனவே சிரிசா முன்வைத்திருப்பதாக வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் அறிவித்தது. ஆனால் ஐரோப்பிய ஒன்றியமோ கடுமை யான ஓய்வூதிய வெட்டுக்கள் உட்பட இந்த ஆண்டில் மட்டும் 3 பில்லியன் யூரோ நிதிய சேமிப்புக்கு வலியுறுத்தி வருகிறது.

யூனில் நடந்த கூட்டத்தில் முன் வைக்கப்பட்ட சிரிசாவின் சமீபத்திய பரிந்துரை, ஒரு பற்றாக்குறை தடுப்பு கருவியை (deficit brake) அறிமுகம் செய்வதாக இருந்தது. இது, கிரேக்க அரசாங்கத்தின் வரவு - செலவு திட்டக் கணக்கு பற்றாக்குறைக்குள் சென்றால், தானாகவே நிர்வாகத்திற்குள் செலவு-களை வெட்டுவதாக இருக்கும். ஆனால் இதை யூரோ மண்டல அதிகாரிகள் பட்டவர்த்தனமாக நிராகரித்தனர். பேச்சுவார்த்தை அறைக்குள் முதிர்ச்சி பெற்றவர்களோடு பேசுவது ஒரு அவசர தேவையாக இருக்கிறது என்று சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டின் லகார்ட் அறிவித்தார்.

நிதியியல் செல்வந்த தட்டுக்களுடன் ஒரு கௌரவமான சமரசத்தின்மூலமாக கிரேக்க உழைக்கும் மக்களின் வாழ் நிலைமைகளை அதனால் பாதுகாக்க முடியும் என்ற சிரியாவினது வாதங்கள் மீது வைக்கப்பட்ட மிகக்கடுமையான குற்றப்பத்திரிகை இதுவாகவே உள்ளது.

உலக பில்லியனர்களின் பிரதிநிதி களோ, 2008 உலகளாவிய நிதியியல் பொறிவின் மிகப்பாரியளவிலான ஒட்டு மொத்த விலையையும் வரவிருக்கின்ற தசாப்தங்களில் தொழிலாளவர்க்கமே செலுத்துவதை உத்தரவாதப்படுத்து வதற்கு முன்பினும் கூடுதலாக கண் மூடித்தனமான வெட்டுக்களைக் கோரி வருகின்றனர்.

கடைசியாக எழுதிய அவரது வலைப் பதிவில், நிதி மந்திரி யானிஸ் வாரௌ ஃபாகிஸ் கிரீஸில் ஏற்கனவே உருவாக்கப் பட்டுள்ள சமூகப் பேரழிவின் சில புள்ளி விபரங்களைத் தொகுத்தளித்தார். 2010 க்குப் பின்னரில் இருந்து, கூலிகள் 37 சதவீதம் வீழ்ச்சி அடைந்தன. ஓய்வூதிய ங்கள் 48 சதவீத அளவிற்கு குறைக்கப் பட்டன, அரசு வேலைவாய்ப்பு 30 சதவீதம் அளவிற்கு சுருக்கப்பட்டது, மற்றும் நுகர்வுவோர் செலவுகள் 33 சதவீத அளவிற்குக் குறைக்கப்பட்டன என்று அவர் எழுதுகிறார்.

இன்றைக்கு சுமார் 1 மில்லியன் குடும்பங்கள் தாத்தா அல்லது பாட்டியின் சொற்பமான ஓய்வூதியத்தைக் கொண்டு பிழைத்திருக்கின்றன. ஏதேனுமொரு வேலைவாய்ப்பற்றோர் நலச்சலுகையை வேலைவாய்ப்பற்றோரில் வெறும் 9 சதவீதத்தினர் மட்டுமே பெற்றுவருகின்ற ஒரு நாட்டில் அந்த குடும்பங்களின் மிகுதி நபர்கள் வேலைவாய்ப்பின்றி உள்ளனர். அத்தகைய ஒரேயொரு ஆளின் ஓய்வூதியத்தையும் வெட்டுவ தென்பது ஒரு குடும்பத்தையே வீதிகளில் கொண்டுவருவதற்கு ஒப்பானதாகும்."

ஐரோப்பிய மத்திய வங்கியிலிருந்து கிடைக்கும் நிதிகளைக் கிரேக்க வங்கிகள் சார்ந்திருக்கின்றநிலையில், திவால் நிலைமை என்பது கிரீஸை யூரோ மண்டலத்திலிருந்து வெளியே தள்ளக்கூடும் என்று அது எழுதியது. கிரீஸின் நிதியியல் அமைப்புமுறையின் சீரழிவு அதன் பொருளாதார வாழ்வைச் சின்னாபின்னமாக்கிவிடும். அதேபோல அதன் அரசியல் அமைப்புமுறைக்கு நினைத்துப் பார்க்கவியலா பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்றது.

சிரிசா சிக்கன நடவடிக்கையை நிராகரிக்கவில்லை, ஆனால் அதை நடைமுறைப்படுத்த மிகவும் சாதகமான அரசியல் விதிமுறைகளைக் கோரி வருகிறது. கிரீஸை இப்போது குறைந்தள விலான சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ள அனுமதித்தால், அது பொருளாதார மீட்சி ஏற்படும்போது பின்னர் அந்த அடித்தளத்தில் அது அதன் கடன்களை அதிகமாக திரும்ப செலுத்தும் என்று சிப்ராஸும் வாரௌ ஃபாகிஸும் வாதிடுகின்றனர்.

ஆனால் அதன் நிபந்தனைகளின் படியே கடைசி நிமிடத்தில் ஒரு உடன்பாடு எட்டப்பாட்டாலும்கூட, அது தொழிலாள வர்க்கத்தின்மீது மழையென பொழியப்படும் தாக்குதல்களை அடிப்படையில் மாற்றப்போவதில்லை. கிரீஸ் அதன் மலைப்பூட்டும் கடன்களைத் திரும்ப செலுத்த 40 ஆண்டுகளுக்கும் அதிகமாக, 2057 வரையில், ஆகலாம் என்று Daily Telegraph சமீபத்தில் குறிப்பிட்டது.

ஆண்டுக்கணக்கிலான சிக்கன நடவடிக்கைக்கு ஒரு மாற்றீடாக சிப்ராஸால் காட்டப்படும் தோரணையில் ஒரு மத்திய கொள்கையாக இருப்பது, அவரது அரசாங்கம் இன்னும் சிறப்பார்ந்த வரி சேகரிப்பாளர்களாக செயற்பட முடியும் என்பதாகும். ஆனால் கிரேக்க திவால்நிலைமையின் அச்சம் முன்பினும் அதிகமாக உச்சரிக்கப்படுகின்ற நிலை யில், ஏதென்ஸின் நெருக்கடிக்கு எண்ணெய் வார்க்கும்வகையில் அரசு வருவாய் வீழ்ச்சிகளை ஏற்படுத்தி, செலுத்தப்படாத வரி பாக்கியின் அளவு உயர்ந்துவருகிறது. மே மாதம் செலுத்தப்படாத வரி பாக்கிகள் 1 பில்லியன் யூரோவாக அதிகரித்து, இந்த ஆண்டின் மொத்த தொகையை 5 பில்லியன் யூரோவிற்கு கூடுதலாக ஆனதை புதிய புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டின. நிலுவையில் உள்ள மொத்த செலுத்தப்படாத வரி பாக்கிகள் 77 பில்லியன் யூரோவிற்கு அதிகமாக உள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு சிறந்த உடன்படிக்கையை பெறுவதற்கான ஒரு முயற்சியில், சிப்ராஸ் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடுமையான கோரிக்கை களுக்கு எதிராக, அவற்றை தடுப்பதற் காக, வாஷிங்டனின் ஆதரவைப்பெற முயன்றார். இந்த மூலோபாயத்தின் தோல்விதான். சிப்ராஸ் இப்போது ரஷ்யாவை துருப்புச் சீட்டாக்கி விளையாடும் ஒரு முயற்சியில் தங்கி இருக்கிறார் என்பதை அர்த்தப்படுத்துகிறது.

ஐரோப்பிய மத்திய வங்கி அமர்வில் இருந்தபோதே, ஒரு கௌரவ அழைப்பா ளராக மாஸ்கோவிலிருந்து கலந்து கொண்டிருந்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினுக்கு முன்னால் சிப்ராஸ் பேசிக்கொண்டிருந்தார். அவரது உரையைத் தொடர்ந்து, கிரீஸ் வழியாக ஐரோப்பாவிற்கு ரஷ்யாவின் எரிவாயுவைக் கொண்டு செல்லும் ஒரு எரிவாயுக் குழாய் நீட்சியை கட்டமைப் பதன் மீதான ஓர் உடன்படிக்கை கையெழுத்தானது. ரஷ்யாவிடம் இருந்து சிரிசா நிதியுதவி பெறும் சாத்தியக்கூறு குறித்தும் பேசப்பட்டது.

**தொகுப்பு: வேணு கிருஸ்ணா**

கிரீஸ் மூலோபாயரீதியில் முக்கியமானது என்பதுடன், அது அப்பிராந்தியத்தில் இன்னமும் ஸ்திரப்பாட்டு மையத்தின் அந்தஸ்தைத் தாங்கியுள்ளது என்பதையும் அவர் சேர்த்துக்கொண்டார்.

சிப்ராஸ் கிரேக்க முதலாளித்துவ வர்க்கத்திற்கான சிறந்த நிபந்தனை களை ஸ்தாபிக்க மட்டுமே முயல்கிறார். அவர் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஓர் உடன்படிக்கையை பாதுகாக்க பொறுப்பேற்றுள்ளார். மேற்கூறியதை எட்டுவதற்காக, உள்நாட்டு கூட்டணிகளை அவர் பலவீனப்படுத்தி வருகிறார்.




# பாப்பா முரசு

## வாரம் ஒரு திருக்குறள்




### கள்ளாமை

**களவின்கண்கன்றிய காதல் விளைவின்கண்**
**வீயா விழுமம் தரும்.**

களவு செய்து பிறர் பொருள் கொள்ளுதலில் ஒருவனுக்கு உள்ள மிகுந்த விருப்பம், பயன் விளையும்போது தொலையாதத் துன்பத்தைத் தரும்.

குறள் 284




ஏன்யா பணத்தை மட்டும் சரியா வங்கியில போடுறீங்களே!! அது மாதிரி குப்பையையும் குப்பைத்தொட்டில போட்ட என்ன?

**இப்பகுதிக்கு சிறுவர்களிடம், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**

## பூனைக்குட்டி



**மியாவ் மியாவ் பூனைக்குட்டி மீசை வச்ச பூனைக்குட்டி பையப் பையப் பதுங்கி வந்து பாலைக் குடிக்கும் பூனைக்குட்டி பளபளக்கும் பளிங்குக் குண்டு பளிச் சென்று முகத்தில் இரண்டு வெளிச்சம் போடும் விழி கண்டு விரைந்தோடும் எலியும் மிரண்டு விரித்த பூவைக் கவிழ்த்ததுபோல விளங்கும் பூனைக் காலடிகள் இருந்து தவ்வ ஏற்றபடி இயங்கும் சவ்வுத் தசைப்பிடிகள் அழகு வண்ணக் கம்பளியால் ஆடை உடுத்தி வந்தது போல் வளர்ந்து முடியும் பலநிறத்தில் வந்து தாவும் பூனைக்குட்டி விரட்டி விலங்கினைக் காட்டிலே வீரங்காட்டும் புலியினமே துரத்தி எலியை வீட்டினிலே தொல்லை தீர்க்கும் பூனை.**

## விடுகதைகள்

1. இவனுடைய நிறம் நீலம். இவனது எல்லை நெடுந்தூரம்... இவன் யார்?
2. ஓர் எழுத்து... எழுத உதவும்... இது என்ன?
3. என்னைப் பார்த்தால் உன்னைக் காட்டுவேன்.. நான் யார்?
4. காட்டில் கிடைத்த கட்டைகான மழை பொழிகிறது.. இது என்ன?
5. விழுந்தால் படுக்காது. எழுந்தால் நிற்காது... இது என்ன?
6. கறுப்புக் காகம் ஓடிப்போச்சு... வெள்ளைக் காகம் நிக்குது... இது என்ன?
7. கந்தல் துணி கட்டியவன், முத்துப் பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தான்... இவன் யார்?
8. கலர் பூ கொண்டைக்காரி. காலையிலே எழுப்பி விடுவாள்... இவள் யார்?
9. அகன்ற வாய் உடையவன். திறந்த வாய்மூடாதவன்.. இவன் யார்?

### விடைகள்:

1. கடல். 2. கை.
3. கண்ணாடி.
4.புல்லாங்குழல்.
5. தஞ்சாவூர் பொம்மை.
6. உளுந்து. 7. சோளக்கதிர்.
8. சேவல்.
9. அண்டா

## பழமொழிகள்

1. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
02. ஆழம் அறியாமல் காலை விடாதே.
03. இக்கரைக்கு அக்கரை பச்சை.
04. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
05. எட்டாக் கனிக்குக் கொட்டாவி விடாதே.
06. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
07. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?
08. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்.
09. சிறு துளி பெருவெள்ளம்.
10. தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்.
11. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
12. யானைக்கு அடி சறுக்கும்.
13. எட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.
14. குரைக்கிற நாய் கடிக்காது.
15. விளையும் பயிரை முளையிலே தெரியும்.


இ.சுபீட்ஷா
தரம் - 3
யா/ கல்வயல்
ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்.



# "விளையும் பயிரின் முளை!"

ஏழ்மையான சூழலில் குடிசைகளில் வறுமையுடன் போராடியதாலேதான் பிற்காலத்தில் மனித சமுதாயத்துக்குப் பயன்தரவல்ல கண்டுபிடிப்புக்களைத் தந்துதவவும் அவர்களால் முடிந்து இருந்தது.

அத்தீர்க்கதரிசனம் ஏற்கனவே அவர்களுக்குத் தோன்றி வழிப்படுத்தியதாலே செல்வந்த வாழ்வினை வெறுத்து, ஏழ்மையை நாடி வாழ்க்கையை அமைக்கவும் தூண்டு கோலானது.




உலக ஞானிகளை எடுத்துக் கொண்டாலும் ஏழ்மையிலே பிறந்து ஏழ்மையிலே வளர்ந்து வாழ்ந்து தத்துவார்த்த மொழிகளை வழங்கி மறைந்துள்ளனர்.

இவ்வாறு ஏழ்மையில் தோன்றிய ஒருவரே நீண்டகாலமாக அமெரிக்காவில் மக்களிடையே குரோதங்களை வளர்த்த நிறவெறி மூடநம்பிக்கையை இல்லாதொழிக்க அரும்பாடுபட்ட ஆபிரகாம் லிங்கன்.

உயர்நிலைபெற்ற ஞானிகள், விஞ்ஞானிகள் தோன்றுவது ஏழ்மை சூழ்ந்த குடிலில்தானோ?

சேற்றில் வளரும் தாமரை மலர் போன்று வறுமை என்னும் இடரின் நடுவே அறிஞர், விஞ்ஞானிகள் தோன்றினர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிதானே!

சேகரனின் சிந்தனைகள், அந்தப் பெரியோர்களின் வாழ்வியலையும், அவர்கள் மனித சமுதாயத்துக்கு ஏற்படுத்தி வழங்கிய பயன்பாட்டுச் சாதனங்களிலுமே திரும்பத் திரும்ப வலம் வந்து கொண்டிருந்தன.

அவ்வறிஞர், விஞ்ஞானிகளினது செயற்பாடுகளை அலசிக் கொண்டு இருந்ததிலே பொழுதுகள் வெகுவாக ஓடி இருந்ததை அவனால் உணர முடிவில்லை.

சிந்தனைகளில் லயித்துவிட்டால் அன்றைய உணவுகளையே மறந்து இருந்துவிடுவான். அந்த நினைவுகள் இடையே சேகரனுக்கு தன்னுடைய பயிலும் சந்திரன் என்னும் சக மாணவனுடைய நினைவும் கூடவே தோன்றிற்று.


(தொடரும்...)

## கண்டுபிடியுங்கள்

இப்படத்தில் எத்தனை முகங்கள் உள்ளன?



## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் வண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 06.07.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1103**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1103**

கே.நிதர்சன்,
பிரதான வீதி, பதுளை.

பரிசுக்குரியவர்: 1101

பாராட்டுக்குரியவர்கள்

01. என்.சிந்து, கொக்குவில், யாழ்ப்பாணம்.
02. சு.காவியா, பிரதான வீதி, புத்தளம்.
03. மா.வர்சாந்த், கடற்கரை வீதி, மன்னார்.
04. யோ.தருண், நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை
05. சு.றொனால்ட், ஜின்னாநகர், திருகோணமலை.
06. நா.கீதாஞ்சலி, பல்லப்பை, புலோலி.
07. ய.நிதர்சன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
08. எம்.யாதவி, இணுவில் தெற்கு, இணுவில்.

# உண்மைத் தொடர்

**அதிர் இடி 97**



**பற்றி எரியும் தீயின் நாக்குகள் அந்த மாளிகையை விழுங்கிக் கொண்டிருப்பதை எட்டத்தில் தன் காருக்குள் இருந்து ரசித்துக்கொண்டு இருந்தான் அமீன். 'மந்திரவாதியின் மாளிகையில் தீ விபத்து! 12 பேர் கருகிமாண்டனர் என்று செய்திகள் வெளியாகின. இடி அமீனுக்குத் தெரியாமல் தப்பிச் சென்ற மந்திரவாதியின் இரு உதவியாளர்கள்மூலம் அது விபத்தல்ல திட்டமிட்ட செயல் என்பது படிப்படியாக மக்களுக்கு தெரியவந்துவிட்டது.**

# இடி அமீன்

எப்போது காலில் வந்து விழுந்தான் என்பது அமீனுக்கே தெரியவில்லை.

அமீனின் கவனமெல்லாம் அவள்மீதே இருந்தது. அவள் உண்மையாகவே மூர்ச்சையாகிப் போனாளா? அல்லது நடிக்கிறாளா? என்று சந்தேகமாக இருந்தது.

தன் காலில் கிடந்தவனைப் பார்த்த அமீன் இது எத்தனை நாளாக என்று கேட்டான்.

அவன் தங்கு தடையில்லாமல் சகலத்தையும் ஒப்புவித்தான். தன்னை வேலைக்கு சேர்த்துக் கொண்டதே அதற்காகத்தான் என்றான்.

வேலைக்குச் சேருமபோது தன் ஆண்மையை அவள் பரிசோதித்த கதையையும் கூறினாள். அது கிளுகிளுப்பான கதைதான். அமீனுக்கோ கோபத்தைக் கிளறும் கதையாக இருந்தது.

"என்னிடமே விளையாட நினைத் தீர்களே! உங்களுக்கு எத்தனை துணிச்சல்?" என்று தன் கால்களை உதறி அவனை முகத்தில் உதைத்தான்.

பூஜை அறையை வெளியே தாழிட்டு விட்டு தன் மெய்க்காவலர்களை அழைத்தான்.

வெளியே இருக்கும் மந்திரவாதியின் உதவியாளர்களை அறை ஒன்றுக் குள் போட்டு பூட்டுமாறு உத்தர விட்டான். இப்படித்தான் ஏதாவது விபரீதம் நடக்கும் என்று தெரிந்து உதவியாளர்களில் இரண்டுபேர் அங்கிருந்து நைசாக தப்பிச் சென்றுவிட்டனர்.

அமீன் கோபத்தில் நிதானம் இழந்திருந்தால் உதவியாளர்கள் எல்லோரும் இருக்கிறார்களா? என்று சரியாகப் பார்க்கவில்லை.

தன்னை முட்டாளாக்க நினைத்த வர்களுக்கு கடும் தண்டனை கொடுத்தாகவேண்டும் என்று சிந்தனை மட்டுமே அவன் மனதில் ஓங்கியிருந்தது.

"யாரும் வெளியே தப்பிச் செல்ல முடியாதபடி கதவுகள், ஜன்னல்கள் அனைத்தையும் மூடுங்கள். மூடி விட்டு இந்த கட்டடத்தை தீ வைத்து அழியுங்கள்!" என்று கத்தினான்.

அமீனின் மெய்ப்காப்பாளர்களுக்கு அவனது உத்தரவு புதிராக இருந்தது. தனது நட்புக்குரிய மந்திரவாதியின் இருப்பிடத்தை அழிக்குமாறு ஏன் கூறுகின்றான் என்று கேள்வி எழுந்தது.

உத்தரவை நிறைவேற்றவேண்டியது தானே அவர்கள் வேலை அமீன் சொன்னபடியே தீவைத்தனர்.

தீ பரவிக் கொண்டிருந்தபோது தான் மந்திரவாதி மயக்கம் தெளிந்து எழுந்தாள். அந்த இளைஞன் குறுக்கும்நெடுக்குமாக ஓடித்திருந்து குழந்தைபோல தேம்பியழுவதைக் கண்டாள்.

அதிபர் வந்தார் அறையைப் பூட்டிவிட்டு போய்விட்டார். எங்களைக் கொல்லப் போகிறார்கள் என்று அவன் அழுதபடியே கூறினான். தீ பரவிக் கொண்டிருப்பதை அவன் அறியவில்லை.

அறிந்தபோது அவன் அலறுவதற்கே வாய்ப்பிருக்கவில்லை. கூரைபெயர்ந்து அவன் தலையில் விழுந்தது. அவன் தலை உடைந்தது.

மந்திரவாதிதான் கத்தினாள். தன்னை யாராவது காப்பாற்றுமாறு தன் சக்தி அனைத்தையும் திரட்டிக் கத்தினார்.

வேறு ஒரு அறையில் பூட்டப் பட்டுக் கிடந்த அவளது உதவியாளர் களது மரணஓலத்திற்குள் அவளது குரல் அமுங்கிப்போனது.

பற்றி எரியும் தீயின் நாக்குகள் அந்த மாளிகையை விழுங்கிக் கொண்டிருப்பதை எட்டத்தில் தன் காருக்குள் இருந்து ரசித்துக் கொண்டிருந்தான் அமீன்.

மந்திரவாதியின் மாளிகையில் தீ விபத்து! 12 பேர் கருகி மாண்டனர் என்று செய்திகள் வெளியாகின.

இடி அமீனுக்குத் தெரியாமல் தப்பிச் சென்ற மந்திரவாதியின் இரு உதவியாளர்கள்மூலம் அது விபத்தல்ல திட்டமிட்ட செயல் என்பது படிப்படியாக மக்களுக்கு தெரியவந்துவிட்டது.

எங்கும் பயமும், நம்பிக்கையற்ற நிலையுமே காணப்பட்டது. தங்கள் உயிருக்கு ஒரு தோட்டாவின் மதிப்புக்கூட கிடையாது என்பது உகண்டா மக்களுக்குத் தெரிந்திருந்தது.

உகண்டாவின் அரசியல் நிர்வாக இயந்திரம் முற்றுமுழுதாக சீர்குலைந்து கிடந்தது.

நாட்டிலிருந்த புத்திஜீவிகள் வெளியேறியதால் ஒன்றுக்கும் உதவாத கூட்டமே நிர்வாகப் பதவிகளில் அமர்ந்திருந்தது.

உகண்டாவின் தலைநகரான கம்பாலாவில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

கம்பாலாவுக்கான நீர்விநியோகம் நிலையம் களபாவில் இருந்தது. அந்த நிலையத்தை பல வருடங்களாக சரியாக பராமரிக்கவில்லை. அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை, அதிகாரிகள் சிலர் விழுங்கிக் கொண்டிருந்தனர்.

பராமரிக்கப்படாது அந்நிலையம் பழுதடைந்தமையால், நீர்விநியோகம் தடைப்பட்டது.

மருத்துவமனைக்குக்கூட தண்ணீர் கிடைக்கவில்லை. கம்பாலா எங்கும் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாடியது.

மோட்டார் தாங்கி வாகனங்களில் தண்ணீர்கொண்டு வந்து வீடு வீடாகக் கொடுத்தனர்.

வீடொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டுகோ சிறுபாத்திரங்களில் குடி நீர் வழங்கப்பட்டது. பிஞ்சுக் குழந்தைகள் தாகத்தில் தவித்தன. அமீன் மனைவிமார்களது வீடு களுக்கும், இராணுவ அதிகாரிகளது வீடுகளுக்கும் தேவையானளவு தண்ணீர் விநியோகிக்கப்பட்டது.

மருத்துவமனையில் தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்தபோதும் இராணுவ முகாம்களுக்கு போதிய குடிநீர் கொடுக்கப்பட்டது.

நீர் விநியோகம் சீர்குலைந்தமை யால் தொற்றுநோய்கள் பரவத் தொடங்கின.

சுகாதார அமைச்சர் சியம்பாவுக்கு அமீனிடம் இருந்து திடீரென்று அழைப்புவந்தது.

அமீனின் ஜனாதிபதி மாளிகைக்கு எதிராகவே சுகாதார அமைச்சின் காரியாலயம் இருந்தது.

அதனால் அமீன் அழைக்கும் போதெல்லாம் சியம்பா சென்றுவிட இலகுவாக இருந்தது.

அமீனின் பிள்ளைகளில் ஒருவருக்கு தொற்றுநோய் பிடித்திருந்தது.

"உள்ளதில் சிறந்த டாக்டராக ஒருத்தரை அனுப்பிவையுங்கள். அப்படி யாரும் இல்லையானால் வெளிநாட்டிலிருந்து தருவிக்க ஏற்பாடு பண்ணுங்கள்!" என்றான் அமீன்.

(தொடரும்..)

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 632

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | | 15 | 16 | | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | | 30 |
| | 32 | 33 | | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 630 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 க | 3 ங் | 4 கா | 5 ர | 6 ம் |
| 7 ற் | 8 ல் | 9 வ | 10 ற | | 12 ம |
| 13 ப | 14 வி | 15 கி | 16 ல் | 17 ட | 18 ர் |
| 19 த | | 21 ய | | | 24 த |
| 25 ன | 26 ச | 27 ம் | 28 ஊ | 29 ரு | |
| 31 ம் | 32 தா | | 34 வா | 35 சு | 36 கி |

**மேலிருந்து கீழ்**

01. அறிஞன் ; பரமஞானி.
02. சுரநோய் ; காய்ச்சல். (திரும்பியுள்ளது)
03. மாதந்தோறும். (குழம்பியுள்ளது)
04. பகைவர். (குழம்பியுள்ளது)
05. வருசத்திற்கு ஒரு கன்றுபோடும் பசு. (திரும்பியுள்ளது)
06. இதைத் தின்று நீடூழி காலம் வாழலாம். (குழம்பியுள்ளது)
20. தரகுப் பணம். (குழம்பியுள்ளது)

**இடமிருந்து வலம்**

01. நடிகர் M.G.R அவர்களை இப்படியானவர் என்றும் சொல்லலாம்.
07. சௌகரியமாக; வசதியுடையதாக. (குழம்பியுள்ளது)
15. முறையே என்பதற்கு இப்படியும் கூறுவர்.
19. 'ஐரோப்பாவின் தோட்டம்' என்று அழைக்கப்படும் நாடு. (நான்காவது எழுத்து இடம் மாறி திரும்பியுள்ளது)
25. தம்மையும் தன் சேனைகளையும் காத்துக் கொண்டு போர்வீரர் பலரோடு போர்புரிபவர். (குழம்பியுள்ளது)
35. கிட்கிந்தை மன்னன்.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 13.07.2015 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 632
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.630 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.இந்திகா,
பிரதான வீதி, நுவரெலியா.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
02. எம்.சாந்தரூபன், பிரதான வீதி, வவுனியா.
03. சு.வந்தனா, கரவெட்டி தெற்கு, கரவெட்டி.
04. து.மந்தாகினி, கண்டி வீதி, சாவகச்சேரி.
05. யோ.வனிதா, பரந்தன், கிளிநொச்சி.
06. ஆர்.யோகராணி, புலோப்பளை, பளை.
07. இ.ஜெயமோகன், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
08. சா.இளவரசன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
09. எம்.எவ்.சுபைர், பிரதான வீதி, கதிர்காமம்.
10. அ.மகிந்தன், கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.






## மல்லிகாவை தொடர்ந்து ஜாக்கிசானுடன் இணையும் கத்ரீனா



இந்திய, சீனா கூட்டு தயாரிப்பில் உருவாகும் ஹொலிவூட் படம் குங்.ஃபூ யோகா. இந்திய கலாசாரம் மற்றும் சீனா கலாசாரத்தின் பின்னணியில், குங்.ஃபூ, யோகா கலைகளை அடிப்படையாக வைத்து இப்படத்தின் கதை உருவாக்கப்பட்டுள்ளதாம்.

இப்படத்தில் கதையின் நாயகனாக பிரபல ஹொலிவூட் நடிகர் ஜாக்கிசான் நடிக்க, அவருக்கு ஜோடியாக பிரபல பொலிவூட் நடிகை கத்ரீனா கை.ஃப் நடிக்கிறார். இவர்களுடன் இன்னொரு பொலிவூட் நடிகையான ரியாசென்னும் நடிக்கிறார்.

ஏற்கெனவே ஜாக்கிசான் நடித்த மித் என்ற படத்தில் பிரபல பொலிவூட் நடிகையான மல்லிகா ஷெராவத் நடித்திருந்தார். அவரை தொடர்ந்து இப்போது ஜாக்கிசானுடன் கத்ரீனா கை.ஃப் இணைந்து உள்ளார். இப்படத்தில் சீனா பல்கலைக்கழக பேராசிரியராக நடிக்கிறாராம் கத்ரீனா கை.ஃப். இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவிருக்கிறது.

## தனுஷ் படத்தி... ஆபாச நடிகை...

ஹொலிவூட்டின் பிரபல நாயகி க...
கர்தஷியான். பைசல் சயீப் இயக்க...
For Adults Only படத்தில் கிம் கர்த...
யான் நடிக்க அவரிடம் கேட்டுள்ளன...
தமிழ், தெலுங்கு, ஹிந்தி என மூன்...
மொழிகளில் தயாராக இருக்கும்
இப்படத்தில் தனுஷ் நடிக்க இருப்ப...
செய்திகள் வந்துள்ளது.

இந்நிலையில், இதுபற்றி இயக்கு...
கூறுகையில், தனுஷ் சிறந்த நடிகர்...
இதில் இருவேறு கருத்து கிடையாது...
ஆனால் For Adults Only படத்தில்
நடிக்க கேட்டு அவரை அணுகவில்...
கிம் கர்தஷியானை நடிக்க கே...
பேசப்பட்டது.

அநேகமாக அவர் கெ...
ரோலில் நடிக்க சம்மதிப்...
என்று எண்ணுகிறோம்...
தமிழில் இப்படம் உ...
வதால் தமிழ் ஹீரோ...
ஒருவர் நடிக்கலாம்...
யார் என்பதை இன்...
முடிவு செய்யவில்லை...
துபாயை சேர்ந்த
அன்ட்ரியா டி சோஸா...
ஹீரோயினாக நடிக்க
உள்ளார் என்றார்.






## வாலு ஏன் நீண்டது?

சிம்பு நடிப்பில் வாலு கிட்டத்தட்ட 3 வருடமாக ரிலீஸாகமல் தவித்துவருகின்றது.

இந்நிலையில் இப்படத்தை டி.ஆர் அவர்களே வாங்கி தமிழகம் முழுவதும் வெளியிடவுள்ளார்.

இப்படம் ஏன் வரத் தாமதம் என டி.ஆர் ஒரு தகவலை கூறியுள்ளார். இதில் "இப்படம் ஆரம்பிக்கும்போதே சொன்னேன், இந்த தலைப்பு வேண்டாம் என்று.

ஏனெனில் வாலு என்றாலே நீளத்தானே செய்யும், மேலும் ஒரு மன்னர் போரில் வாள் எடுத்து போராடி வெற்றிபெறுவார், ஆனால், நான் இந்த வாலுவை கையில் எடுத்து வெற்றி பெறப்போகிறேன்" என கூறியுள்ளார்.

## விஷாலுடன் ஜோடி சேரும் தமன்னா?

விஷால் தற்போது சுசீந்திரன் இயக்கிவரும் பாயும் புலி படத்தில் நடித்து வருகிறார். இதில் விஷாலுக்கு ஜோடியாக காஜல் அகர்வால் நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்றுவருகிறது. இன்னும் பாடல் காட்சிகள் மட்டும் படமாக்கப்பட இருக்கிறது. இப்படத்திற்குப் பிறகு விஷால், லிங்குசாமி இயக்கத்தில் நடிக்க இருக்கிறார்.

ஏற்கனவே லிங்குசாமி இயக்கத்தில் விஷால் நடித்து சூப்பர் ஹிட்டான சண்டக்கோழி படத்தின் இரண்டாம் பாகமாக இப்படத்தை உருவாக்க இருக்கிறார்கள்.

தமன்னா தற்போது ஆர்யாவுடன் இணைந்து வாசுவும் சரவணனும் ஒன்னா படிச்சவங்க படத்தில் நடித்துவருகிறார். விரைவில் இப்படத்தின் படப்பிடிப்பு முடியவுள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்தவுடன் விஷாலுடன் இணைந்து நடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சண்டக்கோழி 2இல் காமெடி வேடத்தில். சூரியும், முக்கிய கதாபாத்திரத்தில் ராஜ்கிரணும், மீரா ஜாஸ்மினும் நடிக்க இருக்கிறார்கள். இமான் இசையமைக்க இருக்கிறார்.



# ஜெயின் ஆசை

தமிழ் சினிமா உலகில் தற்போது வளர்ந்து வரும் நடிகரில் ஒருவர் ஜெய். இவர் விஜய் நடிப்பில் வெளியான பகவதி படத்தில் விஜய்க்கு தம்பியாக நடித்திருந்தார். இதுதான் அவருக்கு முதல் படம். இப்படத்திற்குப் பிறகு ஜெய்க்கு பல படங்களில் நடிக்க வாய்ப்பு வந்தது.

தற்போது பிசியாக நடித்து வரும் ஜெய், மீண்டும் விஜய்யுடன் இணைந்து நடிக்க விருப்பம் தெரிவித்துள்ளார். இவர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு சமூக வலைத்தளத்தில் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்துவிட்டு, பின்னர் மீண்டும் விஜய் அண்ணாவுடன் இணைந்து ஒரு படம் நடிக்க ஆசை இருப்பதாக கூறியிருக்கிறார்.

சமீபத்தில் ஜெய், வெங்கட் பிரபு இயக்கத்தில் வெளியான மாஸ் படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடித்திருந்தார். மேலும், அர்ஜூனன் காதலி, புகழ் ஆகிய படங்களிலும் பிசியாக நடித்துவருகிறார்.




## ...னுஷ் படத்தில் ...ஆபாச நடிகை?

...ஹாலிவூட்டின் பிரபல நாயகி கிம் ...ஷியான். பைசல் சயீப் இயக்கவுள்ள ...Adults Only படத்தில் கிம் கர்தஷி ... நடிக்க அவரிடம் கேட்டுள்ளனர். ..., தெலுங்கு, ஹிந்தி என மூன்று ...களில் தயாராக இருக்கும் ...த்தில் தனுஷ் நடிக்க இருப்பதாக ...திகள் வந்துள்ளது.

...ந்நிலையில், இதுபற்றி இயக்குனர் ...கையில், தனுஷ் சிறந்த நடிகர். ... இருவேறு கருத்து கிடையாது. ...ல் For Adults Only படத்தில் ...க்க கேட்டு அவரை அணுகவில்லை. ...கிம் கர்தஷியானை நடிக்க கேட்டு பேசப்பட்டது.

அநேகமாக அவர் கெஸ்ட் ரோலில் நடிக்க சம்மதிப்பார் என்று எண்ணுகிறோம். தமிழில் இப்படம் உருவா-வதால் தமிழ் ஹீரோ ஒருவர் நடிக்கலாம். அவர் யார் என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை. துபாயை சேர்ந்த அன்ட்ரியா டி சோஸா ஹீரோயினாக நடிக்க உள்ளார் என்றார்.

## குழந்தை நட்சத்திரமாகும் மீனாப் பொண்ணு

தமிழ் சினிமாவின் 90களில் முன்னணி நடிகையாக விளங்கியவர் மீனா. இவர் பிரபல தொழில் அதிபரைத் திருமணம் செய்துகொண்ட பிறகு சினிமாவிற்கு முழுக்குப் போட்டார். தற்போது நடிகை மீனாவுக்கு நைனிகா என்ற அழகான பெண் குழந்தை உள்ளது. அட்லீ இயக்கத்தில் நடிகர் விஜய் நடிக்க இருக்கும் புதிய படத்தில் நடிப்பதற்கு ஒரு குழந்தை தேவைப்பட மீனாவை கேட்டதற்கு அவர் சரி என்று கூறிவிட்டாராம்.

இப்படத்தில் விஜய்யின் மகளாக அறிமுகமாகிறார் நைனிகா. மீனா இதுவரை விஜய்யுடன் இணைந்து நடிக்கவில்லை என்றாலும், ஷாஜகான் படத்தில் அவருடன் இணைந்து ஒரு பாடலுக்கு நடனம் ஆடியிருக்கிறார். சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான மீனா, பின்பு அவருடன் இணைந்து எஜமான், முத்து போன்ற படங்களில் நடித்தது குறிப்பிடத்தக்கது.



## ...வாலு ...ரன் ...ண்டது?

## ...தமன்னா?

...டத்தில் நடித்து ... நடித்து வருகிறார். ...ருகிறது. இன்னும் ... இப்படத்திற்குப் ... இருக்கிறார். ...த்து சூப்பர் ...ாகமாக இப்படத்தை

... சரவணனும் ஒன்னா ...தின் படப்பிடிப்பு. ...ர்பார்க்கப்படுகிறது. ...ாஸ்மினும் நடிக்க

## பாகுபலி 3டி படமா?

ராஜமௌலி, தமிழ், தெலுங்கு என இரு மொழி களில் இயக்கிவரும் படம் பாகுபலி. படம் விரைவில் வெளிவரவுள்ள நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய படத்தின் இயக்குநர் ராஜமௌலி, “எனக்கு 3டி தொழிநுட்பம் பிடிக்காது. 3டி படத்தின் தரத்தைக்கூட்டுகிறது. ஆனால் எனக்கு படம் யதார்த்தமாக இருக்கவேண்டும்” எனத் தெரிவித்தார்.

## ஸ்ரீசாந்துடன் ஜோடிசேர மறுக்கும் நடிகைகள்

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த். கேரளாவைச் சேர்ந்த இவர், ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இப்போது கிரிக்கெட்டில் இருந்து ஒதுங்கியிருக்கும் ஸ்ரீசாந்த், சினிமாவில் நடிக்கிறார். அவர் நடிக்கும் படத்தை சனா யாடி ரெட்டி இயக்குகிறார்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னட மொழி களில் இந்தப் படம் உருவாகிறது. ஸ்ரீசாந்த் ஜோடியாக நடிக்க தமன்னா, காஜல் அகர்வாலிடம் பேசிவருகின்றனர். இருவரும் இன்னும் சம்மதிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

## சமையல் கலைஞனாகும் ஜீவா

யான் படத்திற்குப் பிறகு ஜீவா தற்போது திருநாள் படத்தில் நடித்துவருகிறார். இதில் இவருக்கு ஜோடியாக நயன்தாரா நடித்துவருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது கும்பகோணம் உள்ளிட்ட பல இடங்களில் நடந்துவருகிறது. இப்படத்தை ராம்நாத் இயக்கிவருகிறார்.

இப்படத்தையடுத்து ஜீவா கவலை வேண்டாம் படத்தில் நடிக்க இருக்கிறார். இதில் ஜீவாவுக்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடிக்க இருக்கிறார். இப்படத்தை யாமிருக்க பயமே படத்தை இயக்கிய டிகே இயக்குகிறார். நகைச்சுவை கலந்த காதல் படமாக உருவாகவுள்ள இப்படத்தில் ஜீவா, சமையல் கலைஞராக நடிக்க இருக்கிறார்.

பெரிய நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் பணிபுரியும் சமையல் கலைஞனாக இவருடைய கதாபாத்திரத்தை உருவாக்கி இருக்கிறார்களாம்.

கவலை வேண்டாம் படத்தில் ஜீவா, கீர்த்தி சுரேஷுடன், பாபி சிம்ஹா, நிக்கி கல்ராணி, கருணாகரன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க இருக்கிறார்கள். சமீபத்தில் போட்டோ ஷூட் முடிந்துள்ளது. விரைவில் படப்பிடிப்பு தொடங்க இருக்கிறது.

தேன் கிண்ணம்

# நட்பின் பெட்டி



உன்னத உறவுக்கு
உயிர்கொடுத்து
தூய்மை நிலையதை
உயர்வாக உதிர்த்தது
அன்றைய நட்பு!

கபட உறவுக்கு
களம் அமைத்து
களங்கப்படுத்துவது
என்றே.
கங்கணம் கொள்வது
இன்றைய நட்பு!
துன்பத்திலும் இன்பத்திலும்
ஒன்றரக் கலந்து
இன்னலில் உதவி
காய உரைத்து
கருமம் சிதையாதாரே
அன்றைய நட்பினர்!

கசுரினா பீச்சிலும்
சாட்டியிலும்
காதோரக் கவி பாடி
கோயில் திருவிழாவில்
கோஷ்டியாய் கூடி
அடுத்துக் கெடுக்கும்
அசிங்க அகங்களே
இன்றைய நட்பினர்!

அன்றைய நட்பாய்
இன்றைய நட்பு
இதிகாசமாக
கூட்டு முயற்சியாய்
கரம் கோர்க்க
திடம் கொள்வோம்
தடம் பதிப்போம்
நட்பின் பெட்புக்காய்!

அப்ரார் ஏ.அஸீஸ்
யாழ்ப்பாணம்.

# வாழக் கல்!



கல்தோன்றி மண் தோன்றாக்
காலத்து மூத்தகுடி நாம் பல படிக்
கற்கள் தாண்டி விண்
கலத்தில் செவ்வாய் சென்று
கல்லும் மண்ணும் எடுத்து ஆராய்ச்சி காலம்
தந்த சாதனை ஆயிற்று.

கல்லைக் கண்டால் நாயைக்
காணோம் கற்றவரிடத்து
கற்பையும் காணோம்
கற்றாரை கற்றாரே காழறுவர்
கல்லாதவர்க்கு முகத்தில் இரு
கண்களும் புண் என்பர்
கண்கண்ட தெய்வங்கள் பல
கண்மூடி வாய்மூடி நிற்க காலம்.

கல்லாயுதம் வில்லாயுதம் போய்
கலியுகத்தில் செல்வந்த பூமியாயிற்று
கல்லிலே கலை வண்மை கண்டு
கவி பல நயம் கண்டு வாழக்
கல் என்று கூறியுள்ளனர்.
கடல் கடந்து திரவியம் தேட உடலுள்
கல்லைக் கடத்தும் காலமாகிவிட்டது
கல்லை எண்ணி கணினி வந்தது.

கல்லீரலைப் படைத்த நன்றியாக
கடவுளை கல்லில் நாம் படைத்தோம்
கல்வி இலவசம் பள்ளி அனுமதிக்கு
கறப்பது கால் அரை இலட்சம்
கல்வெட்டு காலத்தின் கண்ணாடி
சுமைதாங்கிக் கல் இப்போ இல்லை
கல் வரும் வராது அழியும் அழியாது!
கல்லுக்குள் தேரை படி அளிக்கும்

கல் உடைகசும் போது தேரை உயிருடன்
சீதையை மீட்க முருங்கை
கல் இராமர் அணை ஆனதும்
கல்வேலி ஆனதும் அப்பர் சுவாமிக்கு
கல் தெப்பமானதுவும் - ஒரு
கல்லில் இரு மாங்கனி பறிப்பதுவும்
கல் எறிக்குத் தப்பினாலும்
கண்ணெறிபடுவது கடினம் கண் கட்டி
கலியுகத்தில் நீதி தேவதைக்குக்கூட துகில்
உரியும் காலமிது
கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்
தோற்றம் தெரியாது அழிவும் தெரியாது.

R.ஹேமலதா, நீர்வேலி.

# பாசமான வேஷங்கள்



படித்துப் பயனில்லை
பண்பு கெட்ட மனிதரிலே
பாசமென்ற வேசமிட்டு
பலவிதமாய் நடித்திடுவர்.

நன்மை கருதி பழகிடுவர்
நண்பரென்று சொல்லிவிடுவர்
நாவால் மட்டுமே அன்றி
நல்ல உள்ளத்தால் அன்று.

உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசும்
உள்ளமற்ற பேயினங்கள்
உருவற்ற உருவங்கள்

இரத்த மற்ற பொய் முகங்கள்
இருதய மற்ற பொய் முகங்கள்
இவை பாடும் பல்லவிகள்
பாசமென்ற வேசங்கள்.

P.சியானி,
சுன்னாகம்.

# இப்படித்தான் வாழவேண்டும்!



வீடும் மொழியும் நாடும் தாயும் வேண்டும் நமக்கு!
ஊரும் உறவும் சேரும் அன்பு தேவை நமக்கு!
தமிழும் சுவையும் கமழும் கவிதை தேடிப் படிக்கணும்!

தினமும் குறமும் பொருளும் படித்து வாழ்வில் உயரணும்!
பாரதி பாடல்கள் படிக்கணும் தமிழ் பாவலர் ஆகணும்!
கல்வி கற்கணும் கசடறக் கற்று அறிவில் நிமிரணும்!

சோம்பலை துரத்தணும் துரிதமாய் உழைக்கணும்
சுத்தமாய் வாழப் பழகணும்! சோரம்போகாமல் வீரமாய்
வாழணும் - நேரத்தை பொன்னாய் மதித்தாகணும்!

மனிதனாய் வாழணும் புனிதனாய் மாறணும்
இனிமையாய் பேசணும்
இதுவே மிகமிக முக்கியம்!

சேனையூரான், மூதூர் கிழக்கு.

# பெருமைமிகு தருணம்



**1969 - 1985** வரையான நீண்ட கால கிரிக்கெட் வரலாறு பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் தலைவர் சாகீர் அப்பாசுக்கு உண்டு. அந்தக் காலத்தில் இவரது துடுப்பாட்ட அழகிற்காகவே. ஒரு ஹீரோவாகக் கருதப்பட்டவிர். தற்போது 67 வயதாகும் இவர் ஐ.சி.சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உண்மையில் மிக நீண்ட இடைவெளியின் பின் இப்போதுதான் சரியான முறையில் கௌரவிக்கப்பட்டுள்ளார் என்று கூற வேண்டும். அதேவேளை பங்களா தேஷை சேர்ந்த முஸ்தபா ஹுமால் இராஜினாமாச் செய்த இடத்திற்கே, இவர் இப்போது தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஒருவகையில் உபகண்டத்துக்குள்ளேயே பதவி நின்றுகொண்டுமைமையும் குறிப்பிடத்தக்கது.


சாகீர் அப்பாஸ் ஒரு வலது கைத் துடுப்பாட்ட வீரர் 69 - 85 காலப்பகுதியில் பாகிஸ்தானுக்காக 78 டெஸ்ட் போட்டிகளிலும், 62 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியவர். அதோடு முறையே 5062 மற்றும் 2572 ஓட்டங்கள் பெற்றவர். முதலாவது உலகக் கிண்ணப் போட்டியில் இருந்து தொடர்ச்சியாக மூன்று முறை (1975 -79 -83) பாகிஸ்தான் அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர். சர்வதேச மற்றும் முதல்தர கிரிக்கெட் ஆட்டங்களில் மொத்தம் 108 சதங்கள் பெற்றவர்.

அதோடு முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் 100 சதங்களுக்கு மேல் எடுத்த ஒரேயொரு ஆசிய வீரராகவும் அப்பாஸ் காணப்படுகின்றார். இதற்கப்பால் ஒருநாள் போட்டிகளில் தொடர்ச்சியாக மூன்று சதங்கள் அடித்த முதல் வீரராகவும் இவரே காணப்படுகின்றார்.

சாகீர் அப்பாஸ் பாகிஸ்தானுக்காக 14 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 13 ஒருநாள் போட்டிகளுக்குத் தலைமைதாங்கியவர். இவற்றையெல்லாம் வைத்துப்பார்க்கும்போது சாகீர் அப்பாஸ் நீண்டகாலத்துக்குப் பின்னர்தான் மனங்கொள்ளப்பட்டு அங்கீரிக்கப்படுகிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. இன்று துடுப்பாட்ட வீரர்களுக்கு, பாதுகாப்புக் கவசங்கள் என்பது அமோகம். இவரது காலத்தில் எல்லாம் அப்படி இல்லை. இன்றும் பேசப்படும் 70 - 80 களின் வேகப் பந்துவீச்சு ராட்சகர்களையெல்லாம் எதிர்கொண்டவர்தான் இவர். இன்றைய தலைமுறையினர் கட்டாயம் அறிந்து கொள்ளவேண்டிய ஒரு ஜாம்பவான் இவர். தனக்கு இந்தப் பதவி கிடைத்தமை பற்றி, அதற்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றிகூறியுள்ளார். இவர் உண்மையைக் கூறவேண்டுமாயின் மிகத் தகுதியான ஒரு ஜாம்பவானை ஐ.சி.சி. தலைவராக்கிக் கொண்டு பெருமைப்படுகிறது என்று கூறலாம்.

# ஆய்வுகள் தொடரும்



**வரும்** ஒகஸ்டில் சீனத் தலைநகர் பீஜிங்கில் தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் பங்குகொள்ளவுள்ளன. இந்தப் போட்டிகளில் பங்குகொள்ளத் தகுதியான அமெரிக்க வீரர்களைத் தெரிவுசெய்யும் போட்டிகள் தற்போது அமெரிக்காவில் நடைபெற்று வருகின்றன. இன்று சர்வதேச விளையாட்டரங்கில் ஒரு பயங்கர நிழலாகப்படிந்துள்ளது. ஊக்கமருந்துப் பாவனையும் அதன் தொடர்ச்சியான விசாரணைகளும் தடைகளும் ஆகும்.

அமெரிக்க குறுந்தூர ஓட்ட வீரர்களான டைசன் கே, மற்றும் ஜஸ்ரின் கெட்வின் இருவரும்கூட இந்த நிழலில் வீழ்ந்து, தற்போது வெளிவந்து உசைன்போல்ட்டை எவ்வாறு வெற்றிகொள்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது இவ்வாறிருக்க, 2012இல் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் 10000 மீற்றர் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்ற கெலன்ரூப் மற்றும் அவரது பயிற்றுனர் அல்பேட்டோ செலசார் இருவரும் ஊக்கமருந்து தொடர்பான சந்தேகத்திற்கு உட்பட்டுள்ளனர். இதில் வேடிக்கை என்னவென்றால் 2002இல் பயிற்றுனர் சலாசார், தடகள வீரர் ரூப்பை ஊக்கமருந்துப் பாவனைக்கு உள்ளாக்கினார் என்பதேயாகும்.

அப்பொழுது இந்தத் தடகள வீரனுக்கு வயது 16 மட்டுமே. இந்தக் குற்றச் சாட்டுக்களை இருவருமே மறுத்துள்ளார்கள். ஆனால் இதுதொடர்பான விசாரணைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் என்று அறிவிக்கப்பட்டும்விட்டது. மேலே குறிப்பிட்ட இருவரும் எம்மால் பெரிதும் அறியப்பட்டவர்கள் அல்ல.

ஆனால் பன்னிரண்டு வருடத்துக்கு முன்பு நடைபெற்ற ஒரு விளையாட்டுத் துறைக் குற்றத்தை விசாரித்து நீதியை நிலைநாட்ட ஐ.அமெரிக்கா முன்நிற்கிறது என்பதும், இன்று எந்தவொரு குற்றவாளியும் தப்பிவிட முடியாது என்றவகையில் மருத்துவ ஆய்வுகள் எங்கேயோ போய்விட்டது என்பதை அறிந்து வியந்துபோகவே இவ்விடம் உதவும்.

# நண்பரே நா காக்க...



**இந்திய** டெஸ்ட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி. இதேவேளை ஒருநாள் அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி. என்ன இருந்தாலும் டோனியின் டெஸ்ட் தலைமை கோஹ்லியிடம் வந்தபின் கோஹ்லி தன்னை ஒரு சுப்பர் மேன் ஆக நினைத்து வார்த்தைகளை அள்ளிக் கொட்டுகிறார்போலத் தெரிகின்றது. அண்மையில் பங்களாதேஷ் அணியுடனான மூன்று ஒருநாள் போட்டித் தொடரில் இந்தியா 2-1 என்று தோல்விகண்டு பங்களாதேஷ் அணியிடம் முதல் முதலாகத் தொடர் ஒன்றை இழந்தது.

இந்தத் தொடர், பங்களாதேஷ் அணிக்கு மகத்தான வெற்றிதான் என்றாலும் அது இந்திய அணிக்கோ அல்லது அதன் தலைவர் டோனிக்கு கேவலமான அல்ல என்பதை கிரிக்கெட்டின் தரமான ரசிகர்கள் உணர்ந்துகொள்வார்கள்.

இது இப்படியிருக்க, கோஹ்லியின் கருத்துக்கள் டோனியின் மனம் புண்படும்வகையில் அமைந்துள்ளன போலத் தெரிகின்றது. தோல்விக்கான காரணங்களைச் சுட்டிக் காட்டும் இவர், டோனியைச் குறிவைப்பது போலத்தெரிகின்றது. இதில் வேடிக்கை என்னவென்றால், கோஹ்லி என்பவர் ஒரு மேடையின் உச்சியில் ஏறி நின்று, இந்தியக் கிரிக்கெட்டின் பிதாமகன் தான்தான் என்பதுபோல கருத்துக் கூறமுயல்வதுதான். அதோடு கிரிக்கெட் உலகின் எந்த ஒரு அணித் தலைவரும், நிர்வாகத்தினால் ஆசீர்வதித்து வழியனுப்பி வைக்கப்பட்டதில்லை. மனச்சுமையுடன்தான் விடை பெற்றுள்ளார்கள். அந்த ஒரு காலகட்டத்தில்தான் டோனியும் இருக்கிறார் என்று எண்ணத் தோன்றுகிறது.

இதேவேளை டோனியின் அனுபவம் சாதனைகளுடன் ஒப்பிடும்போது கத்துக் குட்டியான கோஹ்லி, டோனியுடன் ஒரு பனிப் போர் செய்துகொண்டு இருப்பதும் தெரிகிறது. சில விடயங்களில் கோஹ்லி, நடந்துகொண்டுள்ள முறைகளை டோனியுடன் ஒப்பிடுவது என்பது டோனிக்குத்தான் களங்கம்.

எனவே அதனைவிட்டுவிடுவோம். இருந்தாலும் டோனியின் இந்திய தேசத்துக்கான கிரிக்கெட் அர்ப்பணிப்புகள், சாதனைகளை கோஹ்லி எட்டுவார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இந்தச் சூழலில் ஊடகங்கள் கோஹ்லியின் கருத்தை ஊடக தர்மம்கருதி வெளியிட்டாலும், நிதானமான கிரிக்கெட் ரசிகர்கள் டோனி எனும் பிரமாண்டம் யார், கோஹ்லி எனும் கிரிக்கெட் வீரர் யார் என்பதை நன்றாகவே வேறுபடுத்திப் பார்க்கத் தெரிந்தவர்கள்.

எதற்கும் கோஹ்லி என்னும் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரர் ரசிகர்களின் மனதிலும், கிரிக்கெட்டிலும் நிலைத்து நிற்கவேண்டுமென்று நினைத்தால் தன்னை மிகுந்த நிதானத்துக்கு உட்படுத்திக்கொள்ளவேண்டியது மிகமிக அவசியம்.

# போக வேண்டாமே

**குமார்** சங்கக்காரா டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுபவரா? இல்லையா? என்பது இன்னும் முடிவுறாததொரு வினாவாகவே இருக்கின்றது. பாகிஸ்தான் தொடர், அது முடிவடைந்ததும் ஒகஸ்டில் நடைபெறவுள்ள இந்தியாவிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியுடன் தனது 15 வருட சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக் கொள்ளத் தீர்மானித்திருந்ததாகக் கூறப்பட்டது.

ஆனால் இப்போது சங்கா இன்னும் சிலகாலம் டெஸ்ட் போட்டிகளில் நீடிக்கக்கூடும் என்று இலங்கை அணியின் தலைவர் ஏஞ்சலோ மெத்தியூஸ் நம்புகிறார். சங்கா இன்னமும் தீர்க்கமான முடிவொன்றையும் எடுக்கவில்லை. அவர் இந்த விடயம் தொடர்பாக ஆலோசனைகளில்தான் இருக்கின்றார். மேலும் அணித் தெரிவாளர்களிடம் கலந்துரையாடிவருகிறார் என்று மெத்தியூஸ் கூறியுள்ளார்.




சங்கக்காரா அணியில் இருந்து போய்விடக்கூடாது என்பதுதான் கிரிக்கெட் ரசிகர்களின் விருப்பம். காரணம் ஒன்று கிரிக்கெட் திறமை. இரண்டாவது அவருடைய உயர்ந்த பண்பாடு. சங்கக்காரா அணியில் இருக்கிறார் என்றாலே அது இயல்பாகவே ஒரு பெருமையை அணிக்கு ஏற்படுத்திவிடும். 131 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் குவித்த ஓட்டங்கள் 12271 ஓட்டங்கள். 38 சதங்களையும் 52 அரைச்சதங்களையும் தன் கணக்கில் வைத்துள்ளார். அதுமட்டுமன்றி இரட்டைச் சதங்கள் பதினொன்றையும் இவர் வைத்திருப்பது பெரிய சாதனை. ஜாம்பவான் டொன் பிரட்மன் அடித்த இரட்டைச் சதங்கள் 12. ஒன்று மட்டும் குறைவாகவே சங்கா சற்றுப் பின் தங்கி நிற்கிறார்.

அண்மைக்காலங்களில் மூன்று ஜாம்பவான்கள் தங்கள் ஓய்வை அறிவித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த மூவரில் ஒருவர் சங்கக்கார. ஆனால் முக்கியமானதொரு அம்சம் என்னவென்றால் சங்கக்கார எந்தவகைக் கிரிக்கெட்டுக்கும் உரிய விளையாட்டுத்திறன் தகுதியை அப்படியே வைத்திருக்கிறார் என்பதுதான். எனவே சங்கா தொடர்ந்தும் சிலகாலமாவது டெஸ்ட் போட்டிகளில் விளையாடவேண்டும் என்பதே எல்லோரது விருப்பமும் ஆகும்.



- ஜோசப் கிருஷ்ணா




பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

## பெண்களை அதிகம் ஈர்ப்பது நகைகளே!


பெண்களின் வாழ்வில் நகைகள் ஒரு அங்கமாகவே மாறிவிட்டது. அழகு, ஆடம்பரம், கௌரவம், ஆகியவற்றை வெளிப்படுத்தும் கண்ணாடியாக நகைகள் விளங்குகின்றன. பாரம்பரிய நகைகள், பேஷன் நகைகள், மரம், கண்ணாடி, சனல் மற்றும் பேப்பரில் தயாரான நகைகள் என, எண்ணத்திற்கு ஏற்ப பெண்களின் விருப்பங்கள் மாறுபடும்.

செல்லும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப நகைகளை அணியவேண்டும். பட்டுப்புடவைக்கு நெக்லஸ், ஆரம் மற்றும் முத்துமாலையை அணியலாம். மாறாக மெல்லிய செயின், கண்ணாடிகளாலான நகைகளை அணிந்தால் பொருத்தமாக இருக்காது. நகைகளை பொறுத்தவரை போர்மல், கேஷுவல், ரைடல், ஈவ்னிங், ஸ்பிரிச்சுவல் என 5 வகைகளாக பிரிக்கலாம்.

போர்மல் நகைகள் ஒயிட் மெட்டல், பிளாக் மெட்டல், கனிம, சிபி, துருப்பிடிக்காத எக்கு ஆகியவையால் தயாரிக்கப்படுகிறது. மேலும், இந்நகைகளில் இரத்தினம், கிரிஸ்டல், அலங்காரக்கல் பயன்படுத்தப்படுகின்றன. போர்மல் நகைகளான நெக்லஸ், வளையல், பிரேஸ்லெட், மோதிரம், காதுவளையம் ஆகியவை திருமணம், மீட்டிங் ஆகிய சம்பிரதாயமான விழாக்களில் அணியலாம்.

உடைக்கும் பொருத்தமாக இருக்கும். கேஷுவல் நகைகள் சணல், மரம், பேப்பர் கொண்டு தயாரிக்கப்படுகிறது. தினமும் அணியக் கூடியவைகளில் கேஷுவல் நகைகளும் ஒன்று. தண்ணீரில் நனைந்தாலும் பாதிப்பு ஏற்படாது. இவற்றில் செயின், வளையல், மோதிரம் ஆகியுவற்றை கேஷுவல் நகைகளில் பொருந்தும்.

சிப்பிகளால் தயாரிக்கப்படும் நகைகளை இளம் தலைமுறையினர் பயன்படுத்தினால், வித்தியாசமான தோற்றம் கிடைக்கும். ரைடல் நகைகள் ஒயிட் மெட்டல், ஒயிட் கோல்டு, மஞ்சள் கோல்டு, வைரம், இரத்தினம் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. திருமணப்பெண் அணியக்கூடிய நகைகள் ரைடல் எனப்படும்.



## பொடுகுப் பிரச்சினைக்கான வீட்டு சிகிச்சைகள்

200 மி.லி. தண்ணீரைக் கொதிக்கவைக்கவும். அதில் ஒரு கைப்பிடி அளவு செம்பருத்தி இலையை போட்டு 2 நிமிடங்கள் கழித்து அணைத்து மூடிவைக்கவும். ஆறியதும் அந்தத் தண்ணீரில் பயத்த மாவைக் கலந்து, தலைக்குத் தேய்த்துக் குளித்தால் பொடுகுபோகும்.

வெந்தயம், நெல்லிமுள்ளி, வால்மிளகு, பிஞ்சு கடுக்காய் நான்கையும் தலா 25 கிராம் எடுத்து 100 கிராம் பயறு மற்றும் 100 கிராம் பூலாங்கிழங்கு சேர்த்து மெஷினில் அரைத்துக்கொள்ளவும். இந்தப் பொடியை தலை குளிக்க உபயோகித்துவந்தால் பொடுகு நீங்கும். வெந்தயம், நெல்லிமுள்ளி, வால்மிளகு மற்றும் பிஞ்சுக் கடுக்காயை தலா 20 கிராம் எடுத்து ஒன்றிரண்டாகப் பொடிக்கவும்.

கால் லீற்றர் நல்லெண்ணெயில் பொடித்ததைப் போட்டு தைலம் பதம் வரும்வரை காய்ச்சவும். வாரம் 2 முறை இந்தத் தைலத்தைத் தலைக்குத் தடவினால் பொடுகு மறையும். கூந்தல் பளபளப்புடன் கருமையாக வளரும். வெந்தயமும் நெல்லிமுள்ளியும் மனஅழுத்தத்தை நீக்கும்.



மருதாணி இலை, மஞ்சள் கரிசலாங்கண்ணி, வெந்தயக்கீரை மூன்றையும் தலா 1 கைப்பிடி எடுத்துப்பொடியாக நறுக்கவும். 4 நெல்லிக்காயை விதை நீக்கி சீவிக்கொள்ளவும். கால் லீற்றர் நல்லெண்ணெயை சூடாக்கி, இவற்றைச் சேர்த்து பசுமை மாறும் முன்பே அணைக்கவும். இந்த எண்ணெயை வாரம் 2 முறை தலைக்குத் தேய்த்துக் குளிக்கலாம்.



## பாலியல் கொடுமை சமூகத்தின் பங்கு என்ன?

குழந்தைகளுக்கு இழைக்கப்படும் பாலியல் கொடுமை பற்றியும் அவர்களின் உரிமை பற்றியும் நிறையத் தெரிந்து கொள்வதன்மூலம் உங்கள் குடும்பத்திலும் அக்கம்பக்கத்திலும் உள்ள குழந்தைகளை உங்களால் பாதுகாக்கமுடியும். குழந்தைகள் உங்களிடம் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்டு மனதில் இருத்துங்கள்.

பாலியல் கொடுமைகள் நடப்பதற்கு நீங்கள் எந்த வகையிலேனும் காரணமாக இருக்கிறீர்களா என்று சிந்தித்துப் பாருங்கள். குழந்தைகள் எங்கேயும் எப்போதும் பத்திரமாக உணர்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்று அறிவுறுத்துங்கள். உங்களுடன் பணியாற்றுபவர்களோடும், நண்பர்களோடும், உறவினர்களோடும் மற்ற எல்லோரோடும் பேசுங்கள்.

குழந்தைக்கு இழைக்கப்படும் கொடுமை பற்றிய மௌனத்தைக் கலையுங்கள். குழந்தைகளுக்கு அறிவுறுத்துவதற்காகவும் கொடுமைகள் நடைபெறாமல் தடுப்பதற்காகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குக் கைகொடுங்கள். பெரும்பாலும் கொடுமை நடந்த பிறகே அது வெளியே தெரியவருகிறது. குழந்தைகள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வது எப்படி என்று கற்றுக் கொடுக்கும்படியும் அவர்களைப் பாதுகாக்கும்படியான திட்டங்களை மேற்கொள்ளும்படியும் பள்ளிகளிடம் எடுத்துக்கூறுங்கள்.

ஒரு குழந்தை கொடுமைக்கு ஆளாவதாகத் தெரியவந்தால் அதற்கு உதவி அளியுங்கள். உடனே தொழில்முறையிலான உதவியை நாடுங்கள். குழந்தைகளுக்கு இழைக்கப்படும் பாலியல் கொடுமைகளுக்கு எதிராகச் செயற்படும் நிறுவனங்களின் நடவடிக்கைகளில் நீங்களாக முன்வந்து பங்குகொள்ளுங்கள்.

## இறால் வடை

### வாரம் ஒரு சமையல்



**தேவையானவை**

இறால் - 10, உடைத்த கடலை - ஒரு ஆழாக்கு, பச்சை மிளகாய் - 5, வெங்காயம் - 200 கிராம், சோம்பு - 1 தேக்கரண்டி (5 கிராம்), பூண்டு - 5 பல், இஞ்சி - சிறிய துண்டு, கறிவேப்பிலை - 1 மேசைக்கரண்டி, கடலை எண்ணெய் - 400 கிராம், மஞ்சள்தூள் - 1/4 தேக்கரண்டி, உப்பு-தேவையான அளவு.

**செய்முறை:**

முதலில் இறாலை உரித்து சுத்தம் செய்து அதில் பாதியளவு உப்பையும், மஞ்சள் பொடியையும் கலந்து 1 கோப்பை தண்ணீரில் வேகவைக்கவும். பின்னர் வேகவைத்த இறாலை நன்றாக அரைத்துக் கொள்ளவும். மேலும் உடைத்த கடலையை சிறிதளவு தண்ணீர் சேர்த்து அரைத்துக்கொள்ளவும். வெங்காயத்தையும், பச்சை மிளகாயையும் பொடியாக நறுக்கிக்கொள்ளவும். பின் இஞ்சி, பூண்டு, சோம்பு ஆகியவற்றை நசுக்கிக் கொள்ளவேண்டும்.

அடுப்பில் வாணலியை வைத்து, எண்ணெய்விட்டு, நறுக்கி வைத்துள்ள வெங்காயம், பச்சை மிளகாய், நசுக்கி வைத்துள்ள மசாலா ஆகியவற்றை அதில் போட்டு சிவக்கும்வரை வதக்கவேண்டும்.



வெங்காயம் சிவந்து மணம்வந்தவுடன், அரைத்து வைத்துள்ள இறாலையும் உடைத்த கடலையையும் அதில் சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாகப் பிசைந்து கொள்ளவேண்டும். அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் விட்டுக் காய்ந்ததும், பிசைந்து வைத்துள்ளதை சிறு வடைகளாகத் தட்டி எண்ணெயில் போட்டு சிவக்கவைத்து எடுத்துவிடவேண்டும். இறால் வடை தயார்.

**250/= பரிசு** வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-477

கேள்வி: பெனசீர் பூட்டோ பிரதமராக பதவிவகித்த காலம்?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 12. 07. 2015

பரிசுப் போட்டி இல :- 475 இற்கான விடை :- விவேகானந்தர்.

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :- த.யோகராசா, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 477
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

477

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
..................
கையொப்பம் : ..................




## உசுப்பேற்றி வாக்குப் பறிக்கலாகுமோ?

மொக்கன் கேட்கிறான்

கூட்டமைப்புக்காரர் அரசாங்கத்திட்ட உதவிகளைப் பெற்றிருக்கினம் எண்டு விக்கி ஐயா சொல்லியிருந்தார். அதுக்கு மாவை ஐயா விளக்கம் கேட்டிருந்தார். அதுக்கு விக்கி ஐயா பதிலும் குடுத்திருக்கிறார். இது எல்லாத்தையும் பாக்கேக்கிள்ள சனத்துக்கு ஒண்டும் விளங்கேல்ல. இவை எல்லாரும் ஒரு கட்சிக்காரரோ எண்டு சனம் ஐமிச்சப்படுதுகள். உண்மையான மனஒற்றுமை இருந்தால் உள்ளுக்குள்ளாலேயே கேட்டுப் பிரச்சினையை முடிச்சிருக்கலாம். வேற வேற கட்சிக்காரர்போல இவை நடக்கிறதப் பார்த்து சனங்கள் குழம்புதுகள். எல்லா உதவியும் பதவியை நாடித்தான் எண்டு பரவலா சனம் கதைக்குது. ஆட்டம் கண்டுகொண்டிருக்கிற சுரேஸ் தம்பி தன்னை பலப்படுத்திக்கொள்ளுறதுக்கு எடுக்கிற முயற்சிதான் இது எண்டும் தெரியுது.

மாகாணசபையை அந்தக் கட்சிப் பெரியவையே மதிக்கேல்ல எண்டால் வேற ஆர் மதிக்கப்போகினம். ஒரு ஒண்டுபட்ட செயற்றிட்டம் இல்லையெண்டு பக்கத்து வீட்டுப் பெரியவரும் சொல்லுறார். இப்ப உள்ளூரில பிரபாகரனைத் தூக்கிப் பிடிச்சுக் கொண்டு நிக்கிறவர் எங்கட சிறீதரன் ஐயாதான். அவரைப் பெரிய அவதாரம் எண்ட மாதிரி எண்ணி அவர் நடக்கிறார். பிரபாகரன்ர ஒரு பழைய விஷயம் ஒண்டை இண்டைக்கு மொக்கன் சொல்லப்போறான். ஏனென்டால் அவரைப் பற்றி சிறீதரன் ஐயா மட்டுமல்ல அவருக்கு இண்டைக்கும் கொடி பிடிக்கிற கூட்டமும் அறியவேணும். இண்டைக்கு 35 வருஷத்துக்கு முந்தி புலிகள் இயக்கம் இரண்டாப் பிளந்தது.



உமா மகேஸ்வரன், கண்ணன், சுந்தரம் போன்ற முக்கிய புலிகளின் புள்ளிகள் பிரிஞ்சுபோட்டினம். எஞ்சி இருந்தது ஒரு கொஞ்சப்பேரே. அதுவும் வடமராட்சிக் கூட்டம்தான். வடமராட்சிக்கு வெளியில செல்லக்கிளி அம்மா, அவ்றோ ராகவன் எண்டு ஒண்டு இரண்டு பேர்தான் பிரபாகரனுக்கு ஆதரவா நிண்டினம். இந்தநிலையில மனம் குழம்பிய பிரபாகரன் இயக்கத்தின்ர சொத்தான ஒரேயொரு கைத்துப்பாக்கியை எறிஞ்சுபோட்டு வீட்டுக்கு போட்டார். புத்தி கலங்கியபடியே அவர் தொடர்ந்தும் இருந்தார். இந்த நிலையில் புலிகளுக்கு ஆர் தலைவர் எண்ட பிரச்சினை வந்துட்டுது. அப்ப மாத்தையாவும் மோகன் எண்டு சொல்லப்பட்ட கலாபதியும் ஒரு புதிய தலைவரை தெரிஞ்சு எடுக்கவேணும் எண்டு முயற்சி எடுத்தினம். இந்த நிலையில சிலற்ற முயற்சியால புத்தி கலங்கிப்போய் இருந்த பிரபாகரனை ரெலோ தங்கண்ணா கூப்பிட்டு தன்னோட வைச்சு அவரைக் குணப்படுத்திவிட்டார்.

இந்த இடைப்பட்ட காலத்தில மாத்தையாதான் புலிகளை வழிநடத்தினார். புலிகள் எண்டு சொல்லேக்க எண்ணி ஒரு 10, 15 பேர்தான் இருந்தவை. அப்ப பிரபாகரனை எல்லாரும் தம்பி எண்டுதான் கூப்பிடுவினம். தம்பியும் ஒரு 3 மாதம் புலிகள் உறுப்பினர் எண்ட பதவியிலிருந்து நீங்கித்தான் இருந்தவர். தங்கண்ணா இல்லையெண்டால் தம்பின்ர அரசியல் சரித்திரம் முடிஞ்சமாதிரித்தான் போயிருக்கும். இப்படியானவரை போய் பிறவிப் பிறப்பெடுத்தவர் எண்டோ அவதாரப் புருசர் எண்டோ சொல்லிறது சரியில்லை எண்டுதான் மொக்கன் இண்டைக்கும் சொல்லுறான். எங்கட இனத்தின்ர சரித்திரத்தில தம்பிக்கும் ஒரு ஆதிக்கக் காலகட்டம் இருந்தது உண்மைதான். சிலதைச் சாதிச்சதும் உண்மைதான். ஆனால் எல்லாம் முள்ளிவாய்க்கால் பெரிய பாதிப்பாய் முடிஞ்சுது. வெறும் வேதனைதான் மிஞ்சிச்சுது.

தம்பி பிரபாகரன் தனித்தமிழன் இல்லை எண்டதையும் மொக்கன் வெளிப்படுத்தப் போறான். திருவேங்கடம் வேலுப்பிள்ளை எண்ட மலையாளிக்கும் பார்வதி அம்பாள் எண்ட வல்வெட்டித்துறை தமிழச்சிக்கும் பிறந்தவர்தான். தம்பி பிரபாகரன் பார்க்கப் போனா அவரும் கலப்புத்தான். இதில ஒரு குறையும் இல்லை எண்டாலும் தனித்தமிழன் எண்டு சொல்லிக்கொண்டு திரியிறவைக்கு இந்த விஷயம் தெரியவேணும் எண்டுதான் மொக்கன் சொல்லுறான்.

இனம் இரத்தம் எண்டு சொல்லிறது ஒரு அளவுக்குத்தான் உண்மையா இருக்கும். தமிழனைத் தமிழன் ஆளிறது எண்டது வெறும் பொய். தமிழ்நாட்டில அண்ணாத்துரை ஆட்சிக்குப் பிறகு எம்.ஜி.ஆர் தான் ஆட்சியைப் பிடிச்சார். அவர் ஒரு முழு மலையாளி தமிழ் கலப்பும் இல்லை. இண்டைக்கு ஆட்சி செய்யிற ஜெயலலிதா அம்மையாரும் ஒரு தெலுங்குப் பிராமணத்தி. தமிழனை வேற ஆக்கள் ஆளிறதுதான் தமிழன்ர தலை விதி. இதையெல்லாம் மெல்லமா மறைச்சுப்போட்டு எங்கட தமிழ் இரத்தம், இரத்தத்தின் இரத்தம், சொந்தத்தின் சொந்தம் எண்டெல்லாம் எங்களுக்குக் கதைவிடுகினமாம். கதை இனி இதெல்லாம் பெருசா எடுபடாது. சனம் கொஞ்சம் கொஞ்சம் தெரிஞ்சுகொண்டு வந்திட்டுதுகள். ஆண்ட தமிழன் மீண்டும் ஆழ நினைப்பதில் என்ன தவறு எண்டு கேட்கிறவைக்கு ஆர் இங்க சுத்தமான தமிழன் எண்டு மொக்கன் கேட்கிறான். மொக்கியும் கேட்கிறாள். இனி வீரவசனம் பேசிக்கொண்டு எல்லாரும் வெளிக்கிட்டு வருவினம். எங்கட இனம், எங்கட சாதி நிமிர்ந்து நிக்கவேணும் எண்டு சொல்லி எங்கள உசுப்பேத்தி வழக்கம் போல வாக்குப் பறிக்க வருவினம். இதில சிறிதரன் ஐயாதான் மும்மூரமா முன்னுக்கு நிப்பார்.

மொக்கனுக்கு அப்பு, ஆத்த சொன்ன பழமொழி நினைவுக்குவருகுது. "துள்ளாதே துள்ளாதே ஆட்டுக்குட்டி என் கையில் இருக்குது சூரிக்கத்தி" இந்த மாதிரி தான் இந்த முறை சனம் தங்கட வேலையைக் காட்டப்பாக்குதுகள். இவ்வளவு காலம்விட்ட புலுடா இந்த முறை வாய்க்காது. இண்டைக்கு மொக்கன் சொன்ன விஷயங்கள் எதுவும் சரியில்லை எண்டால் அதை யார் எண்டாலும் முன்வந்து சொல்லட்டும் எண்டு மொக்கன் கேட்கிறான். மொக்கியும் கேட்கிறாள்.


# புவியின் விநோதமான திரவம்?

புவியில் உள்ள திரவங்களிலேயே நீரின் மூலக்கூறு வாய்ப்பாடு மட்டும்தான், நமது அன்றாட வாழ்க்கையின் மொழியில் நுழைந்திருக்கிறது. H2O என்பதில் என்னென்ன இருக்கிறது என்பது பற்றித் தெரியவில்லை என்றாலும், H2O என்றால் என்ன என்று எல்லோருக்கும் தெரியும். நீர் என்பது மிகவும் சாதாரணமான விஷயம்போல் தெரிந்தாலும், உண்மையில் அப்படியல்ல.

எல்லா விதிகளையும் உடைக்கும் இயல்புடையது நீர். திரவங்கள் என்றால் என்ன என்பதை விவரிப்பதற்கான பெரிய வரையறையை 19ஆம் நூற்றாண்டிலிருந்து வேதியியலாளர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நீரின் விநோதமான பண்புகளை விளக்குவதில், இந்த வரையறைகள் எல்லாம் பெரும்பாலும் பொய்த்தே போகின்றன.

ஒரு பானத்தில் ஐஸ்கட்டியைப் போடும்போது என்ன நிகழ்கிறது என்பதில்தான், நீரின் விநோதமான இயல்பு அடங்கியிருக்கிறது. இதை ஒரு கணம் யோசித்துப்பாருங்கள்: உங்கள் முன்னே ஒரு திடப்பொருள் இருக்கிறது. அது தன்னுடைய திரவ நிலையின் மீதே மிதக்கிறது! ஆனால், திடமெழுகு திரவமெழுகில் மிதக்காது. உருக்கிய வெண்ணெயில் வெண்ணெய்க் கட்டி மிதக்காது. எரிமலையிலிருந்து பீறிட்டுவரும் எரிமலைக் குழம்பில் கற்கள் மிதக்காது.

உறைய வைக்கப்படும்போது நீர் விரிவடைவதால், ஐஸ்கட்டிகள் மிதக்கின்றன. குளிர்சாதனப் பெட்டியின் உறைநிலைப் பெட்டியில்



ஓர் இரவுமுழுவதும் சோடாவை விட்டுவைத்தால், அதனால் ஏற்படும் விரிவு எவ்வளவு சக்திமிக்கது என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம்: கண்ணாடியையே சுக்குநூறாகச் சிதறடித்துவிடும்.

நீரின் இந்த இயல்பு கொஞ்சம் விசித்திரமாகவோ, முக்கியமற்றதாகவோ தோன்றலாம். ஆனால், நீரின் எண்ணற்ற விநோதங்களுள் ஒன்றான இந்த விசித்திர இயல்புதான், நமது கோளையும் அதிலுள்ள உயிர்வாழ்க்கையையும் வடிவமைத்தது.

யுகம்யுகமாக நிகழ்ந்த உறைதல், உருகுதல் என்ற தொடர் நிகழ்வுகள் காரணமாகப் பெரும் பாறைகள் வழியாக நீர் துளைத்துக்கொண்டு வெளியேறியிருக்கிறது, அந்தப் பாறைகளை இரண்டாகப் பிளந்திருக்கிறது, அவற்றைச் சுக்குநூறாகச் சிதறடித்து மண்ணாக மாற்றியிருக்கிறது. நமது பானங்களில் மட்டும் பனிக்கட்டிகள் மிதக்கவில்லை, நமது பெருங்கடல்களில் பனிக்கட்டிக் கடல்களும் (sea ice) பளபளக்கும் பனிப்பாளங்களும் மிதந்துகொண்டிருக்கின்றன.

உறைந்த ஏரிகளிலும் ஆறுகளிலும் உறைபனி சும்மா அலங்காரப் பொருள்போல இருப்பதில்லை. கீழே இருக்கும் நீரின் வெப்பநிலையைப் பாதுகாத்து, மேற்பரப்பின் வெப்பநிலையைவிட சில டிகிரி அதிகமாக வைத்திருக்கிறது, கடும் குளிர்காலத்திலும்கூட. 4 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில்தான், நீர் அதன் அதிகபட்ச அடர்த்தியைக் கொண்டிருக்கும். ஆகவே, அந்த வெப்பநிலையில் ஏரி, ஆறு போன்றவற்றின்கீழ் பரப்புக்கு நீர் போய்விடும்.

நீர்நிலைகள் மேலிருந்து கீழாக உறைவதால், நீர்நிலையில் வாழும் மீன்களும் தாவரங்களும் மற்றும் பல உயிரினங்களும் கடும் குளிர்காலங்களில் தப்பிப் பிழைப்பதற்கு, வேறு இடங்களைத் தேடிச் செல்லவேண்டியிருக்கும். இந்தக் காலகட்டத்தில் எப்படியோ எண்ணிக்கையிலும் அளவிலும் அவை பெருகிவிடுகின்றன. புவியின் காலப்போக்கில் அடுத்தடுத்து நிகழ்ந்த பனியுகங்கள், வேறு பல காலகட்டங்கள் போன்றவற்றை மீறியும் உயிரினங்கள் தப்பிப் பிழைத்ததற்கு மேற்கண்ட விநோதம்தான் காரணம்.

நீரில் உள்ள ஹைட்ரஜன் பிணைப்புகளின் முக்கியத்துவத்தைப் பற்றி இதற்கு மேலும் வலியுறுத்திச் சொல்வதென்பது கடினம். நமது உடலின் மிகக் குறுகலான இரத்தக்குழாய்களின் வழியாகவும் நீர் மூலக்கூறுகள் ஒன்றையொன்று இழுத்துக்கொண்டு செல்கின்றன என்றால், அதற்குக் காரணம் அந்தப் பிணைப்புகள்தான். பெரும்பாலும் புவியீர்ப்பு விசைக்கு எதிராகவே அவை செயற்படுகின்றன.

உடலுக்குள்ளே அவ்வளவு எளிதில் சென்றடைய முடியாத இடங்களுக்கெல்லாம் ஒட்சிசனையும் ஊட்டச்சத்துகளையும் நீர் கொண்டுசேர்ப்பது இப்படித்தான். தரையின் ஆழத்திலிருந்து நீரை உறிஞ்சி இலைகளுக்கும் கிளைகளுக்கும் அனுப்பி, சூரியஒளியில் அவற்றைச் செழிக்கவைப்பது தாவரங்களால் சாத்தியப்படுவதும் இந்த ஹைட்ரஜன் பிணைப்புகளால்தான்.

நீரின் இந்த ஒட்டும் தன்மைதான், நமது அன்றாட வாழ்வில் நாம் சாதாரணமாகக் கருதும் பல்வேறு நிகழ்வுகளைச் சாத்தியப்படுத்துகிறது. அதாவது; நம் வீடுகளில் உள்ள ரேடியேட்டர்களுக்கு நீரைச் செலுத்துவது, டப்பாவில் இருக்கும் ஒரேஞ்சு சாற்றைப் பிதுக்கிக் குடிப்பது, நமது தோட்டங்களில் உள்ள பூச்செடிகளுக்குக் குழாய் வழியாக நீரை இறைப்பதுபோன்ற எல்லாவற்றுக்கும் அந்தத் தன்மைதான் காரணம்.

நீரைக் குறுக்கமுடியாது என்பதால்தான் இவையெல்லாம் சாத்தியமாகிறது. ஏனெனில், மூலக் கூறுகளெல்லாம் ஒன்றையொன்று ஈர்த்துக்கொள்வதுடன் ஒன்றுக்கொன்று மிகவும் நெருக்கமாகவும் இருக்கின்றன. மற்ற திரவங்களில் இருப்பதைவிடவும் இந்த நெருக்கம் அதிகம். ஒன்றைக் குறுக்குவது எந்த அளவுக்குக் கடினமோ, அதேபோல் அதன் ஒரு பக்கத்தில் மட்டும் அழுத்துவதன்மூலம் அதைப் பாயவைப்பதும் மிகவும் எளிது.

வெவ்வேறு தட்பவெப்ப நிலையையும் அழுத்தத்தையும் கொண்டிருக்கும் நீரின் வெவ்வேறு பரப்புகளைத் தேடி பயணம் செய்ய வைக்கும் இயற்கைச் சூழலைக் கொண்ட உலகத்தில் நாம் வாழ்கிறோம். வேறுபட்ட அந்தத் தட்பவெப்பநிலைகளில் நீர் வெகு லாவகமாகத் திடப்பொருளாகவும் திரவமாகவும் வாயுவாகவும் மாறுகிறது. நீரை ஆராய ஆராய, அது மென்மேலும் புதிரானதாகத்தான் தோன்றுகிறது. நாம் அதிலிருந்து உருவானவர்கள் என்பதால், அதை நாம் ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். நாம் எதனால் உருவாகியிருக்கிறோமோ, அது இப்படிப்பட்ட ஒரு புதிராக இருக்கிறது என்பதே, ஒருவேளை நமக்கு வியப்பு ஏற்படக்காரணமாக இருக்கலாம்.

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் (06.07.15 முதல் 01.08.16 வரை)

ஜோதிடத்தில் பொதுவாக குருவும் சுக்கிரனும் சுபகிரகங்களாக கூறப்படுகிறார்கள். வசதி வாய்ப்புடன் வாழ்பவர்களை பார்த்து சுக்கிர திசை அடிக்கிறது என்பார்கள். சுக்கிரன் தனிமனித செல்வத்திற்கு காரகர் குரு பொது செல்வத்திற்கு காரகர். எனவே குருப்பெயர்ச்சி எல்லோராலும் எதிர்பார்க்கும் தன்மையுடையதாகிறது. குரு பகவான் கொடுக்கும் பலன்களைத் தெரிந்துகொள்வோம்.

குரு பகவான் தெய்வீக அறிவுக்கும் வேதாந்த ஞானத்திற்கும், செல்வவளத்திற்கும் பொருள் சேமிப்பிற்கும் சகல சௌபாக்கியத்திற்க்கும் புத்திர பாக்கியத்திற்கும் அன்பிற்கும் பண்பிற்கும் காரகராகவும் ஒளிபடைத்த மேதைகளையும், ஞானிகளையும் உருவாக்கு பவராகவும் தலைவணங்காத தலைமைப் பதவியைத் தந்திடுவார்.

மாபெரும் சாதனைகளைச் செய்யவைத்து மனிதனை மாணிக்கமாக திகழவைப்பார். நாட்டை ஆளவைப்பார், நல்லோருடன் சேரவைப்பார். புதுபுது உத்திகளைக்காண வைப்பார் ஆன்மீக சுகத்திற்கு காரகராகவும் திகழ்கிறார். புத்திரகாரகன் என்பதால் ஐந்தாம் வீட்டில் குரு இருந்தால் புத்திரர்களால் கஷ்டத்தையும் உருவாக்குவார்.

குரு ஜாதகத்தில் பலம் பெற்றிருந்து இவரது திசை இளமையில் வந்தால் கல்வியில் முதன்மை நிலை உண்டாகும். நடு வயதில் வந்தால் சகல பாக்கியங்களும் ஏற்படும். இறுதிப்பகுதியில் வந்தால் சந்ததிகள் செழிப்பார்கள். கோசாரத்தில் குரு இருக்கும் ஸ்தானத்திற்கு ஐந்தில் சூரியன் வரும் பொழுது வக்கிர கதி ஏற்படும். ஒன்பதில் வரும் பொழுது வக்ர நிவர்த்தி ஏற்படும். ஜாதகர் பிறக்கும்பொழுது குரு வக்கிரத்தில் இருந்தால் குரு வக்கிரம் அடையும்பொழுது அதிக நன்மைகள் ஏற்படும். பொதுவாக குரு இருக்கும் இடம் கெட்டுப்போகும். பார்க்கும் இடங்கள் பலம் பெறும். சனி இருக்கும் இடம் பலம்பெறும். பார்க்கும் இடம் கெடும். பொதுவாக ஜனன லக்கினம், சந்திரன் இருக்கும் ராசி, ஜாதகத்தில் குரு இருக்கும் இடத்தில் இருந்து 2-5-7-9-11 ஆகிய இடங்களில் கோசாரத்தில் குரு வந்தால் யோகம் தரும். பிற ஸ்தானங்களான 1-3-4-6-8-10-12 ஆகிய ஸ்தானங்களில் குரு வரும்போது தீயபலனைத் தருவார் என்பது நூல்களின் கருத்து.

இந்தாண்டு வாக்கியப் பஞ்சாங்கப்படி ஜூலை 5ஆம் திகதி குரு பகவான் கடக ராசியிலிருந்து சிம்ம ராசிக்கு பிரவேசிக்கிறார். 12 ராசிக்காரர்களுக்கும் குருப்பெயர்ச்சி பலன்களை அறிந்துகொள்வோம்.

## மேடம்



செவ்வாய் பகவானின் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் துடிப்பாகவும் மிகுந்த வீரத்துடன் செயற்படு வீர்கள். மற்றவர்களை பற்றி கவலைப்படாமல் எதிலும் முதலிடத்தை பிடிப்பது ஒன்றே உங்களின் தலையாய நோக்கமாகும். வீரமும் தைரியமும் கோபமும் ஆக்ரோஷமும் ஒருங்கே அமையப் பெற்றுள்ளவர்கள் நீங்கள். கடந்த காலத்தில் மேஷம் ராசிக்கு நான்காம் இடத்தில் கடகத்தில் இருந்த குரு அவ்வளவு நல்ல பலன்களை செய்யாவிட்டாலும் அஷ்டமச் சனியால் எந்த பாதிப்பும் இல்லாமல் காப்பாற்றினார்.

இப்போது ஐந்தாம் இடமான சிம்ம ராசியில் பெயர்ச்சியாகிவருவது நல்ல பலன்களைத் தரும் ஸ்தானமாகும். ஐந்தாம் இடமென்பது பூர்வபுண்ணியம், குலதெய்வம், குழந்தைகள், மகிழ்ச்சி, திட்டமிடுதல், கற்பனை, கலைகளில் நாட்டம், குரு உபதேசம், பக்தி, ஆகியவற்றை குறிக்கும் ஸ்தானம் ஆகும். உங்கள் ராசிக்கு ஐந்தாம் இடத்தில் புத்திரகாரகனும், தனகாரகனுமான குரு அமர்வது அதிர்ஷ்டத்தைத் தரும். திருமணமாகி பல ஆண்டுகளாக வாரிசு இல்லாமல் எதிர்பார்த்து ஏங்கியவர்களுக்கு வாரிசு உண்டாகும்.

திருமண வயதில் திருமணத்திற்காக காத்திருக்கும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் திருமண யோகம் கைகூடிவரும். குடும்பத்தில் சுபமான மங்கள காரியங்கள் நடைபெறும். வேலை தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு தகுதிக்கேற்றவாறு கௌரவமான வேலையும், பதவியில் இருப்போர்க்கு பதவி உயர்வும் விரும்பிய இடத்திற்கு பதவி உயர்வுடன் இடமாற்றம், ஊதிய உயர்வு கிடைக்கலாம். வெளிநாட்டு தொடர்புடைய உத்தியோகங்கள் பயணங்கள் அனுகூலம், ஆதாயம் தரும்.

உங்கள் ஜென்ம ராசியை குரு பார்ப்பதால் உங்கள் புகழ், அந்தஸ்து, கௌரவம். மதிப்பு, மரியாதை, உற்றார், உறவினர், நண்பர்கள் மத்தியில் உயரும். உங்கள் ராசிக்கு ஒன்பதாமிடத்தை குரு பார்ப்பதால் தெய்வ அனுகூலம் காரிய சித்தி, பூர்வீக சொத்துகள் ஆகியவற்றால் நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் ராசிக்கு பதினொன்றாம் இடத்தை குரு பார்ப்பதால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். செய்யும் தொழிலில் இலாபம் அதிகரிக்கும். அஷ்டமத்து சனி நடப்பதால் எல்லா விஷயங்களிலும் கவனமாக செயல்பட வேண்டும். எல்லா செயலையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது.

திருமணம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் இறங்கும்பொழுது திருமணப் பொருத்தம் பார்க்கும்பொழுது ஜாதகம், தசாபுத்தி ஆகியவற்றை நன்குபார்த்து திருமண முயற்சி செய்யவேண்டும். குருப்பெயர்ச்சி யோகத்தையும், அதிர்ஷ்டத்தையும் கொடுத்தாலும் அஷ்டமத்து சனி அலைச்சல், மன உளைச்சல், சங்கடங்களை கொடுத்து காரிய வெற்றியை கொடுக்கும். பொதுவாக இந்த குருப்பெயர்ச்சியினால் நன்மையான பலன்களை எதிர்பார்க்கலாம்.

## ரிஷபம்



சுக்கிரன் பகவான் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் மிகவும் மென்மையானவர்களாகவும் மற்றவர்களை அனுசரித்து நடக்கக் கூடியவர்களாகவும், வசீகரப் பேச்சினால் பிறரை கவரக் கூடியவர்களாகவும் இருப்பீர்கள். நினைத்த காரியத்தை செம்மையாக முடிக்கும் ஆற்றல் உள்ளவர்கள் நீங்கள்.



சூழ்நிலைக்கேற்றவாறு தங்களை மாற்றி கொள்ளும் பாங்குடைய இன்பமான வாழ்க்கை வாழும் ரிஷப ராசி அன்பர்களே. இதுவரை மூன்றாமிடத்தில் குரு இருந்த பொழுது துரியோதனன் படைமாண்டதும் என்ற நிலை நீடிக்குமா? அல்லது விமோசனம் கிட்டுமா என்ற ஏக்கம்தான். ராசிக்கு நான்காமிடத்தில் குருவந்தபோது தருமபுத்திரர் வனவாசம்போனதும் என்பது பாடல். அதுபோல நடக்குமா என்றால் அப்படியில்லை.

உங்கள் ராசி நாதன் சுக்கிரனுக்கு பகை கிரகமான குரு பகவான் உங்கள் ராசிக்கு எட்டுக்கும் பதினொன்றிற்கும் அதிபதியான குரு பகவான் நான்காமிடத்தில் சஞ்சரிக்கும் வாகனச் செலவுகள் அதிகரிக்கும். தன் வீட்டில் வசிக்கமுடியாமல் வெளியூர் சென்று வசிக்கநேரிடும். கல்வியில் தடை வரக்கூடும். உற்றார் உறவினர் பகை வரும். குருசிம்மம் ராசியில் இருந்து ஐந்தாம் பார்வையாக எட்டாம் வீட்டை பார்ப்பதால் உடல் உபாதைகள் விரைவில் குணமாகும்.

சிம்மத்தில் இருந்து ஏழாம் பார்வையாக பத்தாம் பாவத்தை பார்ப்பதால் முடங்கிக் கிடந்த தொழில் வளர்ச்சி பெறும் உத்தியோகத்தில பதவி உயர்வு கிடைக்கும். சிம்மம் ராசியில் இருந்து ஒன்பதாம் பார்வையாக பன்னிரெண்டாம் இடத்தை பார்ப்பதால் குடும்பத்தில் தடைப்பட்டு நின்ற சுபகாரியங்கள் நடைபெறும். உங்கள் ராசிக்கு பாக்கியாதிபதி சனி பகவான் உங்கள் ஜென்ம ராசியைப் பார்ப்பதால் கௌரவத்துக்கு பங்கம் ஏற்படாது. கண்ட சனி நடப்பதால் எல்லா விசயங்களிலும் சற்று கவனமாக நடப்பது நன்று.

## மிதுனம்



புதன் பகவான் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் புத்திக் கூர்மை உள்ளவர்களாகவும், சகிப்பு தன்மையும், பொறுமையும் உடையவர்களாக வும் எல்லா காரியங்களையும் திறமையாக செய்துமுடிக்கும். ஆற்றல் பெற்றவர்களாகவும் இருப்பீர்கள். உங்கள் ராசிக்கு களத்திரம் மற்றும் ஜீவன ஸ்தான அதிபதியான குரு இப்பொழுது மூன்றாம் இடத்திற்கு மாறி உள்ளார். தீதிலாதொரு மூன்றில் துரியோதனன் படைமாண்டது என்பது பாடல். உங்கள் ராசிக்கு பாதகாதிபதி மற்றும் கேந்திராதிபதியான குரு பகவான் மூன்றாம் இடத்தில் மறைவதால் பெரிய பாதிப்பை தரமாட்டார். இதுவரை இரண்டில் இருந்த குரு பொருளாதாரத்தில் பெரிய மாற்றங்களை கொடுத்திருப்பார். மூன்றில் வரும் குருவும் நல்ல பலன்களைத் தருவார் என எதிர்பார்க்கலாம்.

குரு தனது ஐந்தாம் பார்வையாக ஏழாம் இடத்தை பார்ப்பதால் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடைபெறும், பிரிந்துபோன நண்பர்கள் தேடிவருவார்கள், உத்தியோக வகையில் புதிய ஒப்பந்தங்கள் தேடிவரும். உங்கள் சகோதர சகோதரிகளுக்கு புத்திர பாக்கியம் ஏற்படும். தந்தைமூலமாக இலாபம் வந்துசேரும்.

குரு தனது ஏழாம் பார்வையாக ஒன்பதாம்.இடத்தைப் பார்ப்பதால் தந்தையாருக்கு கீர்த்தியும், புகழும். குரு ஒன்பதாம் பார்வையாக பதினொன்றாம் இடத்தை பார்ப்பதால் தொழில் முன்னேற்றமும் நல்ல இலாபமும் உண்டாகும். திருமண வயதில் உள்ள உங்கள் குழந்தைகளுக்கு திருமணம் நிச்சயமாகும். திருமணமான குழந்தையில்லாத தம்பதிகளுக்கு புத்திர பாக்கியம் ஏற்படும்.

## கடகம்



சந்திரனின் ஆதிக்கம் பெற்றவர்கள் நீங்கள் உங்கள் ராசிநாதன் சந்திரன் பதினைந்து நாட்கள் வளர்பிறையாகவும், பதினைந்து நாட்கள் தேய்பிறையாகவும் உலவிவருவார். விருச்சிகத்திலிருந்து ரிஷபத்தை நோக்கி போகும்பொழுது உங்கள் மனநிலை சீராகவும் சிறப்பாகவும் செயற்படும். ரிஷபத்தில் இருந்து,விருச்சிகத்தை நோக்கி போகும் பொழுது இனம்புரியாத குழப்பம் சங்கடம் தோல்வி பயம் உங்களை வாட்டும். இதுவரை உங்கள் ஜென்மராசி யில் குரு பகவான் தேவை இல்லாத மன உளைச்சல், அவமானம் சங்கடங்களை கொடுத்தார்.

இப்பொழுது தனம், வாக்கு, குடும்ப ஸ்தானத்தில் அதாவது இரண்டாம் இடத்தில் சஞ்சரிக்க போகிறார். தன ஸ்தானத்தில் தனகாரகன் குரு சஞ்சாரம் செய்வதால் பொருளாதாரரீதியாக தாங்கள் அனுபவித்துவந்த கஷ்டங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல விலகி விடும். வாக்கு, நாணயம், சொல்கின்ற சொல் பலிதமாகும், பணவரவு திரு[illegible] தரும், பொருளாதரத்தில் முன்னே[illegible] உயர்ந்து காணப்படும். உயர்ப்த[illegible] தேடிவரும். அனைவருடனும் நல்லுற[illegible] மேம்படும். உங்கள் ராசிக்கு பாவத்தை [illegible] பார்ப்பதால் எதிரிகள் தொல்லை நீங்கு[illegible] இல்லாத நோய்க்கு வைத்தியம் பார்த்தவருக்கு எல்லாம் நோய் நொடி நீங்கும்.

6ம் பாவம் 10 பாவத்திற்கு 9ம் பாவமாக வருவதால் தொழிலில் இருந்த போட்டி பொறாமைகள் நீங்கும் தொழில் அபிவிருத்தி ஏற்படும். அசையா சொத்துகள் வீடு, மனை வாங்கும் வாய்ப்புகள் உண்டாகும். 7ம் பார்வையாக 8ம் இடத்தை பார்ப்பதால் எதிரிகளின் போட்டி பொறாமைகள் தொல்லைகள் நீங்கும். மனைவிமூலமாக தனவரவு வரும். வழக்குகளில் வெற்றி கிட்டும். சுபகாரியங்களுக்கு சுபசெலவுகள் ஏற்படும். தனது 9ம் பார்வையாக 10ம் மிடத்தை பார்ப்பதால் வேலை கிடைக்காதவர்களுக்கு புதிய வேலை கிடைக்கும், பதவி உயர்வும் வெகுமதியும் கிட்டும். தொழில் அபிவிருத்தி ஏற்படும்.

(தொடரும்...)



Dr. சி.யமுனாநந்தா

# நீர் வெறுப்பு நோய்

**நீர் வெறுப்பு நோய் எமது சமூகத்தில் உருப்பெருக்கம் அடையும் உயிர்க்கொல்லியாக மாறுபட்ட பரிமாணத்தில் உருவெடுத்துள்ளது. பொதுவான சுகநலப் பிரச்சினையான நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளின் தீண்டல்களின் பாதிப்பினை இக்கட்டுரை விளங்குகின்றது.**

### அறிமுகம்:

நீர் வெறுப்பு நோயினை விலங்குகளின் விசர் நோய் என்றும் ஆங்கிலத்தில் ரேபிஸ் (Rabies) என்றும் அழைப்பர். ஒற்றைச் சங்கிலி RNA வைரசான Lyassa virus இனால் ஏற்படுகின்றது. இது நரம்பு இழையங்களில் அதிக நாட்டமுடையது. நரம்பு இழையங்களிலும் உமிழ்நீர்ச் சுரப்பிகளிலும் நோய்க்கிருமிகள் பெருகுகின்றன.

உலகில ஆண்டுதோறும் 55,000 பேர் நீர் வெறுப்பு நோயினால் இறக்கின்றனர். இதில் 20,000 பேர் இந்தியாவிலும் 25,000 பேர் ஆபிரிக்காவிலும் அடங்குகின்றனர். இலங்கையில் கடந்த காலங்களில், வருடத்தில் 50 பேர் நீர் வெறுப்பு நோயினால் இறந்துள்ளனர். நீர் வெறுப்பு நோயினால் பாதிக்கப்படுபவர்களில் 30 - 60 வீதம். ஆனால் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களாகக் காணப்படுகின்றனர்.

நீர் வெறுப்பு நோயினை விலங்கின் விசர் நோய் என்றும் ஆங்கிலத்தில் ரேபிஸ் (Rabies) என்றும் அழைப்பர்.

உலக சுகார நிறுவனம் உலகில் நீர் வெறுப்பு நோயினை 2020 ஆம் ஆண்டளவில் முற்றாக இல்லாது செய்யத் திடசங்கற்பம் கொண்டுள்ளது.

### நோய் ஏற்படும் விதம்

வைரசு காயத்துக்கு அருகில் உள்ள தசைக்கலங்களில் பெருகும். அதன்பின் நரம்புக்கல முடிவிடங்கில் உட்புகுந்து நரம்புக்கல மூளையினூடாக முள்ளந்தண்டுக்கும் அடுத்து மூளைக்கும் செல்லும். நரம்புத் தொகுதியின் அவை மேலும் பெருகி அங்கிருந்து உமிழ்நீர்ச்சுரப்பி, சுவாசப்பை, சிறுநீரகம் மற்றும் ஏனைய அங்கங்களிற்கு தன்னியக்க நரம்புத் தொகுதியூடாகக் கடத்தப்படுகின்றது.

### நோயின் தன்மை

நோயரும்பு காலம் சில வாரங்களிலிருந்து பல வருடங்களாக அமையலாம். சராசரியாக 1-3 மாதங்கள் பொதுவாக தலை, கழுத்து, முகம் போன்ற பகுதியில் ஏற்படுகின்ற காயங்கள் குறைந்த நோயரும்பு காலத்தினைக் கொண்டது. இரண்டு வகையான நீர்வெறுப்பு நோய் நிலைகள் மனிதனில் ஏற்படலாம்.



#### 1. கோரமான நீர் வெறுப்பு நோய்

இதன் ஒரே ஒரு அறிகுறி, கடித்த இடத்தில் நோவும், கூசுந்தன்மையும், கடித்த காயத்திற்குக் கிட்டவாகவும் காணப்படும். 10 நாட்களிற்குப் பின் பதகளிப்பு, கோபப்படல், சோர்வு என்பன ஏற்படும். அசாராரண நடத்தைகளைக் காண்பிப்பர். தசைகள் செயற்படும் தன்மை மாறும். ஒலி, வெளிச்சம் என்பவற்றுக்கு அதிக நரம்புக்கடத்தல் நடைபெறும். 50 வீதம் நோயில் நீர் வெறுப்பு நிலை ஏற்படும். சாப்பிட அல்லது நீரருந்த முற்படும்போது தொண்டைத் தசைகள் சுருங்கும். காற்று வீசுவதற்கும் பயம், வலிப்பு ஏற்படும், சுவாச செயலிழப்பு ஏற்படும். இதய செயலிழப்பு மூலமே 10 - 14 நாட்களில் இறப்பு ஏற்படும்.

#### 2. அமைதியான விலங்கின் விசர் நோய்

தசைகள் செயலிழக்கும். நோயுள்ள வெளவால் கடிப்பதால் ஏற்படும்.

#### நீர் வெறுப்பு நோய் ஏற்படின் நோயாளியின் பராமரிப்பு

நீர் வெறுப்பு நோய் நரம்புத் தொகுதியைத்தாக்கும் நோயாகும். நோய் ஏற்படின் இறப்பினைத் தவிர்க்கமுடியாது. நோயாளிக்கு ஆறுதல் சிகிச்சையே வழங்கப்படும். அமைதியான, இருளான அறையில் நோயாளியைப் பராமரிப்பர். பாதிக்கப்பட்ட நோயாளியின் உறவினர்களுக்கு உளவளத்துணை வழங்கல் வேண்டும்.

(தொடரும்...)

## குண்டாகும் குழந்தைகளே ஜாக்கிரதை!

கொழுகொழு குழந்தைகள் எப்போதும் கொஞ்சலுக்கு உரியவர்கள். கொழுகொழு குழந்தைகள் தான் ஆரோக்கியமானவர்கள் என்கிற எண்ணம் பலருக்கும் இன்றும் இருக்கிறது. குழந்தைப் பருவத்தில் அவர்களைக் கொஞ்சி, செல்லப் பெயர்கள் வைத்து ஆராதிக்கிற பெற்றோர், குழந்தைகள் 10 வயதைக் கடக்கும்போது கலங்கிப்போகிறார்கள். பள்ளிவிட்டு வீட்டுக்கு சந்தோஷமாக வரவேண்டிய குழந்தை... கண்ணீர் மல்க, கவலையோடு, மனஉளைச்சலுடன் வீடு திரும்புவதையும், தன்னை எல்லோரும் "குண்டு கத்தரிக்கா, தர்பூசணி, நீர்யானை" என பல பட்டப் பெயர்கள் வைத்து கூப்பிடுவதையும் சொல்லி அழும். பள்ளி செல்ல அடம் பிடிக்கும். அது, பெற்றோராகிய நீங்கள் துடிதுடித்துப்போவது நீங்கள் மட்டுமே உணரக்கூடிய மாபெரும் வலி.

சரி! இதை ஆரம்பத்திலேயே பெற்றோர் எப்படி தடுத்து நிறுத்த முடியும்? அதற்கு என்ன வழிகளை பின்பற்றவேண்டும்? இதற்காக விஞ்ஞான கூடத்திற்கோ அல்லது டாக்டரிடமோ சென்று BMI (Body Mass Index) பார்த்து, நம்பர்களை கூட்டிக் கழிக்கவேண்டிய அவசியமெல்லாம் தேவையில்லை. குழந்தைகளைக் கூர்ந்து கண்காணிப்பதே முக்கியம்.

**உங்கள் குழந்தை...**

பம்பரம்போல சுழன்று, துறுதுறுவென, சுறுசுறுப்பாக இல்லையா?, சிறிய தூரத்தைக்கூட ஓடமுடியாமல் அவதிப்படுகிறதா?, துள்ளி விளையாடி, குதிக்க முடியவில்லையா?

உங்கள் குழந்தை குண்டாகிக் கொண்டு டைப் 2 நீரிழிவையும் ஒபிசிட்டி எனப்படுகிற பருமன் பிரசசினையையும் ஏற்றுக்கொள்ளும் படிக்கட்டுக்களில் ஏறத் தொடங்கி விட்டார்கள் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.


தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

நாளிதழ்

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்தும்

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

புலமைப் பரிசில் மற்றும் 3 ஆம் 4 ஆம் தர மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

புது அம்சங்கள்...
புது மாற்றம்...
புதுப் பொலிவு...
புதுச் சுவை...
புது விலை...

கல்விமுரசு
ஐந்தாம் பக்கம்
வெள்ளிக்கிழமைக் கொசிப்பு
ஊரும் உலகமும்
வெளிவாயன் சொல்லுவது
சிறுவர் முரசு
வியாழன் வினோதம்
பதிவிறக்கப் பெட்டகம்
சேகரம்
சனிக்கிழமை காரம்
நாற்சந்தி
பரிசுப் போட்டிகள்
மாண்புறு மாதர்
மருத்துவம்
செவ்வாய் சித்திரம்
இலக்கியம்
விளையாட்டு உலகம்



# க்யூகோவின் மகள்

**கா**தலுக்காகத் தன்னை அழித்துக்கொண்ட தேவதாஸைத் தான் நமக்குத் தெரியும், தான் காதலித்தவனை அடைவதற்காக தன் அழகினைச் சிதைத்துக் கொண்டு, காதலன் செல்லும் ஊர் ஊராக மறைந்திருந்து பின்தொடர்ந்து, அவமானங்களுக்கு உள்ளாகி காதலில் தோற்றுப்போய், மனச்சிதைவு ஏற்பட்டு வாழ்நாள்முழுவதும் மனநலக் காப்பகத்தில் வாழ்ந்து மடிந்த அடேலைப் பற்றி நமக்கு எதுவும் தெரியாது.

அடேல், பிரெஞ்சு இலக்கியத்தின் மிகப் புகழ்பெற்ற எழுத்தாளர் விக்டர் க்யூகோவின் மகள், இவளின் காதல் துயரம் க்யூகோவின் எல்லா புனைவுகளையும்விட விசித்திரமானது, அடேலின் காதலைப் பற்றி செய்திகள், நாட்குறிப்புகள், கடிதங்கள் வழியாக வெளியாகியுள்ளது. The Story of Adele H., என இவளைப் பற்றி த்ரூபா ஒரு திரைப்படத்தை இயக்கியிருக்கிறார்.

அடேலைத் தெரிந்துகொள்வதற்கு முன்பு விக்டர் க்யூகோவிற்கு இருந்த புகழையும் பெயரையும் தெரிந்துகொள்ள வேண்டும். க்யூகோவின்லே மிசரபிள்ஸ் நாவல் (Les Miserables) தமிழில் ஏழை படும்பாடு என்றபெயரில் நாகையா நடித்து ராம்நாத் இயக்கி வெளியாகியிருக்கிறது. இந்தியில் குந்தன் என்றபெயரில் சோராப் மோடி இயக்கியிருக்கிறார். தமிழிலே இந்த நாவலை தழுவி ஞானஒளி என்றபெயரில் சிவாஜி நடித்த படமும் வெளியாகியுள்ளது. தமிழில் இந்த நாவலை ச.து.சு. யோகியார் மொழியாக்கம் செய்திருக்கிறார்.

கியூகோதான் வாழும் காலத்திலே மிகுந்த புகழும் பெயரும் பெற்றவர். அவரது லே மிசரபிள்ஸ் நாவலை வெளியிடுவதற்காக பதிப்பகங்களுக்குள் பலத்த போட்டி நடைபெற்றது. முடிவில் மூன்று இலட்சம் பிராங்குகள் கொடுத்து அதன் உரிமையை பெல்ஜியத்தை சேர்ந்த ஒரு பதிப்பகம் விலைக்கு வாங்கியது.

கியூகோவின் புத்தகங்களை வாங்குவதற்காக மக்கள் வரிசையில் நின்று காத்திருந்து சண்டையிட்டு புத்தகங்களைப் பெற்றனர். 1862இல் லே மிசரபிள்ஸ் நாவல் வெளியாகப் போகிறதென்று ஆறுமாதங்களுக்கு முன்பாகவே பாரீஸ் நகர தெருக்கள் எங்கும் பெரிய பெரிய விளம்பரங்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்த நாவலின் ஒரு அத்தியாயம் மட்டும் முன்பிரசுரமாக வெளியாகியது. அதை வாங்கிப் படித்து நாவல் வெளியாவதற்கு முன்பாகவே மக்கள் அதைப் பற்றி காரசாரமாக விவாதிக்க துவங்கினார்கள்.

நாவல் 1862ஆம் வருடம் வெளியானது. வெளியான தினத்திலே நாற்பதாயிரம் பிரதிகள் விற்று தீர்ந்தன. 5 பாகங்களாகவும் 1200 பக்கங்களும்கொண்ட அந்த நாவல் பற்றி ஒரு வருடகாலம் பாரீஸ் நகரம் முழுவதும் மக்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இவ்வளவிற்கும் கியூகோ அப்போது அரசியல் காரணங்களுக்காக பாரீசை விட்டு வெளியேறி புருசெல்சில் வாழ்ந்து கொண்டிருந்தார். அந்த நாவல் பிரெஞ்சு தேசமெங்கும் எழுப்பிய அலையின் வேகம் மிக வலிமையானது. லே மிசரபிளின் முக்கிய கதாபாத்திரங்களான ஜீன்வால் ஜீனும், பிஷப் மைரிலும் காவல்துறை அதிகாரியான ஜாவெர்த்தும் வாசகர்களிடம் மிகுந்த புகழ்பெற்றார்கள்.

சமூகச் சீர்திருந்தங்களுக்காக போராடிய விக்டர் க்யூகோ, பெண்கல்வி, மத அதிகாரத்திற்கு எதிரான போராட்டம் போன்றவற்றை முன்னெடுத்து தொடர்ந்து எழுதிவந்தார். தனது வீட்டில் தனது ஐந்து பிள்ளைகளையும் கட்டுபாடுகள் அற்றவர்களாக, சுதந்திர சிந்தனையோடு வளர்த்தார். அடேலும் அப்படி உருவானர்தான்.

பிரான்சின் சக்கரவர்த்தியாக லூயி நெப்போலியன் பதவியேற்றவுடன் தனது காத்திரமான அரசியல் கருத்துகளுக்காக தன்னை தண்டிக்கக்கூடும் என்று கருதிய விக்டர் க்யூகோ பாரீசைவிட்டு வெளியேறி பெல்ஜியத்தில் தஞ்சம்புகுந்து சில காலம் அங்கே வாழ்ந்தார்.

1870இல் க்யூகோ பாரீஸ் திரும்பியபோது பல்லாயிரம் மக்கள் ஒன்றுகூடி வரவேற்று விருந்து கொடுத்தனர். அதன் பிறகு பாரீஸின் முக்கிய பிரமுகராக கொண்டாடப்பட்ட கியூகோ தனது 83 வயதில் இறந்தபோது மூன்று இலட்சம் பேர் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

க்யூகோவின் இளையமகள் அடேல். அடர்ந்த கூந்தலை கொண்டிருந்த அழகி. இவளின் அழகை கண்டு ஓவியர்கள் பலர் அவளை மொடலாகக் கொண்டு ஓவியம் வரைந்திருக்கிறார்கள், நடனவிருந்துகளில் அடேலுடன் இணைந்து நடனமாடுவதற்கு இளைஞர்களிடம் பலத்த போட்டி நடைபெற்றது,

க்யூகோவின் குடும்பம் ஜெர்சித் தீவில் வசித்துக் கொண்டிருந்தபோது ஒரு விருந்தில் அடேல் பிரிட்டிஷ் ராணுவத்தினை சேர்ந்த அல்பேர்ட் அன்ட்ரூ பின்சன் என்ற இளைஞனை சந்தித்தாள். பின்சனுக்குப் பார்த்தமாத்திரத்தில் அடேலை பிடித்துப் போய்விட்டது. அவள்மீது காதலுற்று, அவளைச் சந்திப்பதற்காகவே க்யூகோவின்



வீட்டிற்கு போய்வரத்துவங்கினான். நாலைந்து சந்திப்புகளின் பின்பு அடேலைத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாக பின்சன் தெரிவித்தான். அவன் ஒரு குடிகாரன். பெண் பித்தன் என அறிந்த, அடேல் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

பின்சன், லெப்டினெட் ஆக பதவி உயர்வு பெற்று ஜெர்சி தீவைவிட்டு வெளியேறி சென்றான். அவன் சென்றபிறகே அடேலுக்கு அவன்மீது காதல் உருவாகத் துவங்கியது. அவனைப்பற்றியே நினைத்துக்கொண்டிருக்க துவங்கினாள். அவனுக்குக் காதல் கடிதங்கள் எழுதினாள். ஆனால் பின்சன் அவளை கண்டு கொள்ளவேயில்லை. இதனால் ஆத்திரமான அடேல் அவனை நேரில் சந்தித்து தனது காதலை சொல்லவேண்டும் என்பதற்காக வீட்டைவிட்டு வெளியேறினாள்.

கனடாவின் நோவாஸ்கோடா பகுதியில் இருந்த ஹோலிபேக்ஸில் பின்சன் பணியாற்றிக் கொண்டிருந்தான். கப்பலில் ஹோலி பேக்ஸ் போய் இறங்கிய அடேல், அங்கே மிஸ் லிவ்லி என்ற பொய் பெயரில் ஒரு அறை எடுத்துக்கொண்டு பின்சன் எங்கே இருக்கிறான் என தேடத்துவங்கினாள்.

இடைவிடாத குடி, வேசைகளுடன் இரவைக் கழித்தல் என அலைந்து கொண்டிருந்த பின்சன். ஒரு புத்தகக் கடைக்கு அடிக்கடி வருகிறான் என்பதைத் தெரிந்துகொண்டு அந்த புத்தகக் கடைக்காரருடன் நட்பு ஏற்படுத்திக் கொண்டாள் அடேல்.

அவன் வழியாக பென்சனின் தோழி ஒருத்தியின் அறிமுகம் கிடைத்தது. தனது காதலின் வேதனையை ஒரு கடிதமாக எழுதி அவள்மூலம் பென்சனுக்கு கொடுத்து அனுப்பினாள் அடேல், அவன் அதைப் படித்து கிழித்து எறிந்துவிட்டு அவளை தான் சந்திக்க விரும்பவில்லை என்று மறுத்துவிட்டான்.

ஆனால் அடேல் அவனை விட்டுவிடவில்லை. அவன் செல்லுமிடங்களுக்கு எல்லாம் தானும் பயணம்செய்ய ஆரம்பித்தாள். அவள்மீதான காதலைப்பற்றி பக்கம் பக்கமாக நாட்குறிப்புகள் எழுதினாள். தனது தோழிகளுக்கு கடிதம் எழுதினாள். காதலின் மிதமிஞ்சிய ஏக்கத்தில் இறந்துபோன தனது சகோதரி தன்னுடன் பேசுவதாகவும், அவளது ஆவி தனது காதலுக்கு உதவுகிறது என்றும் கடிதம் எழுதியிருக்கிறாள். இதற்கிடையில் வீட்டை விட்டுபோன அடேலை க்யூகோவின் குடும்பம் தேடிக்கொண்டு இருந்தது.

சூதாடி கடனாளியாக இருந்த பென்சனைச் சந்தித்த அடேல் அவனது கடனை மொத்தமாக அடைத்துவிடுவதாக வாக்குறுதி அளித்தாள். ஆனால் பென்சன் அதை ஏற்கவில்லை. அவன் வேறு ஒரு பெண்ணைத் திருமணம்செய்து கொள்ளப்போவதாகச் சொன்னான். அதைத் தடுத்து நிறுத்த அந்த பெண்ணின் தந்தையைத் தேடிச்சென்ற அடேல் தனது வயிற்றில் அல்பேர்டின் பிள்ளை வளர்க்கிறது. தான் கர்ப்பிணி என்று பொய்சொல்லி அத்திருமணத்தைத் தடுத்து நிறுத்தினாள்.

அத்துடன் தனக்கும் அல்பேர்ட்டுக்கும் திருமணம் நடந்து முடிந்துவிட்டது. அதை வீட்டோர் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கடிதம் அனுப்பினாள். இதை அறிந்த விக்டர் க்யூகோ தனது மகளுக்கு கல்யாணமான செய்தியை பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். அது எல்லா நாளிதழ்களிலும் வெளியானது. இதைப் படித்த அல்பேர்ட் அது பொய்யான செய்தி. தான் அடேலை திருமணம் செய்துகொள்ளவில்லை என்று மறுத்து செய்தி வெளியிட்டான்.

காதலை மறந்து வீடு திரும்பும் படியாக அடேலுக்குக் க்யூகோ கடிதம் எழுதினார், அவளோ தான் அல்பேர்ட்டின் மனைவி என்பதால் அவனை விட்டு எங்கும் வர முடியாது என்று பதில் கடிதம் அனுப்பினாள், அல்பேர்ட் தன்னைப் பின்தொடரும் அடேலிடம் இருந்து தப்பிக்க ஒளிந்து வாழ்ந்தான்.

அவன் வேசைகளுடன் பழகுகிறான் என்பதை அறிந்த அடேல், தானே ஒரு வேசையை ஏற்பாடு செய்து தனது திருமணப் பரிசாக அவளை அனுபவித்துக் கொள் என்று அனுப்பிவைத்தாள்.

அடேல் ஒரு ஆவிபோலத் தன்னைத் தொடர்ந்து விரட்டித் துன்புறுத்துகிறாள் என்று ஆத்திரப்பட்ட பென்சன் ஹாலி பேக்ஸில் இருந்து வெளியேறி பர்படோஸ் தீவிற்கு சென்றான். அவனைப் பின் தொடர்ந்து அடேலும் பர்படோஸ் சென்றாள்.

வீட்டில் இருந்து அவள் கொண்டுபோன பணம் தீர்ந்துபோகவே, உடைகள், நகைகளை விற்றுச் செலவழித்தாள். பர்படோஸ் தீவில் பென்சன் எங்கே இருக்கிறான் எனத் தெரியாமல் தேடியலைந்தாள். தனது தலை மயிரை வெட்டிக்கொண்டு ஆண் உடை அணிந்தபடியே குடித்துவிட்டு சேற்றில் விழுந்து கிடந்தாள். அவள்மீது பரிதாபம் கொண்ட கிறிஸ்துவ மிஷனரியை சேர்ந்த மேடம் செலின் மா என்பவள் அவளுக்கு அடைக்கலம் கொடுத்து தங்கவைத்தாள்,

அங்கே தங்கிய அடேல், ஒரு விழாவில் பென்சனைக் கண்டுபிடித்து அவனை மறுபடி துரத்த ஆரம்பித்தாள். அவள்மீது தனக்குக் காதலே இல்லை. தன்னை விட்டுவிடு என்று பென்சன் கெஞ்சினான். அப்படியானால் தன்னை கொன்றுவிடு என்று அவனிடம் தனது கத்தியைக் கொடுத்தாள் அடேல். அவள் ஒரு பைத்தியக்காரி, பித்து பிடித்து அலைகிறாள் என்று அவன் காவலர்களிடம் புகார் அளித்தான்.

அடேலின் தீவிரத்தைக் கட்டுபடுத்த முடியாத மேடம் மா அவளை மனநல சிகிச்சைபெற அழைத்துப்போனாள். ஆனால் சிகிச்சையை ஏற்க மறுத்துதான் காதலின் துயரத்தை அனுபவிக்கவே விரும்புகிறேன் என அடேல் தப்பி ஓடிவிட்டாள். பர்படோஸ் தீவில் பிச்சைக்காரியைப் போல வாழ்ந்த அவளைப் பற்றிய செய்தி நாளிதழ் ஒன்றில் வெளியானது. இதை அறிந்த விக்டர் க்யூகோ தனது மகளை ஆதரித்த மேடம் மாவிற்கான செலவுத்தொகை மொத்தத்தையும் திருப்பி அனுப்பி மகளை தனது வீட்டிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்தார்.

பாரீஸின் புறநகரிலிருந்த மனநல காப்பகம் ஒன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டாள் அடேல், விக்டர் க்யூகோ இறந்த நாளில் அவள் கண்ணீர் ஒழுக தனது காதலை தந்தை நிறைவேற்றவேயில்லை என்று கதறினாள். தனது காதலன் தவிர வேறு யாருடனும் தான்பேசமாட்டேன் என்று சில வருஷங்கள் அவள் யாருடனும் பேசாமல் இருந்தாள்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக மனநலக் காப்பகம் ஒன்றிலே வாழ்ந்து திருமணமே செய்துகொள்ளாமல், தான் அல்பேர்டின் மனைவி என்று சொல்லிக் கொண்டு தனிமையில் இறந்துபோனாள் அடேல்.

அடேல் கொண்டிருந்த காதலின் சாட்சியாக அவள் எழுதிய நாட்குறிப்புகள், கடிதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதில் காதலுக்காக அவள் எப்படி எல்லாம் தன்னை அழித்துக்கொண்டாள் என்ற விபரங்கள் நம்மை நெகிழ்வூட்டுகின்றன,

அடேல் மனநோயாளியில்லை, ஆனால் சமூகத்தால் மனநோயாளியாக கருதப்பட்டு இருக்கிறாள், ஒரு பெண் தனது காதலுக்காக எவ்வளவு போராட்டங்களை சந்திப்பாள் என்பதற்கு அடேலின் கதை ஒரு உதாரணம் என்கிறார். அவளது வாழ்க்கை வரலாற்றை எழுதிய எலிசபெத் காஸ்ட்பீல்டு,

அடேலிற்கு ஏற்பட்டது schizophrenia எனும் மனச்சிதைவு நோய், அவள் தன்னை அல்பேர்டின் மனைவியாக கருதிக் கொண்டு நடக்க ஆரம்பித்திருக்கிறாள். துர்சொப்பனங்கள், தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்ளுதல், தனது காதலிற்கு இடையூறாக நினைப்பவற்றை குரூரமாக அழிப்பது என அவளது மூர்க்கத்திற்கு காரணம் மனச்சிதைவே என்கிறார் மனநலமருத்துவர் கேதி குயின்.

க்யூகோவின் குடும்பம் அடேலின் காதலை நிறைவேற்ற எத்தனையோ முறை முயற்சி செய்திருக்கிறது. ஆனால் பென்சன் அதை ஏற்றுக் கொள்ளவேயில்லை. அதேநேரம் தெருவில் குடித்துவிட்டு பிச்சைக்காரி போல தனது மகள் அலைவதை க்யூகோவினால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. மனம் உடைந்துபோனார். மகளை வீட்டிற்கு அழைத்துவர தொடர்ந்த முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் அடேல்தான் க்யூகோவின் மகளில்லை. அல்பேர்ட் பென்சனின் மனைவி. ஆகவே அவர்கள் தன்னை அழைத்துப் போவதை விரும்பவில்லை என்று மறுத்துவிட்டாள்.


அடேலின் துயரக்காதலை உணர்ச்சி பூர்வமாக த்ரூபா படமாக்கியிருக்கிறார். அவசியம் பார்க்க வேண்டிய படமிது.

க்யூகோவின் பிள்ளைகள் மூவர் அற்ப ஆயுளில் உயிரிழந்தார்கள், குடும்பம் சிதைவுற்றது. க்யூகோ இறந்தபிறகு அவரது மொத்த சொத்திற்கு உரிமையாளராக அடேல் நியமிக்கப்பட்டார். மனநலமற்ற அவருக்கு வருடம் முப்பதாயிரம் பிராங்குகள் புத்தக ராயல்டி கிடைத்து வந்தது. ஆனால் அவளுக்கு தான் க்யூகோவின் மகள் என்பதே மறந்துபோய்விட்டது. தன் வாழ்நாளின் கடைசிவரை அவள் பின்சென் என்ற ஒரெயொருவரை பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தாள். பின்சன் அவளது காதலை புரிந்துகொள்ளவும் இல்லை. அவளை மனநலக் காப்பகத்தில் வந்து சந்திக்கவுமில்லை.

அடேல் காதலுக்காகத் தன்னை அழித்துக் கொண்டுவிட்டாள். காதலின் தீவிரம் ஒருவரை எந்த நிலைக்குக் கொண்டுசெல்லும் என்பது ஒரு புதிர். காலம் காலமாகவே அது புரிந்து கொள்ளப்படமுடியாமலே தானிருக்கிறது.

## பெற்றோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும்

# “கதை சொல்லப் போகிறோம்”



## விமர்சனம்

ஒரு வரலாற்றின் மகத்துவத்தை மட்டுமன்றி செயற்பாட்டின் மகத்துவத்தையும் பாமர மக்களிற்கும் பிரதேசத்திற்கும் இலகுவாகப் புரிய வைப்பதிலும் விளங்கவைப்பதிலும் தெளிவுபடுத்துவதிலும் முதன்மை வாய்ந்ததாக வீதி நாடகங்கள் அமையும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய தொன்றல்ல. ஆயின் இன்றையநிலையில் தொலைக்காட்சி, இன்ரநெற் போன்ற நவீனத்துவத்தின் பங்களிப்புக்கள் இவற்றின் செல்வாக்கினை மழுங் கடிக்கச் செய்துள்ளன. சம காலத்து இளைஞர்களிற் பலர் இக்கூத்துக்களின் வலிமையை அறிந்திராமையும்கூட இதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இந்நிலையில் இக்கூத்தின் வல்லமை எல்லோர் மனதையும் கவர்ந்து எதற்காகச் செய்தோமோ அதற்கான நோக்கத்தை நிறைவுசெய்ய ஆவனசெய்யும் என்பது நிறுத்திட்டமான உண்மை என்பது அனுபவம் தந்த பட்டறிவாகும். இந்நிலையில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வரலாற்றையும் அதன் பெருமையையும் கட்டியம் கூறுவதாகவும், தொலைக்காட்சி நாடகம், மதுபாவனை, ஒலிபெருக்கிப் பாவனை, கல்விச் செயற்பாட்டில் பெற்றோரின் முட்டுக்கட்டை, ஆர்வமின்மை, சிறுவர் துஸ்பிரயோகம் என்பவற்றை இசக்குப் பிசக்கன்றி வெளிக்கொணர்ந்து சமூக மட்டத்தில் விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில் பாடசாலையின் ஏந்து பிரதேசங்களில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கூட்டாக இணைந்து கதை சொல்லப் போகிறோம்” என்ற வீதி நாடகத்தை நடாத்தி வருகின்றமை வரவேற்கத்தக்கதாகவும், காலத்தின் தேவையாகவும், யதார்த்தத்துக்குப் பொருத்தமான பொறிமுறையாகவும் அமைந்துள்ளமை சுட்டிக் காட்டத் தக்கதாகும்.


நடைமுறையில் சந்திக்கும் இடர்ப்பாடுகளை இசக்குப்பிசக்கன்றி காத்திரமாக வெளிக்கொணரும் முறை பல்வேறு தரப்பினரையும் கவர்ந்துள்ளது.

ஒரு பிள்ளையின் தந்தையாகிய பின் தாயாக பாத்திரப் பொறுப்பை சரிவரச் செய்யும் வித்தியாலய ஆசிரியரின் துல்லியமான நடிப்பு பார்வையாளரின் அரவணைப்பை வெளிக்கொணரத் தவறவில்லை. மாணவ பாத்திரத்தை தாங்கி நடித்த மாணவர்களும் கல்வியின் பெருமையையும் சிறப்பையும் உணர்ந்து தம்மைச் சுதாகரித்தவாறு பெற்றோர்களே எங்களைப் படிப்பியுங்கள், எங்களுக்கான தேவையை உதாசீனம் செய்யாதீர்கள் என்று கூட்டமாக பெற்றோர்களின் காலில் விழுந்து வணங்கி தமது கோரிக்கைகளை முன்வைத் தமை பார்த்தவரின் கல்நெஞ்சையும் கரைய வைத்தது.

பூப்புனித விழாவுக்கும், பிறந்தநாள் விழாவுக்கும் ஒலிபெருக்கியைப் பாவியுங்கள். அதேவேளை அடக்கமாகப் பாவியுங்கள். மாறாக ஓவென்ற சத்தத்துடன் பிரதேசத்தையே அலறவிடாதீர்கள். விழாவிற்கு முன்மூன்று நாட்கள், பின் மூன்று நாட்கள் இதை அலறவிட்டு எங்கள் படிப்பை சிதறவைக்காதீர்கள். எங்களைக் கொச்சைப்படுத்தாதீர்கள், கோவில்களில் காலையும் மாலையும்கூட கடவுளை வணங்குவதை விடுத்து காலையும் மாலை யும் ஏட்டிக்குப் போட்டியாக ஒலிபெருக்கி கதறுவது ஏன்? ஒன்றுமே புரியவில்லை என்ற ஆதங்கம் விஞ்சிநின்றது.


இரவுவந்தால் அம்மாவுக்கு நாடக வெறி, அப்பாவுக்கு மதுவெறி, அக்காவிற்கு பேஸ்புக் வெறி, அண்ணாவிற்கு கைத்தொலைபேசி வெறி, தங்கைக்கு நித்திரை வெறி, என்ன செய்ய எங்களுக்கோ படிப்புவெறி. படிப்பால் உயர்வோம். வாழ்வில் சிறப்போம்.

இது தினசரி காலையில் பாடசாலை அசெம்பிளியில் அதிபர்களின் அமுத வாக்கு என்ன செய்ய எங்கள் வீட்டாரே உங்களின் கால்களில் விழுகின்றோம், கெஞ்சிக் கேட்கிறோம் எங்களை படிக்கவிடுங்கள். இது ஒவ்வொரு மாணவர்களினதும் ஆதங்கம். மேற்படி நாடகத்தின் ஊடாக வீதியில் கூறப்பட்ட கோஷங்கள் அனைவர் தரப்பிலும் விழிப்புணர்வைத் தரும். கற்றல் சூழலை இடைமறிக்கும் தடைகளை தகர்க்கும் என்பது அரங்கக்காரரின் அசையாத நம்பிக்கை.



இவ்வீதி நாடகங்களை நடாத்துவதற்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு உந்துசக்தியாகவும் பக்க பலமாகவும் கோப்பாய்க் கோட்டக்கல்வி அலுவலர், யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர், இப்பகுதி கிராம சேவையாளர்கள், சனசமூக நிலைய நிர்வாகிகள், ஆலய நிர்வாக சபையினர் அனைவரும் தமது அனுசரணையையும் ஆதரவையும் வழங்குகின்றமையும் இப்பகுதி வாழ் மக்களில் பெரும் பாலானோர் வயது வேறுபாடின்றி, இருபாலாரும் இந்நிகழ்வைப் பார்வையிடுவது சிலாகிக்கத் தக்கதுடன் இவ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் புலரது பாராட்டையும் பெறுவது மகிழ்ச்சிக்குரியது.





மு.வி.வரன்

---



# சீரியல் கில்லர்கள்!

“இந்த குழந்தைக்கு அப்பா யாரு?” இதுதான் எல்லா சீரியல்களிலுள்ள பொதுப்பிரச்சினை. முக்கால்வாசி சீரியல்கள் என்னவோ சீரியஸாகத்தான் இருக்கின்றன. ஆனால், அதில் காட்சிக்கு காட்சி இழையோடிடும் நகைச்சுவைதான் நம் பெண்களை கட்டிப்போடுகிறது.

### கூட்டுக் குடும்பத்தின் சிறப்பு

சீரியல்கள் போன்று, இன்றைய திகதியில் கூட்டுக் குடும்ப வாழ்க்கையை இந்தளவு வேறு எங்கேயாவது, யாராவது முன்னிறுத்துகிறார்களா? குறைந்தது ஆறு, ஏழு பேர் உள்ள குடும்பங்களில், முன்னூற்றி அறுபத்து நான்கு நாட்களும் சுவாரஸ்யமான சண்டைகளும், பிரச்சினைகளும் வரவாய்ப்பு இருக்கிறது என்பதை விடவா, கூட்டுக்குடித்தனத்துக்கு தனி உந்துதல்வேண்டும்? மேலும், இப்போது தெரு சண்டைகள் சுவாரஸ்யமற்றுப் போய்விட்டன. அடுத்த வீட்டில் கொலையே விழுந்தாலும் நாங்கள் அவர்கள் பக்கம் எட்டிப்பார்ப்பதில்லை.

ஒரு காலத்தில் ஆண்களுக்கு கனவு கன்னியாக விளங்கிய சினிமா நாயகி, பின்னாளில் சீரியல் நாயகியாகி அதே ஆணின் மனைவியின் மதிய தூக்கத்தை கெடுக்கிறார். தொலைக்காட்சி தொடர் கதாநாயகி பெண்களுக்கு ஒரு ரோல் மொடல் என்றால் நம்புவீர்களா? அவர், எப்போதும் மிக அழகாகவும், சிரித்த முகத்துடனும் வேலைக்கும் போய், குடும்பத்தையும் சரியாக கவனிப்பவராக இருக்கிறார். ஆனால், அவர் மாமியார் வில்லியாக மாறவேண்டி இருப்பதால் அவருக்கு குழந்தை பிறக்காமல் இருக்கிறது. அல்லது பிறந்த வீடு ஏழ்மையோடு இருக்கிறது.

அல்லது மாமியாரின் பணக்காரத் தோழி, தன் ஒரே மகளை இரண்டாம் தாரமாகவாவது கதாநாயகியின் கணவருக்குத்தான் கட்டிவைப்பேன் என்று காத்திருக்கிறார். அதாவது இந்தப் பிரச்சினை தவிரவும் தம்பியை பொலிஸ் பிடித்து போனாலும், கணவருக்கு வேறு தொடர்பு இருப்பது தெரிந்தாலும், அழகான உடை அணிந்து, மேட்சிங், மேட்சிங் அணிகலனுடன் வந்து கவலைப்படுகிறார். ஆதலினால் பெண் குலத்திற்கே, இனி காலையில் பொங்கின பாலுக்காக இரவுவரை மூஞ்சியை “உம்” என்று வைத்து கொள்ளக் கூடாது என்ற தெளிவு பிறக்கிறது.

### சத்தியவாக்கும் நல்ல பெண்ணிற்கான அடையாளமும்

படுத்த படுக்கையாக இருக்கும் ஒரு கிழவர் மாத்திரை, மருந்து வாங்குகிறாரோ இல்லையோ, கண்டிப்பாக கதாநாயகியிடம் யாவரையும் அனுசரித்துப் போக சத்தியம் வாங்குகிறார். அந்த சத்தியம் செய்யாவிட்டாலும் கூட நாயகி நல்லவர்தான். வடிவேலு ஒரு நகைச்சுவை காட்சியில் சொல்வார். எத்தனை அடிச்சாலும் தாங்குறான். இவன் ரொம்ப நல்லவன்னு சொல்லிட்டாங்க. அதே தான் இங்கேயும்.

சீரியல் இயக்குனர், ஒரு கதாபாத்திரத்தை நல்லதல்லவென சித்தரிக்க முடிவெடுத்துவிட்டால், அது முட்டுச்சந்து தோறும் அடிவாங்கிக்கொண்டே இருக்கிறது. இப்படி பலரும், பல விதத்திலும் கொடுமைசெய்தாலும் அதையெல்லாம் குடும்ப வன்முறையாக பார்க்காமல் சகித்துக்கொண்டு வாழ்ந்துமுடிப்பதே நல்ல பெண்ணிற்கான குணம் என்ற அரிய கருத்து சீரியல் தோறும் பெண்களுக்கு கிடைக்கிறது. இவ்வாறான குடுகுடு கிழவர்கள், கையை பிடித்துக் கொண்டு பேசுவதே சத்தியம் வாங்குவது போலிருப்பதால், இவர்களோடு ஒரு பத்தடி தள்ளிநின்று பேசவேண்டும் என்ற கருத்தும் நுட்பமாக வலியுறுத்தப்படுகிறது.

### நல்லதும் கெட்டதும்

இங்கே மனிதர்கள், பூலியன் அல்ஜீப்ரா (0 அல்லது 1) போல மிகுந்த நல்லவர்கள் அல்லது அசுர கெட்டவர்களாக இருக்கிறார்கள். இவர்களை அடையாளம் காண்பதும் எளிதாக இருக்கிறது. அடர்த்தியாக மை வைத்து, வீட்டில் உள்ள நகைகளை அள்ளி அணிந்து, உரக்கப் பேசுபவர்கள் கெட்டவர்கள். ஏழையாக அல்லது அடிமையாக மட்டுமே இருப்பவர்கள் நல்லவர்கள்.

மேலும், வாழ்க்கைஎன்பது 24 மணிநேர தொடர் திட்டம் என்பதை, அடர்த்தி நகைப் பெண்மணி கற்றுத்தருகிறார். வெள்ளிக்கிழமைதோறும் ட்விஸ்ட் வைத்து முடிக்கவேண்டியிருப்பதால், நல்லவர்கள், கெட்டவர்களாகமாறி ப்ளான் போடுகிறார்கள் கெட்டவர்கள் நல்லவர்களாக மாறி ஒக்ஸி டெண்ட் ஆகிறார்கள்.

முக்கியமான விஷயம் யார் என்ன வேண்டுமானாலும் சொல்லிட்டு போகட்டும். சீரியல் என்றால் தினமும் தவறாமல், கண் இமைக்காமல் பார்க்க வேண்டும். ஏதாவது முக்கியமான விஷயம் என்றால், கேட்பவருக்கு முதுகு காட்டி, கேமரா பார்த்து பேசுகிறார்கள். நானும் அப்படி ஒரு நாள் திரும்பி நின்று பேசிப்பார்த்ததில், கணவர் எப்பவோ எஸ்கேப். ஆகவே அது வேண்டாம்.

அரைத்த மாவையே அரைத்து, முடிந்தவரையில் கலாசார சீரழிவுகளை புகுத்தி கதை அமைத்து, நம் மூளைக்கு பிறர் வீட்டு வம்புகேட்பதுதான் பிடித்தமான பொழுதுபோக்கு என்று மாற்றிவைத்திருக்கிறார்கள். முடிவில், இந்த சமூகம் பெண்களை மட்டும் குறைகாணும். ஆகவே அத்தகைய விமர்சனங்களை கண்டு அஞ்சத் தேவையில்லை.



களத்து மேட்டில் போர் ஓய்வு!
இனி விடிந்த பின்தான்
போர் மூளும்!

கண்களை மூடினான் கலியன்!
தூக்கம் வரவில்லை
ஏக்கம் வந்தது!

கண்ணயர நினைக்க கனவுவந்தது!
நூல் கொண்ட இடை - இரு
கால் கொண்ட படை!
பால் பொங்கும் நகை - இரு
தேன் சிந்தும் சுனை!

அவள்தான் அது அவள்தான்!
இரவு ஓயும்வரை வாயை
சுவைத்திருந்தும், தாகம்
தீரவில்லை
என்று தேகம் துடிப்பெடுக்க
பாயை விட்டகல மறுத்து - பிடி
வாதம் பண்ணியதை நினைத்தான்!

மாதம் பலவாயும் அந்த
மாயம் தீரவில்லை என
வியந்தான்
இரு குடங்கள் தழுவி
பெரு வேள்வியில் மூழ்கி
உருக்கொண்டாடியதை
கருக்கல் பொழுதினில்
நினைத்தான்!

தேன் மொய்க்கும் இதழ்
சுவைத்திட்டால்
மனதை மயக்கும் சுழல்!

காண்கிற வயிற்றுச் சுழி
கைதொட்டால் மனதில் கனி!
கொய்யாத கனிகள் தனி
மொய்யாது விட்டால்
மனதில் வரும் பிணி!

இடையாலே சுமக்கும் கனி!
சுமையாலே சரியும் இடை!
படைபோல அவள் வருவாளே!
தடைபோட முடியாது
விழிகளுக்கு!

நெருங்கி நின்றேன் - அவள்
மருளவில்லை
நிமிர்ந்து நின்றாள் - நான்
மிரண்டு விட்டேன்!

நெஞ்சினில் இரு படை
கொண்டவளே வெஞ்சமர்
படைகளை விடக்கொடியவளே!

மெல்லத் தழுவ நழுவிடுவாள்
கொல்லத் துடிக்கும் விழியாலே
கொத்தி என்னை எடுத்திடுவாள்!

மரம் அவள் கொடி நான்!
தழுவிடும் போதும் அதுதான்!
கடலா? சமுத்திரமா?
காமம் கடலா? சமுத்திரமா?




எண்ணி எண்ணி வியந்தான்
கலியன். எண்ணி எண்ணி
வியந்தான்
காமக் கடலில் துடுப்பும் நாமே!
காமக் கடலில் தோணியும் நாமே!
காமம் இனிது காதலில் ஊறிடும்
காமம் இனிது!

பூவினில் ஊறிடும் தேனினைப்
போல காதலில் ஊறும் தேனே
காமம்! மலரிலும் இனியது
வண்ணத்திச் சிறகிலும்
மெல்லியது காமம்!
காமத்தை நன்கு உணர்ந்தவர்
தறிகெட்டு அலையார்!
காதலில்லாத இடத்தில்
காமத்தை தேடார்! காதலுடன்
காமத்தை நுகர்ந்தவர்கள்
காவியுடன் சந்நியாசம்
தேடியதில்லை!

பெண்ணை காதலுடன்
அடைந்து களிப்பவர்கள்
பேய் என்று பிணங்கி
நாய்போல அலைவதில்லை!
அதனை ஞானம் என்று
சொல்லி ஏய்ப்பதில்லை!

கலியனுக்கு பெண் எதிரியல்ல!
கலியனுக்கு காதல் கசப்புமில்லை!
அதனால் காமமும் திகட்டவில்லை!

ஆட முடியாதவள் மேடை சரியில்லை
என்று ஓட நினைத்தாளாம்!

பெண்ணை ஆணும் ஆணைப்
பெண்ணும் ஒருவருக்கொருவர்
ஆள முடியாதபோது காமம்
திகட்டுகிறது!

ஆசை அறுபது நாள் மோகம்
முப்பது நாள் என்று பொய்யில்
புகலிடம் தேடுகிறது.

காதல் மிகுந்தவரின் ஆயுள்
முழுவதும் மோகம் முடிவதில்லை
அவர்கள் வாழும் வரையும்
ஆசைகள் அழிவதில்லை

காமத்தை முள்ளாக நினைப்பவர்
காயம் அடைவதுண்டு
காமத்தை மலராய்
கையாளத் தெரிந்தவர்
மாயம் புரிவதுண்டு
வாழும்வரை அவர்கள்
வாழ்வை இரசிப்பதுண்டு
கலியனும் அப்படித்தான்
களத்திலும் அவனுக்கு காதல்
துணைவியின் நினைப்புத்தான்
வீர முனைப்புக்கும்
தூண்டிக் கொண்டிருந்தது!

**"மலரினும் மெல்லியது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப்படுவார்"**

*அதிகாரம்: 129 - பாடல்: 1289*




**✪ நாடாளுமன்றம் கலைத்தது ரணிலை பாதுகாக்கவென்று விமல் வீரவன்ச கூறுகிறாரே சிந்தியா?**

**எம்.காவியன், கிளிநொச்சி.**

பிரதமராக இருந்த ரணில் விக்ரம சிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரப்போவதாக பலமான எதிர்க்கட்சியினர் பிடிவாதமாக இருந்தார்கள். ஜனாதிபதி எவ்வளவோ கேட்டுக் கொண்டபோதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவந்தே தீர்வதென உறுதியாக இருந்தனர்.

அப்படி ஒரு சூழலில் பிரேரணை ரணிலுக்கு பாதகமாக அமைகின்றபோது அது அசிங்கமாகிவிடும் என்பதையும் மனதில்கொண்டே நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டிய காரணங்களில் ஒன்றாகவும் இருந்தது என்பதை இதுவரை எவரும் மறுக்கவில்லை.

**✪ தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளதே?**

**மு.சாளினி, வவுனியா.**

சூடு பிடிக்கும், சூடு பிடிக்கும் என்று கடந்த பல தேர்தல்களில் கேள்விப்பட்டிருக் கின்றோம். சில தேர்தல்களில் பார்த்தும் இருக்கின்றோம். ஆனால் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் சூடுபிடிக்கும் சம்பவங்களுக்கு குறைவு இருக்காது என்றுதான் நினைக்கின்றேன். இது பலருக்கு வாழ்வா?, சாவா? என்பதை தீர்மானிக்கும் தேர்தலாகத்தான் இருக்கப் போகின்றது.

**✪ மாவையார் எம்மை நாமே ஆளவேண்டுமென்கிறாரே. இது என்ன விநோதமாக இருக்கிறது?**

**வ.தர்ணிகா, நீர்கொழும்பு.**

அவரும் முப்பது வருடங்களாக இப்படியே சலிப்பில்லாமல் கூறுகின்றார். தமிழ் மக்களும் அந்த வார்த்தை களை நம்பி வாக்களித்து களைத்துப் போய்விட்டார்கள். ஆனால் கொஞ்சமும் வெட்கமில்லாமல் இரத்தத் திலகம் மாவை இதே புளித்துப்போன வார்த்தைகளை கூறி தமிழ் மக்களை ஏமாற்றத் தொடங்கி இருக்கின்றார். அவர்களுக்கு வாக்களிக்கும் தன்மானமுள்ள தமிழ் மக்கள் இம்முறை யாவது இவர்களுக்கு பாடம் புகட்டுவார்கள் என்று நம்புவோம்.

**✪ அனுபவ அறிவை யாரும் பெரிதாய் நினைப்பதில்லையே சிந்தியா?**

**ஜேஜா, வேலணை-02.**

இல்லையே. எந்தத் துறையினராக இருந்தாலும் கற்றுக் கொண்டதற்கு மேலதிகமாக அவர்களின் அனுபவம் தானே அவர்களுக்கு வழித்துணையாக இருக்கின்றது. அனுபஅறிவை ஒரு தகுதியாக பெயருக்குப் பின்னால் குறிப்பிட முடியாதே தவிர அதுதான் சவால்களை எதிர்கொள்ளும் பலமான ஆயுதம்.

**✪ டைட்டானிக்கின் இசையமைப் பாளர் ஜேம்ஸ் ஹோர்னரின் மரணம்? இசையால் தாலாட்டிய மேதை பற்றி?**

**எவ்.அஸ்வத், மட்டக்களப்பு.**

ஆங்கிலப் படங்களைப் பற்றிய ஆர்வம் சிலருக்கு சில பொழுதுகளிலேயே ஒரு தூண்டுதலை ஏற்படுத்தும். மொழிப் பரீட்சயம் இல்லாத காரணத்தாலும் ஆங்கிலப் படங்களை பலர் பார்ப்பதில்லை.

ஆனால் ஆங்கிலப் படங்கள் பிரமாண்ட மாகத் தயாரிக்கப்படுவதைப்போல் அதற்கான இசையும் பிரமாண்டமாக பார்வையாளர்களை மிரட்டுவதில் ஈடு இணையற்றது. இப்போதுகூட டைட்டானிக் எனும் அந்தக் காதல் காவிய மான திரைப்படத்தை ஞாபகப்படுத்திக்



கொண்டால் அந்தக் கப்பலின் சத்தமும், அந்த விபத்தின் துயரத்தை நமது மனது மறக்காமல் சுமந்துகொண்டே இருக்கும் வகையில் ஜேம்ஸ் அமைத்திருக்கும் இசை இப்போதும் மனதின் ஓரத்தில் கேட்டுக்கொண்டே இருக்கின்றது. அப்படி ஒரு இசைமேதை உலகம் இழந்திருக்கின்றது.

**✪ காதலோடு கண்ணீரும் சேர்ந்து வரும் என்கிறார்களே. உண்மையா? சிந்தியா?**

**ச.மணீதரன், நுணாவில்.**

நூற்றுக்கு தொண்ணூற்றி ஒன்பது காதலர்கள் நீங்கள் கூறியதை உண்மை என்றுதான் கூறுவார்கள் என்று நினைக்கின்றேன்.

**✪ என்ன சிந்தியா! டோனியின் தலைமைப் பதவி பறிபோகுமா?**

**தா.ஆசா, ஹட்டன்.**

டோனி இந்திய கிரிக்கெட்டில் பல பாராட்டுக்குரிய வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்த தலைவர். பல வெற்றிகளையும், பல தோல்விகளையும் பார்த்தவர் டோனி.

பங்களாதேசில் இந்திய அணி சந்தித்த இந்தத் தோல்வியிலும் டோனி சில விடயங்களை நிச்சயம் கற்றுக்கொண்டு இருப்பார். வேறு நாடுகளை விடவும் இந்தியாவில் கிரிக்கெட் வெற்றியின்போது தலை, கால் தெரியாமல் ஆடுவார்கள். தோல்வி என்றதும் கண்டபடி விமர்சிப் பார்கள், வீடுகளுக்கு தாக்குதல் நடத்து வார்கள். அணிக்கு தலைமை தாங்கத் தகுதியில்லை என்று கூறுவார்கள்.

ஆனால் கிரிக்கெட் தெரிந்தவர்களுக்கு தெரியும் டோனி தலைமை தாங்கு வதற்கும், தொடர்ந்து விளையாடுவதற்கும் முழுத் தகுதி உடையவர் என்பது.

**✪ பொது இடங்களில் அநாகரிக மாக நடந்து கொள்பவர்கள் எப்படித் திருத்துவது?**

**எம்.அனு, கோப்பாய்.**

இந்தப் பிறவிகளை திருத்த முயற்சிப்பது. முட்டாள்தனம். பொது இடங்களில் அநா கரிகமாக நடந்துகொள்பவர்கள் யார்? யார்? என்று பார்த்தால் முதலாம் இடத்தில் நாகரிகம் மறந்த காதலர்கள், இரண்டாமிடத்தில் குடிகாரர்கள், மூன்றாமிடத்தில் சமூகப் பொறுப்பற்றவர் கள். இவர்களை திருத்தமுடியாது.

# காதிலை பூதந்தசாமி

**வணக்கமுங்கோயூ பார்ளிமென்ட் எலக்சன் நடக்கப்போகுதுங்கோ. கூட்டமைப்புக்குள் பங்காளிகள் முன்னம் மாதிரி இல்லாமல் முன்கூட்டியே பங்குகளை பிரிக்கத் தொடங்கியிருக்கினமுங்கோ. அதிலையும் தமிழரசுக்கட்சிதான் கூடுதல் ஆசனங்களை அபகரித்துக் கொண்டிருக்குதாமுங்கோ. ஏனைய கட்சிகள் யாழ்ப்பாணத்தில தங்களுக்கு பெரிசாக அக்கறை இல்லை. ஆனால் வவுனியா, மற்றும் கிழக்கு மாகாணத்திலை போதுமான இடம் ஒதுக்கப்பட வேணுமெண்டு மல்யுத்தம் நடத்திக்கொண்டு இருக்கினமுங்கோ.**

தமிழரசுக் கட்சி ஏற்கெனவே தாங்கள் பெயர்ப்பட்டியலை தயார் பண்ணியிருப்பதாகவும், சேர்ந்து தேர்தல் கேட்க விருப்பம் இல்லாதுவிட்டால் யாரும் தனியாகப் போய் தேர்தல் கேட்கலாம். தமிழரசுக் கட்சி தனியாக கேட்கவும் தயாராகத்தான் இருக்கின்றது என்று மிரட்டினமாமுங்கோ.

தமிழரசுக்கட்சியை விட்டுப்போட்டு ஏன் நாங்கள் தனியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று புதிய சின்னத்தில தேர்தல் கேட்கக்கூடாது. சின்னம் மாறினால் தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டினமோ என்றும் கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகள் கலந்துரையாடினமுங்கோ.

அப்பிடிப்போனால் தமிழ் ஊடகங்களும், புலம்பெயர்ந்த அமைப்புக்களும் நம்மை முன்னாள் ஆயுத இயக்கங்கள் என்றும், இரத்தக் கரைபடிந்த கரங்கள் என்றும், துரோகிகள் என்றும் கூறுவார்கள். முட்டாள் தமிழ்ச் சனமும் அதை நம்புங்கள். நம்மை விடவும் அவங்கள் கொடூரமானவங்கள் எண்டதையும், அவங்கள் தமிழ் மக்களை காலங்காலமாக ஏமாற்றிக் கொண்டிருக்கிறாங்கள் எண்டும் நாங்கள் கூறினால் அதை இந்த மொக்குச்சனம் நம்பாது என்றும் சிலபேர் கூறினமுங்கோ.

இப்படி பல குழப்பங்களுக்கு நடுவே வேண்டாத கூட்டுக்குள்ள மானம் மரியாதை எல்லாவற்றையும் இழந்து அரசியல் பிழைப்பு நடத்திறது எவ்வளவு வெட்கம் கெட்ட தொழில் கோவிந்தா கோவிந்தா என்று மாகாண சபை உறுப்பினர்கள் நக்கலாகச் சொல்லினமுங்கோ.

இதற்கிடையில ஒவ்வொரு மாவட்டங்களிலை இருந்தும் யாழ்ப்பாணம் தமிழரசுக்கட்சியின்ர அலுவலகத்துக்கு கூட்டமைப்பினுடைய தேர்தல் பட்டியலில போட்டிபோட நாங்களும் தயார் என்று சிலபேர் பெயர்களை அனுப்பி வைக்கினமாமுங்கோ.

கூட்டமைப்பு பட்டியலில தேர்தல் வேட்பாளராக இருப்பதற்கு என்னென்ன தகுதிகள் இருக்கணும் தெரியுமோ, கூட்டமைப்பைத் தவிர ஏனைய தமிழ் அமைப்புக்கள், கட்சிகளை துரோகிகள் என்று ஏற்றுக் கொள்ளவேணும், தமிழரசுக் கட்சிதான் தாய்க்கட்சி என்பதை எழுத்தில ஏற்றுக் கொள்ளவேணும், ஏனைய கட்சிகளுக்கு எதிராக எந்தப்பொழுதிலும் போராடத் தயாராக இருப்பதை உறுதிப்படுத்த வேணுமாமுங்கோ.

பார்ளிமென்ட் கலைக்கப்படுமா? இல்லையா? என்பதே தென்னிலங்கையில பட்டிமன்ற விவாதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 20ஆவது தேர்தல் திருத்தச் சட்ட கூட்டமைப்புக்கு பிரச்சினை இல்லை எண்டாலும் ஏனைய சிறிய கட்சிகளுக்கு பிரச்சினைதான் எண்டு கூட்டமைப்பின் பேச்சுப் புலி சுமோ கூறியிருக்கின்றார்.

அவர் கூறியிருப்பதை அலசி ஆராய்ந்து பார்த்தால் ஒரு உண்மை தெரியவருகுதுங்கோ. கூட்டமைப்புக்கு தொகுதிகளில பரவலாக விழுகின்ற வாக்குகள் வெற்றிவாய்ப்பை கொடுக்கின்ற அதேவேளை கூட்டமைப்பை எதிர்த்து போட்டியிரும் ஏனைய சிறிய கட்சிகளுக்கு தோல்வியைத் தரக்கூடியதாக இருக்கும். என்பதை திட்டமிட்டுத்தானுங்கோ புதிய தேர்தல் திருத்தச் சட்டமான இருபதாவது திருத்தத்திற்கு கூட்டமைப்பு உள்ளூர ஆதரவு தெரிவித்திருக்குதாமுங்கோ.

புதிய தேர்தல் திருத்தச் சட்டம் யாழ்ப்பாணத்தில ஒன்பது ஆசனங்களை குறைக்காவண்ணம் இருந்தால் ஓ.கே என்று கூட்டமைப்பு கூறியிருப்பதை பார்த்து வடக்கு, கிழக்கைச் சேர்ந்த ஏனைய தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் கடுப்பாக இருக்கினமுங்கோ.

புதிய தேர்தல் திருத்தச் சட்டத்தின் மூலமாக வடக்கு, கிழக்கிற்கு வெளியே பெரும்பான்மை கட்சிகளுக்கே அதிக வெற்றிவாய்ப்பை கொடுக்கும் என்பதுபோல் வடக்கு, கிழக்கில் கூட்டமைப்புக்கு வெற்றி வாய்ப்பைத் தரும் என்பது கூட்டமைப்பின் நிலைப்பாடுங்கோ.

ஏற்கெனவே, தற்போதைய தேசிய நிறைவேற்றுச் சபையில் இருந்துகொண்டு கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளையும், அமைப்புக்களையும் அரசு நெருங்கிவிடாது இருக்கக் கோடு மறிப்பு விளையாடிக் கொண்டிருக்கும் கூட்டமைப்பினர் சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பை கொடுக்கும் என்று சிறிய கட்சிகள் எதிர்க்கும் புதிய தேர்தல் திருத்தத்திற்கு கூட்டமைப்பு அரசுக்குள் ஆதரவு வழங்கியுள்ளது. இதனூடாக வடக்கு, கிழக்கிலிருந்து தம்மைத் தவிர வேறு எவரும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக பார்ளிமெண்டுக்கு தெரிவாகிவிடக் கூடாது என்பதுதான் கூட்டமைப்பின் திட்டமாமுங்கோ.


பார்த்தியளோ நல்லாட்சிக்குள்ள கூட்டமைப்பு நடத்தும் குள்ளநரி ஆட்சியை. இதுதானுங்கோ மிகமோசமான ஜனநாயக மறுப்பு, தமிழ் மக்களிடம் ஜனநாயகத் தன்மையே இருக்கக்கூடாது, இருக்கவும் விடமாட்டோம் என்பதைத்தான் சம்மந்தமானவரும் அவருடைய அந்தரங்க சிஷ்யனான சுமோவும் திட்டமிட்டுச் செய்து கொண்டிருக்கினமுங்கோ.

தமிழ் மக்களிடையே ஜனநாயகம் இல்லை. வேறுபட்ட சிந்தனை இல்லை, தமிழர்கள் பரந்துபட்ட கருத்துக்களை கொண்டுள்ள வளர்ந்துவரும் இனமாக இல்லை என்ற விமர்சனங்களுக்கு கூட்டமைப்பினரே முதல் காரணமாக இருக்கினமுங்கோ.

யாராவது கேட்டால், தமிழர்களிடம் பல் வேறுபட்ட சிந்தனைகளும், ஜனநாயகத் தன்மையும் இல்லாவிட்டால், தேசியம் என்பது தமிழ் இனவாதமாகிவிடாதா? என்று கேட்டால், ஜனநாயகமா அது இருக்கு ஆனா இல்லை என்று கூறமுடியுமா?

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

# வரலாறு படைத்த வல்லுநர்கள் மரண பயத்தை ஒழித்த மருத்துவர்



லிஸ்டர் மெதுவாக ஆவலோடு கட்டைப் பிரித்தார். அவர் கண்டது அவரைப் பேசமுடியாமல் செய்தது. காயம் ஆறத் தொடங்கி இருந்தது. விஷமுறிவு வெற்றி பெற்றுவிட்டது!

ஆனாலும் தோலில் ஏற்பட்டிருந்த அந்த செவ செவப்பு அவருக்குக் கவலையளித்தது. பையன் சிவந்த அந்தப் பகுதியில் வலி இருப்பதாகக் கூறியது மேலும் அச்சத்தை அளித்தது. சிறிதுநேரம் லிஸ்டருக்கு ஏதும் புரியவில்லை. ஒப்பரேசன் செய்த பகுதியில் ரணம், காய ஆரம்பித்திருந்தது. ஆனால் அதைச் சுற்றியுள்ள பகுதியில் சிவப்பும், வலியும் நிகழ்ந்தது. என்னவாக இருக்கும் என்பது புரிந்ததும் அவர் முகத்தில் கவலை மறைந்து முறுவல் மலர்ந்தது. வீர்யமான கார்பலிக் அமிலத்தினால் தோல் கன்றிவிட்டது. இதைப் பையனிடம் விளக்கி, பயப்படவேண்டாம் என்றார்.

அந்தச் சுட்டிப் பையனோ, "இன்னும் வீர்யமான கார்பலிக் பூச்சைப்போடுங்கள் டாக்டர். நான் வலியைப் பொறுத்துக்கொள்கிறேன். என் கால் குணமானால் போதும். நான் சாக விருப்பவில்லை!" என்றான்.

லிஸ்டருக்கு மகிழ்ச்சியால் மனம் நிறைந்தது. " தம்பி, சிகிச்சையின் நோக்கமே வலியை அகற்றுவதுதான். கிரியோசோட் என்னும் கார்பாலிக் அமிலக் கலவைப் பூச்சின் வீர்யத்தைக் குறைத்துவிடுகிறேன். குணப்படுத்தும் தன்மை அதனால் குறைந்துவிடாது. உனக்கு வலி குறையும். சிவப்பு மறையும்" என்றார். அன்றிரவு தன் வீட்டிற்கு வெற்றிப் பெருமிதத்துடன் சென்றார் லிஸ்டர். மனைவி அக்னஸிடம் தன் சாதனையைக்கூற அது ஆரம்பமே. முடிவை அடைய இன்னும் நீண்ட பயணம் உள்ளது.

(முற்றும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(02.07.2015 தொடக்கம் 08.07.2015 வரை)

## மேடம்

காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது. வடக்குத் திசையில் இருந்து நல்ல செய்திகள் கிடைக்கும். தாயின் உடல்நிலையில் இதுநாள் வரையில் இருந்துவந்துள்ள பாதிப்புகள் குறைந்து நிம்மதி அடைவீர்கள். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய தொழில் முயற்சிகளைச் செய்வதில் நல்ல பலன் அடைவீர்கள். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். ஒரு சிலருக்கு தாய்வழியிலான சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து சொத்துக்கள் கிடைக்கும். மற்றவர்களை நம்பி பணம் மற்றும் பொருட்களைக் கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம்.

## இடபம்

வீடு மாற்றம் செய்வதற்கான புதிய முயற்சிகளில் வங்கிகளின் ஆதரவுகள் கிடைக்கும். நாட்பட்ட பழைய கடன்கள் அடைபடும். பழைய வீடு மற்றும் வாகனங்களை விற்று புதிய வீடு வாகனம் வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள். சமுதாய வளர்ச்சிகளுக்கான விசயங்களில் ஈடுபட்டு பாராட்டுக்களையும் பெறுவீர்கள். விபரீதமான எண்ணங்களால் வீண் பழிச் சொல்லுக்கு ஆளாகநேரிடலாம். குலதெய்வ ஆலய வழிபாடுகளுக்கான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நீண்டகாலமாகத் திருமணம் ஆகாதவர்களுக்கு உறவினர்களின் ஆதரவுகளால் திருமணம் நடைபெறும். விளையாட்டுத் துறைகளைச் சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுதல்கள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது.

## மிதுனம்

குடும்பத்தில் வீணாக ஏற்பட்டுவந்த மருத்துவச் செலவுகள் குறைந்து காணப்படும். வேலை இல்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும். நீண்ட காலமாக உத்தியோகம் இல்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய உத்தியோகம் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்க இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். வெளிநாடுகள் சென்றுவருவதற்கான புதிய முயற்சிகளில் வேற்று மதத்தவர்களால் ஆதாயங்களை அடைவீர்கள். பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் சற்றுக் குறைந்து காணப்படுவதன்மூலம் நிம்மதி அடையலாம்.

## கடகம்

பூமி நிலம் சம்பந்தமான விசயங்களில் ஈடுபட்டு நற்பலன்களை அடைவீர்கள். படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும். பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி முன்னேற்றமான சூழ்நிலைகள் உருவாகும். உத்தியோகத் துறையினர்களுக்கு பணி இடநிரந்தரமும் சம்பள உயர்வுகளும் உண்டாகும். அலுவலகங்கள் மற்றும் வீடுகளை இடமாற்றம் செய்யப்போட்டிருந்த திட்டங்களில் சற்று பின்னடைவு உண்டாகலாம். திருமணம் ஆகாதவர்களுக்கு இதுவரையில் இருந்துவந்த தடைகள் நீங்கித் திருமணம் நடைபெற வாய்ப்பு உள்ளது.

## சிங்கம்

செய்யாத குற்றங்களுக்கு அவப்பெயர் சேர வாய்ப்பு உள்ளதால் கவனமுடன் இருக்கவும். சொத்து விசயமாகப் புதிய பிரச்சினைகளைச் சந்தித்து வெற்றிபெறுவீர்கள். குடி இருக்கும் வீடு வாகனங்களைப் பழுதுபார்ப்பதன்மூலம் பொருட்செலவுகள் வந்துசேரலாம். பிரிந்துபோன கணவன், மனைவி திரும்ப ஒன்றுசேருவார்கள். பிள்ளைகளின் உடல்நிலையில் கவனமுடன் இருப்பது நல்லது. வீட்டில் காரணமில்லாத சில பிரச்சினைகள் ஏற்பட்டு புதிய வீடு மற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தாயின் உடல்நிலையில் மிக கவனமுடன் இருப்பது நல்லது. உத்தியோகத் துறையினருக்கு இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## கன்னி

காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக் கொண்டு மனநிம்மதியை இழக்கவேண்டாம். விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான விளைச் சல் உண்டாகும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக புதிய கடன்வாங்க முயற்சிப்பீர்கள். நீண்டகாலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணங்கள் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கைக்கு வந்துசேரும். திருமண விசயங்கள் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளைச் சற்று தள்ளிப்போடுவது நல்லதாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## துலாம்

தந்தைவழியிலான சொத்துக்கள் கை வந்துசேர வாய்ப்பு உள்ளது. நாட்பட்ட பழைய பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும். நீண்டகாலமாக விடுபட்டுப்போன பழைய நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் புதிய தொடர்புகள் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் மிகுந்த கவனமுடன் பயின்றுவருதல் நல்லது. புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பதால் வீண் பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம். தீராத நோய்கள் தீருவதற்காக நீண்டதூர பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். வேலையாட்களால் சிற்சில மனநிம்மதி இன்மையும் பொருட்செலவுகளும் வந்துசேரும் விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடரும் காலமாகும். கணவன், மனைவி உறவுகளில் எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது இழக்காதிருங்கள்.

## விருச்சிகம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர முயற்சிப்பீர்கள். பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன்வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள். உத்தியோகத் துறையினர்கள் மேலதிகாரிகளுடன் மனக்கசப்புகள் ஏற்பட்டு பணி இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் முன்கோபத்தை தவிர்த்துப் பணியாற்றுதல் சிறந்ததாகும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் எதிர்பார்த்து இருந்த நபர்களின் ஆதரவுகள் கிடைக்கும். காதல் விசயத்தில் கவனமாக இருக்கவும். அரசியல்வாதிகளுடன் எதிர்பாராத தொடர்புகள் ஏற்பட்டு அவர்களால் சிற்சில ஆதாயம் அடைவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதன்மூலம் பொருட்செலவுகள் வந்து சேரக்கூடிய காலமாகும். மனைவிவழியிலான சொந்தபந்தங்களுடன் சிற்சில கருத்து வேறுபாடுகள் வந்துபோகலாம். நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். புதிய ஆடை மற்றும் ஆபரணங்களை வாங்குவீர்கள். பிரிந்துபோன கணவன், மனைவி திரும்ப ஒன்றுசேருவதற்கான வாய்ப்பு உள்ளது. சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களுக்காகப் புதிய வழக்குறைஞர்களை நாடுவீர்கள். நாட்பட்ட தீராத நோய்கள் தீருவதற்காக புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன்மூலம் நோய் தீரும்.

## மகரம்

விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய முறை விவசாயங்கள் மூலம் நல்ல இலாபம் அடைவார்கள். குலதெய்வ ஆலயங்களைத் திருத்திக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். விளையாட்டுத் துறை சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுதல் கிடைக்கும். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய்நாடு சென்று திரும்பிவருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. தேவையற்ற புதிய நண்பர்களின் சேர்க்கையால் வீண் பிரச்சினைகள் வர இருப்பதால் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் மிகுந்த எச்சரிக்கையுடன் பயின்றுவருவது நல்லது. புதிய ஆடை ஆபரணங்களை வாங்குவதைச் சற்று தள்ளிப்போடவும்.

## கும்பம்

உடல்நிலையில் வாயு வாத சம்பந்தமான தொல்லைகள் வந்துபோகும். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக நீண்டதூர உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். தந்தை, மகன் உறவுகளில் இருந்துவந்துள்ள மனக்கசப்புகள் குறைந்து ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். புதிய வீடு நிலம் போன்றவற்றை விலைக்கு வாங்கப்போட்ட திட்டம் நிறைவேறும் காலமாகும். வேலை இல்லாதவர்கள் புதிய வேலைவாய்ப்புகளுக்காக பணம் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். புதிய கடன்கள் கொடுப்பதைத் தவிர்த்தல் நல்லதாகும். வரவேண்டிய பணம் கிடைக்க இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம்.

## மீனம்

புதிய வேலைவாய்ப்புகளுக்காக மற்றவர்களை நம்பிப் பணம்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். கணவன், மனைவி உறவுகளில் இருந்துவந்த நீண்டகால மனக்கசப்புகள் தீர்ந்து ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். பிள்ளை இல்லாதவர்களுக்கு இறையருளால் புத்திர பாக்கியம் கிடைக்கும் காலமாகும். வரவேண்டிய மனைவி வழிச்சொத்துக்களும் மற்றும் பணமும் கை வந்துசேரும் காலமாகும். வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்களது உறவுகளைக் காண தாய்நாடு சென்றுவருவீர்கள். வெகு காலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்பிவர வாய்ப்பு உள்ளது.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)



## உண்மைக் காதல் மாறுமா?



லுக்கோ மியா என்னும் ரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இங்கிலாந்தில் உள்ள பிர்கிக்காம் குயின் எலிசபெத் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர் ஓமர் அல் ஷேக்(வயது-16) மருத்துவமனை படுக்கைதான் அவரது வாழ்விடம். இவரின் வாழ்நாள் எண்ணப்படுவதாகவும் அவர் சில நாட்களில் இறந்துவிடுவார் எனவும் டாக்டர்கள் எச்சரித்து இருந்தனர்.

தனது வாழ்நாளை எண்ணிக்கொண்டிருந்த அந்த இளைஞர் தான் சிறு வயது முதலே காதலித்துவந்த இளம்பெண்ணை திருமணம்செய்து கொள்ளும் ஆசையை வெளியிட்டு உள்ளார்.

ஓமர் அல் ஷேக் என்ற இளைஞர் தனது கடைசி ஆசையை தனது காதலி அமி கிராஸ்வெல்லிடம் தெரிவித்து உள்ளார். தனது காதலரின் விருப்பத்தை நிறைவேற்ற காதலி அமியும் முடிவுசெய்தார். தனது காதலனுக்கு ஒரு சில நாட்களே மனைவியாக வாழமுடியும் என்று தெரிந்தும் திருமணத்துக்கு ஒப்புக்கொண்டார்.

மணமக்கள் சிறிதுநேரம் பேசியபடி இருந்த நிலையில், கடந்த ஞாயிற்றுகிழமை(21) தனது மனைவியின் கையைப் பிடித்தபடியே, ஓமர் தனது கடைசி மூச்சைவிட்டார். இது குறித்து அமி கூறும்போது இது மகிழ்ச்சியான நினைவாக இருக்க வாய்ப்பு கிடைத்ததற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

## அழகி

பிலிப்பைன்ஸ் நாட்டின் Ana Rochelle Pondare எனும் பெண் பார்ப்பதற்கு 144 வயதுடைவர் போல் தோற்றமளித்தாலும் மிக அண்மையில்தான் அவரது 18 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடியுள்ளார்.

இவர் தனது சிறுவயதிலேயே Progeria என்ற அரியவகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். மரபணு குறைபாடு காரணமாக இவரது வளர்ச்சி சாதாரணமானவர்களைவிட 10 மடங்கு அதிகமாக இருக்கும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 14 வயதினிலேயே உயிரிழந்துவிடுவர். Ana Rochelle Pondare தனது 18 ஆவது வயதில் காலடி எடுத்து வைத்திருக்கிறார். இதுவே அவரது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடக் காரணமாக அமைந்துள்ளது.



## அமேசான் காட்டில் அதிசயம்



அமெரிக்காவில் அடிக் கடி வேற்றுக்கிரகவாசிகள் வந்து செல்கின்றனர் என்று செய்திகளில் படித்திருக் கிறோம். ஆனால் கிரபிக்ஸ்மூலம் அவை வடிவமைக்கப்பட்டவையா என்ற சந்தேகங்களும் எழுந்திருக்கிறது.

ஆனால் அண்மையில் அமேசான் காட்டுக்கு ஆய்வுக்கு சென்றவர்கள் இந்த மர்ம உருவத்தை மீட்டிருக்கின்றனர்.

மர்ம உருவம் தொடர் பாக மக்கள் பீதியிலே இருக்கின்றனராம்.

## பாட்டியின் சாதனை



கலிபோர்னியாவை சேர்ந்த 92 வயது மூதாட்டி ஹரியட் தோம்சன். இவருக்கு 10 பேரக்குழந்தைகள் உள்ளனர். சமீபத்தில் இவர் சான்டியாகோ நகரில் நடந்த மரதன் போட்டியில் கலந்துகொண்டு 42 கிலோமீற்றர் தூரத்தை 7 மணி மற்றும் 24 நிமிடத்தில் கடந்து சாதனை படைத்துள்ளார்.

இந்த போட்டியின் முடிவில் அவர் கூறுகையில், 21 மைல்கள் தாண்டிய பிறகு மிகவும் சோர்வடைந்தேன். ஆனால் என் மகன் எனக்கு தொடர்ந்து





லுக்கோ மியா என்னும் ரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இங்கிலாந்தில் உள்ள பிர்கிக்காம் குயின் எலிசபெத் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர் ஓமர் அல் ஷேக்(வயது-16) மருத்துவமனை படுக்கைதான் அவரது வாழ்விடம். இவரின் வாழ்நாள் எண்ணப்படுவதாகவும் அவர் சில நாட்களில் இறந்துவிடுவார் எனவும் டாக்டர்கள் எச்சரித்து இருந்தனர்.

தனது வாழ்நாளை எண்ணிக்கொண்டிருந்த அந்த இளைஞர் தான் சிறு வயது முதலே காதலித்துவந்த இளம்பெண்ணை திருமணம்செய்து கொள்ளும் ஆசையை வெளியிட்டு உள்ளார்.

ஓமர் அல் ஷேக் என்ற இளைஞர் தனது கடைசி ஆசையை தனது காதலி அமி கிராஸ்வெல்லிடம் தெரிவித்து உள்ளார். தனது காதலரின் விருப்பத்தை நிறைவேற்ற காதலி அமியும் முடிவுசெய்தார். தனது காதலனுக்கு ஒரு சில நாட்களே மனைவியாக வாழமுடியும் என்று தெரிந்தும் திருமணத்துக்கு ஒப்புக்கொண்டார்.

மணமக்கள் சிறிதுநேரம் பேசியபடி இருந்த நிலையில், கடந்த ஞாயிற்றுகிழமை(21) தனது மனைவியின் கையைப் பிடித்தபடியே, ஓமர் தனது கடைசி மூச்சைவிட்டார். இது குறித்து அமி கூறும்போது இது மகிழ்ச்சியான நினைவாக இருக்க வாய்ப்பு கிடைத்ததற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

கடி வேற்றுக்கிரகவாசிகள் வந்து செல்கின்றனர் என்று செய்திகளில் படித்திருக்கிறோம். ஆனால் கிரபிக்ஸ்மூலம் அவை வடிவமைக்கப்பட்டவையா என்ற சந்தேகங்களும் எழுந்திருக்கிறது.

ஆனால் அண்மையில் அமேசான் காட்டுக்கு ஆய்வுக்கு சென்றவர்கள் இந்த மர்ம உருவத்தை மீட்டிருக்கின்றனர்.

மர்ம உருவம் தொடர்பாக மக்கள் பீதியிலே இருக்கின்றனராம்.



## பாட்டியின் சாதனை






கலிபோர்னியாவை சேர்ந்த 92 வயது மூதாட்டி ஹரியட் தோம்சன். இவருக்கு 10 பேரக்குழந்தைகள் உள்ளனர். சமீபத்தில் இவர் சான்டியாகோ நகரில் நடந்த மரதன் போட்டியில் கலந்துகொண்டு 42 கிலோமீற்றர் தூரத்தை 7 மணி மற்றும் 24 நிமிடத்தில் கடந்து சாதனை படைத்துள்ளார்.

இந்த போட்டியின் முடிவில் அவர் கூறுகையில், 21 மைல்கள் தாண்டிய பிறகு மிகவும் சோர்வடைந்தேன். ஆனால் என் மகன் எனக்கு தொடர்ந்து கொடுத்துவந்த உணவுகளும், பானங்களும் தொடர்ந்து ஓடுவதற்கு உதவியாக இருந்தது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு பின் அதிலிருந்து மீண்டுவந்த அவர், மரதன் போட்டியில் கலந்துகொள்வதன் மூலம் கிடைக்கும் பணத்தை புற்றுநோய் தொடர்பான செயல்களுக்கு கொடுத்துவிட முடிவு செய்துள்ளார்.

## நகரக் கப்பல்



பிரான்ஸ் நாட்டின் Saint-Nazaire நகரில் உள்ள கப்பல் கட்டுமான நிலையத்தில் 2013ஆம் ஆண்டு முதல் இந்த கப்பலை தயாரிக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்ற வருகிறது.

'Harmony of the Seas' எனப் பெயரிடப்பட்ட இந்த கப்பலின் கட்டுமானப்பணி முழுவதுமாக நிறைவுபெற்றவுடன் இதன் ஒட்டு மொத்த எடை 2 இலட்சத்து 27 ஆயிரம் டன்னாக இருக்கும். சுமார் 1,187 அடி நீளமுள்ள இந்த கப்பலின் உயரமானது பாரீஸில் உள்ள ஈபிள் டவரைவிட 50 மீற்றர் அதிக உயரம் கொண்டதாகும்.

சுமார் 2,500 பேர் ஈடுப்பட்டுள்ள இந்த கட்டுமானப்பணி முடிவடைந்தவுடன், முழு அளவிளான சோதனை ஓட்டம் 2016ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறும். 16 அடுக்கு மாடிகளுடன் உடைய இந்த கப்பலில் 2,100 பேர் ஊழியர்களாக செயற்படுவதுடன், இதில் சுமார் 6360 பேர் வரை ஒரேசமயத்தில் பயணம் செய்யலாம்.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் ஈ.டி எண்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஜூலை 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 17 வியாழக்கிழமை (02.07.2015) | பக்கங்கள் IV | ஓசை – 275

# தமிழ் தலைமையில் மாற்றம் அவசியம்

## ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)
தென்னிலங்கையில் ஆட்சி
மாற்றம் ஏற்பட்டாலும் தமிழ்
தலைமையில் மாற்றம் ஏற்படா
விட்டால் எமது மக்களுக்கு எவ்
விதமான பயன்களும் கிடைக்
கப் போவதில்லை என ஈழ
மக்கள் ஜனநாயகக் கட்சியின்
செயலாளர் நாயகம் டக்ளஸ்
தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்
துள்ள கட்சியின் தலைமை அலு
வலகத்தில் நேற்றைய தினம்
இடம்பெற்ற கட்சி உறுப்பினர்
கள் மற்றும் செயற்பாட்டாளர்கள்
மத்தியில் நடைபெறவுள்ள நாடா
ளுமன்றத் தேர்தல் தொடர்பாக
விளக்கமளிக்கும் போதே அவர்
இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை
யில், நாடாளுமன்றத் தேர்தலுக்
கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள
நிலையில் கட்சியினால் முன்னெ
டுக்க வேண்டிய செயற்றிட்டங்
கள் தொடர்பில் அவதானம்
செலுத்த வேண்டியது அவசிய
மானது.

அதன்பிரகாரம் நடைபெற
வுள்ள இத்தேர்தலில் தென்னில
ங்கை அரசியலில் மாற்றம் ஏற்
பட்டாலும், தமிழ் தலைமையில்
மாற்றமொன்று ஏற்படவேண்டி
யது அவசியமானது.

IV ஆம் பக்கம் பார்க்க

## கம்பஹா மாவட்டத்தில் சந்திரிகா போட்டி?

நாடாளுமன்றத் தேர்தலில்,
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா
பண்டாரநாயக்க குமாரதுங்க,
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில்
போட்டியிடுவதற்கு தீர்மானித்து
ள்ளதாக அரசியல் வட்டார தக
வல்கள் தெரிவிக்கின்றன.

சந்திரிகா, தேர்தலில் போட்டி
யிடுவது தொடர்பில் வெளியா
கியுள்ள ஊடக செய்திகள்
உண்மையானது என்றும் அவர்,
கம்பஹா மாவட்டத்தில் போட்
டியிடுவார் என்றும் சந்திரிகா

IV ஆம் பக்கம் பார்க்க

## ஐ.தே.க.வின் யானைச் சின்னத்தில் மலையக மக்கள் முன்னணி போட்டி

நடைபெறவுள்ள நாடாளு
மன்றத் தேர்தலில் நுவரெலியா
மற்றும் பதுளை மாவட்டங்களில்
ஐக்கிய தேசியக் கட்சியின்
யானைச் சின்னத்தின் கீழ் போட்
டியிடுவதற்கு மலையக மக்கள்
முன்னணியின் மத்திய குழு தீர்
மானித்துள்ளதாக மலையக மக்
கள் முன்னணியின் அரசியல்
துறை தலைவர் வே.இராதா
கிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று இடம்
பெற்ற ஊடகவியலாளர்கள் உட
னான சந்திப்பில் கலந்து கொண்டு
உரையாற்றிய போதே அவர்
இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்
தும் உரையாற்றிய அவர், தற்
போதைய நல்லாட்சிக்கான அர
சாங்கத்தின் கீழ் பெருந் தோட்
டப் பகுதியில் 100 நாள் வேலைத்
திட்டத்தினூடாக அதிகளவி

IV ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.எம்.பிக்களின் எண்ணிக்கை குறைப்பு இரத்தினபுரிக்கும், நுவரெலியாவுக்கும் அதிகரிப்பு

நடைபெறவுள்ள நாடாளும
ன்றத் தேர்தலில் தெரிவாகும்
உறுப்பினர்களின் எண்ணிக்கை
யில் இம்முறை மூன்று மாவட்டங்
களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இறுதியாக நடைபெற்ற
2010 ஆம் ஆண்டு நாடாளுமன்
றத் தேர்தலின் போது 9 உறுப்
பினர்கள் தெரிவாகியிருந்த யாழ்
ப்பாண மாவட்டத்திற்கான உறு
ப்பினர்களின் எண்ணிக்கை இம்
முறை 7 ஆகக் குறைந்துள்ள
தாக தேர்தல்கள் செயலக அறி
வித்தல்கள் மூலம் தெரியவருகி
ன்றது.

யாழ்.மாவட்டத்தில் குறைந்து
ள்ள இரு ஆசனங்களும் நுவ
ரெலியா மற்றும் இரத்தின புரி
மாவட்டங்களில் தலா ஒரு
ஆசனமாக அதிகரித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு இரத்தின
புரி மாவட்டத்திலிருந்து தெரிவா
கியிருந்த 10 நாடாளுமன்ற உறு
ப்பினர்களின் எண்ணிக்கை இம்
முறை 11 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோன்று நுவரெலியா
மாவட்டத்திலும் நாடாளுமன்ற
உறுப்பினர்களின் எண்ணிக்கை
ஒன்றால் அதிகரித்துள்ளது.
அந்த மாவட்டத்திலிருந்து வழ
மையாகத் தெரிவாகும் ஏழு
உறுப்பினர்களுக்குப் பதிலாக
இம்முறை எட்டுப் பேர் தெரி
வாவர். மாவட்ட ரீதியான வாக்கா
ளர் தொகையைக் கொண்டு
தேர்தல்கள் ஆணையாளரால்
இது தொடர்பான தீர்மானம்
எடுக்கப்ப டுவதாக தேர்தல்கள்
செயலகம் கூறுகின்றது.

2014 ஆம் ஆண்டு வாக்கா
ளர் இடாப்பின் அடிப்படையி
லேயே இந்த கணிப்பீடு அமை
வதாக மேலதிக தேர்தல்கள்
ஆணையாளர் எம். ஏ.மொஹமட்
தெரி வித்தார்.

இம்முறை தேர்தலில் மாவ
ட்ட ரீதியாக - 196 பேரும் தேசி
யப்பட்டியல் மூலம் - 29 பேரும்
என மொத்தமாகத் தெரிவாகும்
உறுப்பினர்களின் எண்ணிக்கை
225 ஆகும்.

## மடு அன்னையின் திருவிழா இன்று

மன்னார் - மருதமடு அன்னையின் ஆடி திருவிழா இன்று
மன்னார் மறைமாவட்டத்தின் புனித ஸ்தலமான மடுத் திருப்பதியில்
நடைபெறுகிறது. குறித்த திருவிழாவில் மூன்று மறைமாவட்ட
ஆயர்களுடன் நூற்றுக்கு மேற்பட்ட அருட்பணியாளர்களுடனும் பல
ஆயிரக் கணக்கான பக்தர்களுடன்

IV ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் விசாரணைப் பிரிவு இன்று முதல் செயற்பாடு

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம்
நடைபெறவுள்ள பொதுத் தேர்
தலை இலக்கு வைத்து தேர்தல்
விசாரணைப் பிரிவு இன்று முதல்
இயங்க உள்ள தாக அறிவிக்கப்
படுகிறது.

தேர்தல் திணைக்களத்தில்
இந்தப் பிரிவு இன்று முதல் இய
ங்க உள்ளதாக தேர்தல் ஆணை
யாளர் மகிந்த தேசப் பிரிய தெரி
வித்துள்ளார்.

மாவட்டச் செயலகங்களில்
தேர்தல் விசாரணைப் பிரிவு
இந்த மாதம் 6 ஆம் திகதி முதல்
இயங்க உள்ளது.

தேர்தல் விசாரணைப் பிரிவு
கள் பிரதேச செயலக மட்டத்தில்
ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்
படும்.

வேட்பு மனுத் தாக்கல் செய்
யப்பட்டதன் பின்னர் அந்தந்த
பிரதேசங்களின் நிலைமைகளை
கருத்திற் கொண்டு விசாரணைப்
பிரிவுகள் நிறுவப்படும் என
தேர்தல் ஆணையாளர் மகிந்த
தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

## பொதுத் தேர்தலில் போட்டியிட்டு புதிய அரசை அமைப்போம்

### மகிந்த சூளுரை

எதிர்வரும் பொதுத் தேர்த
லில் போட்டியிட்டு புதிய அரசா
ங்கத்தை அமைப்போம். இதை
எவராலும் தடுக்க முடியாது என
முன்னாள் ஜனாதிபதி மகிந்த
ராஜபக்ஷ. தெரிவித்துள்ளார்.
நேற்று மெதமுலனவில் உள்ள
அவரது வீட்டுக்கு முன்பாக
நடைபெற்ற கூட்டத்தில் உரை
யாற்றும் போதே அவர் இதனைத
தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து
உரையாற்றுகையில், தேர்தலில்
போட்டியிடுமாறு மக்கள் அழை
ப்பு விடுத்திருக் கின்றனர். அவர்
களது விருப்பத்தை நான் புறக்
கணிக்கமாட்டேன். அதற்கான
உரிமை எனக்கு இல்லை. எனவே
நாட்டையும், கட்சியையும் பாது
காக்க அனைத்து மக்களும்
2015 இல் எம்மோடு கைகோர்க்
குமாறு அழைப்பு விடுக்கிறேன்.
அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்
கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர
முன்னணி, மக்கள் விடுதலை
முன்னணி மற்றும் ஐக்கிய தேசி
யக் கட்சி ஆதரவாளர்களும்
நாட்டின் பாதுகாப்பு மற்றும் எதிர்
காலத்தை கருத்திற் கொண்டு
எங்களோடு இணைந்து கொள்ள
வேண்டும். எமது ஆட்சிக் காலத்
தில் குரோதம், பழிவாங்கல்

IV ஆம் பக்கம் பார்க்க

## ஏமாற்றமளித்த மகிந்தவின் கூட்டம்

தங்காலை வீரக்கெட்டிய
மெதமுலனவில் நேற்று நடை
பெற்ற கூட்டம் முன்னாள்
ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ
விற்கு ஏமாற்றம் அளிக்கும்
வகையில் அமைந்துள்ளதாக
செய்திகள் வெளியாகியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்
மிக முக்கியமான தலைவர்கள்
மகிந்தவின் கரத்தை வலுப்படுத்
தும் வகையில் கூட்டத்தில்
பங்கேற்பார்கள் என எதிர்பார்க்
கப்பட்டது.


எனினும், எந்தவொரு முக்
கியமான தலைவர்களும் மெத
முலனவில் இடம்பெற்ற குறித்த
கூட்டத்தில் பங்கேற்றி ருக்க
வில்லை என தெரிவிக்கப்பட்
டுள்ளது.

குறிப்பாக முன்னாள் எதிர்க்
கட்சித் தலைவர் நிமால் சிறிபால
டி சில்வா, ஐக்கிய மக்கள் சுதந்
திரக் கூட்டமைப்பின் பொதுச்

IV ஆம் பக்கம் பார்க்க

# 500இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் காணிகள் கிளிநொச்சியில் இராணுவத்தினரின் ஆளுகையில்

## முன்னாள் எம்.பி. மு.சந்திரகுமார் தெரிவிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் காணிகள் தொடர்ந்தும் இராணுவத்தினரின் ஆளுகையில் இருப்பதால் அம்மக்கள் மீள்குடியேறமுடியாதுள்ளனர். அவற்றை விடுவிக்கும் எண்ணம் படையினரிடமிருந்திருப்பின் கடந்த 5 வருடங்களில் விடுவித்திருக்கமுடியும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மீள்குடியேற்ற அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் 807 குடும்பங்கள் இதுவரை மீள்குடியேற்றப்படாதுள்ள நிலைமை இன்றைய கலந்துரையாடலில் வெளிப்படுத்தப்பட்டது. அவர்களில் 500 இற்கும் மேற்பட்டவர்களின் காணிகள் இராணுவம் மற்றும் கடற்படையினரின் ஆளுகைக்குள் இன்றும் இருப்பதால் மீள்குடியேறமுடியாதுள்ளனர்.

அவற்றில் கரைச்சி பிரதேசத்தில் 180 வரையான குடும்பங்களின் காணிகளில் 11 இராணுவ முகாம்கள் அமைத்துள்ளதால் அவர்களின் மீள்குடியேற்றம் சாத்தியப்படவில்லை. இதேபோன்று கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களின் காணிகள் மற்றும் வீடுகளை படையினர் ஆளுகைக்குட்ப டுத்தியுள்ளமையினால் அம்மக்களின் மீள்குடியேற்றமும் தடைப்பட்டுள்ளது. பூநகரிப் பிரதேசத்தில் இரணைதீவு எனும் பகுதியில் 380 குடும்பங்களின் நிலங்கள் கடற்படையினரின் ஆளுகைக்குள் இருப்பதனால் அப்பகுதி மக்களின் மீள்குடியேற்றமும் தடைப்பட்டுள்ளது.

நேற்றைய கலந்துரையாடலின் அடிப்படையில் கரைச்சி மற்றும் கண்டாவளைப் பிரதேசங்களில் இராணுவம் குடியிருக்கும் மக்களின் நிலங்களை விடுவிப்பது தொடர்பாக அடுத்து வரும் சில நாட்களில் பரிசீலித்து சாத்தியமான பகுதிகளை விடுவிப்பது தொடர்பில் உரிய இடங்களுக்கு அறிவிக்கப்படும் என படை அதிகாரிகளால் குறிப்பிடப்பட்டது. எனினும் கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தின் ஆளுகையில் இருக்கும் நிலங்கள் மற்றும் முகாம்கள் தொடர்பான விபரங்கள் இராணுவ உயர் அதிகாரிகளுக்குத் தெரியாத விடயமல்ல.

ஆனால் அவர்கள் திட்டமிட்டு காலத்தை இழுத்தடிக்கும் நோக்கின் அடிப்படையிலேயே முகாம்களின் அமைவிடம் தொடர்பாக ஆராய்வது பற்றி குறிப்பிடுகின்றார்கள். மக்களின் நிலங்களை விடுவிக்கவேண்டும் என்ற உண்மையான எண்ணம் படையினருக்கு இருந்திருக்குமாயின் கடந்த 5 வருடங்களில் விடுவித்திருக்க முடியும்.

எனினும் இக்காணிகள் விடுவிக்கப்பட்டால் மட்டுமே அந்த காணிகளுக்குரிய மக்களின் மீள்குடியேற்றம் சாத்தியப்படுமென்ற விடையத்தை நாம் வலியுறுத்தியிருக்கின்றோம்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் முகமாலைப் பகுதியில் கண்ணிவெடியகற்றப்படாததால் அப்பகுதியைச் சேர்ந்த 257 குடும்பங்கள் மீள்குடியேறமுடியாதுள்ளனர். ஆனாலும் அப்பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணியை மேற்கொண்டுவரும் கலோரஸ்ட் என்னும் நிறுவனம் சுமார் 50 பணியாளர்களை மட்டுமே பணியில் ஈடுபடுத்தியுள்ளது. இங்கு மிகப் பரந்த பிரதேசமும் மிகச் செறிவாக கண்ணிவெடிகள புதைக்கப்பட்டிருப்பதாலும் இந்த மிகக்குறைந்த ஆளணியினருடன் பணிகளை முன்னெடுப்பதென்பது சாத்தியமற்றது. இந்நிலை தொடருமானால் அடுத்துவரும் 10 வருடங்களைக் கடந்தாலும் அப்பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணி முடிவடைவதற்கு வாய்ப்பில்லை.

எனவே கண்ணிவெடியகற்றும பணியாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படவேண்டும அதற்காக கலோரஸ்ட் நிறுவனத்திலிருந்து இடைநிறுத்தப்பட்ட அனுபவம்வாய்ந்த 750 வரையான பணியாளர்களும் மீள இணைத்துக்கொள்ளப்பட்டு செயற்பாடுகள் தொடரவேண்டும். மீள்குடியேற்ற அமைச்சு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதனூடகவே இது சாத்தியமாகும் என்றார்.

மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனின் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகியோரும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ரஞ்சினி நடராஜபிள்ளை மற்றும் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள், படைத்தரப்பின் உயர் அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலர்கள், மாவட்ட செயலக திட்டமிடல் அதிகாரிகள எனப் பலர் கலந்துகொண்டனர்.

## வருடாந்த பெருவிழா

(புல்லாவெளி)

பச்சிலைப்பள்ளி புல்லாவெளி புனித செபஸ்தியார் தேவாலய வருடாந்த பெருநாள் இன்று (02.07.15) மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நான்கு நாட்கள் நடைபெறுமென பங்குத் தந்தை அருட்பணி எம். யேசுரட்ணம் அடிகளார்தெரிவித்துள்ளார்.

தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆராதனை தொடங்கி பிரசங்கம், திருப்பலி ஒப்புக்கொடுத்தல், எழுந்தேற்றம், சொரூப ஆசீர் வழங்கலென்பன இடம்பெறவுள்ளன.

நாளை மறுதினம் பிற்பகல் 5 மணிக்கு நற்கருணை வழிபாடு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நற்கருணைப் பவனியைத் தொடர்ந்து நற்பிரசாத ஆசீர்வழங்கப்படுவதோடு,

மறுநாள் காலை 7 மணிக்கு பெருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி பங்குத் தந்தை தலைமையில் மற்றும் அருட்சகோதரர்கள் இணைந்து ஒப்புக்கொடுக்கவுள்ளனர். திருப்பலி முடிவில் புனிதரின் திருச்சொரூபம் ஆலய வளாகத்தில் பவனிவந்து தொடர்ந்து ஆசீர்வாதம் வழங்கலுடன் கொண்டாட்டங்கள் நிறைவுபெறவுள்ளன.

பக்தர்கள் தினமும் வருகைதருமாறு பங்குத் தந்தையும், பங்கு மக்களும் அழைப்புவிடுத்துள்ளனர். பெருவிழா நிகழ்வுகளிற்காக இயக்கச்சியிலிருந்து பேருந்துப் போக்குவரத்துக்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (68)

## சாரதிக்கு 15 ஆயிரம் தண்டம்

(பருத்தித்துறை)

பொலிஸார் வழிமறித்தபோது வாகனத்தை நிறுத்தாமல் சென்ற சாரதிக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மகேந்திரா வாகனத்தை செலுத்திச் சென்ற சாரதியை நெல்லியடிப் பகுதியில் வைத்துப் பொலிஸார் வழிமறித்துள்ளனர். சாரதி வாகனத்தை நிறுத்தாமல் சென்றுள்ளார். தொடர்ந்து சென்ற பொலிஸார் வாகனத்துடன் சாரதியைக் கைதுசெய்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது 15 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (18)

## கண்ணிவெடியில்லாப் பிரதேசமாக முகமாலையின் ஒருபகுதி பிரகடனம்

(முகமாலை)

முகமாலைப் பிரதேசத்தின் ஒரு பகுதி கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ள பிரதேசமென சான்றிதழ் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

A - 9 வீதியில் முகமாலை வடக்குப் பகுதியிலுள்ள முகமாலையில் இருந்து இத்தாவில் வரையான 2 கிலோமீற்றர் நீளமும், 200 மீற்றர் அகலமும் உள்ள பகுதியிலுள்ள கண்ணிவெடிகளே அகற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதியினுள் முகமாலை உப தபால் நிலையம், முகமாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உப அலுவலகம், சித்த ஆயுர்வேத நிலையம், மிகப் பழமை வாய்ந்த அன்னை வேளாங்கன்னி ஆலயம் என்பன உள்ளடங்குகின்றன.

இவ்வாறு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சத்தியசீலன் கிராம சேவை அதிகாரிகள், பொதுநல அமைப்புக்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அதேவேளை இப்பகுதிக்கு வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இராஜதந்திரிகள் வருகை தந்து இப்பகுதியின் யாதார்த்த நிலைமை தொடர்பில் ஆராய்ந்தமை குறிப்பிடத்தக்கது. (37)



சொப்றலொஜிக் பினான்சின் அலுவலகம் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் திறந்துவைக்கப்பட்டபோது விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், வட மாகாண ஆளுநர் பளிஹக்கார அலுவலக நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும், முதலாவது வைப்பினைத் தொழிலதிபர் இ.இராசேந்திரம் ஆளுநரிடம் கையளிப்பதையும் காணலாம். (137)

# சட்டவிரோதமாக வெட்டப்பட்ட முதிரை மரக்குற்றிகள் மீட்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பளை பிரதேச பொலிஸாரினால் நேற்று முன்தினம் ஏ-9 வீதி இயக்கச்சி பகுதியில் வைத்து பெருமளவு சட்டவிரோத முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாங்குளம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி கடத்திச் செல்லப்பட்ட சட்டவிரோத முதிரை மரக்குற்றிகளே கைப்பற்றப்பட்டுள்ளது.


இதன் முழுப்பெறுமதி பத்து இலட்சம் என பளை பிரதேச பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

பாரவூர்தியில் வைக்கோல்களுக்குள் மறைத்து வைத்துக் கொண்டுசெல்லப்பட்ட போது பாரவூர்தியின் சுமையின் ஏற்பட்ட சந்தேகம் காரணமாக பொலிஸார் பாரவூர்தியினை சோதனை செய்த போதே இந்த முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் நேற்றுக் காலை சட்டவிரோமாக வெட்டப்பட்ட முதிரை மரக்குற்றிகளும் கிளிநொச்சி விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. ஐந்து இலட்சம் ரூபா மதிக்கத்தக்க முதிரை மரக குற்றிகள் துண்டு துண்டுகளாக அறுக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட்ட போதே கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களும் வாகனமும் கிளிநொச்சி பொலிஸாரினால் இன்று நீதி மன்றில் முற்படுத்தப்படவுள்ளன. (29)

## றமழான் சிந்தனை



**அல்லாஹ்வின் பாதையில் செல்லும் ஒருவரின் நோன்பிற்கு பகரமாக அல்லாஹ் அவரின் முகத்தை நரகத்தை விட்டும் 70 ஆண்டுகள் தூரமாக்கின்றான். (நூல் புகாரி :1901)**

**ஸஹர் முடிவு : அதிகாலை 4.20**
**நோன்பு திறக்கும் நேரம் : மாலை 6.37**

(105)

## தடம்புரண்டது டிப்பர்

யாழ்.-ஊர்காவற்றுறை பிரதான வீதி காப்பெற் வீதியாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெறுகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வேலணை அராலிச் சந்திக்கு அண்மையில், வீதி திருத்துவதற்கு மண் ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்த டிப்பர் ரக வாகனம் ஒன்று தடம்புரண்டு விழுந்தது. இதில் வாகனத்திற்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளது. சாரதி தெய்வாதீனமாக தப்பியுள்ளார். (21)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் விஞ்ஞான மற்றும் பொறியியல் துறைக்கான அடிப்படைக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரத்தில் ஆறு பாடங்கள் உள்ளடங்கலாக கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களில் திறமைச்சித்தி பெற்ற அனைவரும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். மற்றும் க.பொ.த. உயர்தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞான துறையில் கற்று மூன்று பாடங்களிலும் சித்தியடையத் தவறியவர்களும் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

கற்கைநெறிக்குரிய அனைத்து வகுப்புக்களும் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்திலும், 155 ஆம் மைல்கல், கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும், ஆதி பராசக்தி அறிவியல் கல்லூரி, 4 ஆம் வட்டாரம், இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும் இடம்பெறும்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை யாழ்.பிராந்திய நிலையத்திலும், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு கற்கை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாமென யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## வலி.மேற்கு மக்களின் தேவைகள் குறித்து ஆராய்வு

(நவாலி)

வலி.மேற்கில் வேள்ட்விசன் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மேற்கொண்ட அபிவிருத்தித்திட்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் இந்த ஒருவருட செயற்பாட்டு ஆய்வு ஆராயப்பட்டது. குடிதண்ணீர், சுகாதாரம், விசேட தேவைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதில் வேள்ட்விசன் திட்ட முகாமையாளர் எவ். அலெக்ஸ் ரொச் கடந்த ஒருவருட செயற்பாடு தொடர்பாக முன்னிறுத்தினார்.

வேள்ட்விசன் செயற்பாட்டு முகாமையாளர் (ரிவோஸ் III) ஆர்.ஜெயால்ட் அன்ரனி அடுத்த மூன்று ஆண்டுத் திட்டம் தொடர்பாக சிறப்பாக விளக்கினார். இந்நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபை அலுவலர்கள், வலி.மேற்கு பிரதேச செயலக அலுவலர்கள், கிராம அதிகாரிகள், கிராமிய மட்ட உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பு முன்னாய்வுகளை முன்வைத்தனர்.

அத்துடன் கடந்த ஒருவருட காலத்தில் வேள்ட்விசன் முன்னெடுத்த 21 முக்கிய நிகழ்ச்சித் திட்டங்களை வலி.மேற்கு பிரதேச சபையினர் முன்வைத்தனர்.

இறுதியாக வேள்ட் விசன் நிறுவனம் ஒருவருட நிறைவையொட்டி கருத்தமர்வில் பங்குகொண்டவர்களுக்கு நினைவுப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் பரிசில்களை வேள்ட் விசன் ரிவோஸ் III இன் செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயால்ட் அன்ரனி மற்றும் பிரதேச செயலர் அ.சோதிநாதன் ஆகியோர் வழங்கினர்.

நன்றியுரையினை வலி.மேற்கு உதவித்திட்டப் பணிப்பாளர் வீ.சிவகுமார் வழங்கினார். அடுத்தாண்டு திட்டம் இன்னும் சில மாதங்களில் முன்னெடுக்கப்படும் என்ற வேள்ட் விசனின் அறிவிப்புடன் கலந்தாய்வு நிறைவுபெற்றது. (92)

## திண்மக் கழிவு பொறிமுறை குறித்து 30 அலுவலர்கள் களத்தரிசிப்பு

கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளால் முன்னெடுக்கப்படும் திண்மக்கழிவு பொறிமுறை செயற்றிட்டம் குறித்து உள்ளூராட்சி சபை அலுவலர்கள் 30 பேர் பார்வையிட்டு திரும்பியுள்ளனர்.

ஐ.நா.யுனொப்ஸ் நிறுவன அனுசரணையின் கீழ் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பொன்னுத்துரை குகநாதன் தலைமையில் சென்ற உள்ளூராட்சி அலுவலர்களே மூன்று நாள் கள தரிசிப்பையும், அனுபவப் பகிர்வுகளையும் பெற்றுக்கொண்டு யாழ். திரும்பியுள்ளனர்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி சபை அலுவலர்கள் உட்பட 30 பேர் கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் திண்மக கழிவு பொறிமுறை, மீள்சுழற்சி பாவனை மற்றும் உக்காத கழிவுகளை நிலத்தில் புதைக்கும் திட்டம் உட்பட பல பயன்தரு கருத்திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் 5 தலைப்புக்களில் திண்மக்கழிவு பொறிமுறை உபாயம் தொடர்பான கருத்தாய்வு முதலில் இடம் பெற்றது.

இதன்பின்னர் மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளின் திண்மக்கழிவு பொறிமுறை செயற்றிட்டம் தொடர்பான அனுபவங்களை உள்ளூராட்சி சபைகளின் பிரதி ஆணையாளர் சபை செயலாளர்கள் விளக்கப் படத்துடன் விபரங்களை தெரிவித்தனர்.

இதன்பின்னர் ஐ.நா. யுனொப்ஸ் நிறுவன திண்மக்கழிவு பொறிமுறை விசேட நிபுணர் எஸ்.சிவகுமார் தலைமையில் சிறந்த செயற்றிட்டங்கள் பார்வையிடப்பட்டு விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இதற்காக மட்டக்களப்பு மாநகர சபை திருப்பெருந்துறை திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் அழைத்துச் சொல்லப்பட்டு சிறப்பு விளக்கங்கள், கருத்தாடல்கள் இடம்பெற்றன.

இதன்பின்னர் மட்டக்களப்பு நில நிரப்பு தளம் புனரமைக்கப்பட்டுவரும் மட்டக்களப்பு கொட்டுவாமடு பிரதேசத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு 140 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டம் விளக்கமளிக்கப்பட்டது.

இறுதியாக உன்னிச்சை குளத்தில் இருந்து மட்டக்களப்பு மாவட்டம் முழுவதுக்குமான குடிதண்ணீர் திட்டம் குழாய் மூலம் சுத்திகரித்து விநியோகிக்கப்படும் பிரதேசம் காண்பிக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி செயற்றிட்டம் நிறைவு பெற்றது.

யாழ்.மாவட்ட திண்மக்கழிவு பொறிமுறை செயற்றிட்டம் இன்னும் இரண்டு மாதங்களில் எவ்வாறான நிதியீட்டத்துக்கு ஊடாக விரைவில் முன்னெடுக்கப்படும் என்பது குறித்து ஐ.நா. யுனொப்ஸ் திண்மக்கழிவு சிறப்பு நிபுணர் எஸ்.சிவகுமார் இறுதியில் விளக்கமளித்து முடிவுறுத்தினார். (92)



2014 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் இரவீந்திரதாசனுக்கு ஒதுக்கப்பட்ட வரவு செலவு திட்ட நிதியில் இருந்து 1 மில்லியன் ரூபா செலவில் பிரம்படி பிரதான வீதி புனரமைக்கப்பட்டு வருவதைக் காணலாம்.

# இம்மாத நடுப்பகுதியில் ஜே.வி.பி.யின் விஞ்ஞாபனம்

ஜே.வி.பி.யின் தேர்தல் விஞ்ஞாபனம் இம்மாத நடுப்பகுதியில் வெளியிடப்படும் என்றும் இதற்காக பல்துறை யினரதும் ஆலோசனைகள் பெறப்பட்டு வருகின்றன என்றும் ஜே.வி.பி.யின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜே.வி.பி.யின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் முற்பகல் அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன் போது, ஜே.வி.பி.யின் தேர்தல் தயார்படுத்தல் நடவடிக்கை தொடர்பில் விளக்கமளித்த விஜித ஹேரத் மேலும் கூறுகையில்,

மக்களின் தேவைகளை உரிய வகையில் நிறைவேற்றுவதற்கு கடந்த காலங்களில் நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் உரத்து ஜே.வி.பி.யே குரலெழுப்பி வந்தது. ஊழல், மோசடிகளையும் ஜே.வி.பியே அம்பலப்படுத்தியது.

எனவே, ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவும் மக்களின் உரிமைகளைப் பெற்றெடுக்கவும் எமது கட்சிக்கு மேலும் மக்கள் பிரதிநிதித்துவம் அவசியமாகவுள்ளது. இதற்காக பலம் மிக்க வேட்பாளர்கள் இம்முறைத் தேர்தலில் களமிறக்கப்படவுள்ளனர். தற்போதே பிரசார நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. கீழ் மட்டத்திலிருந்து பிரசார நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. வீடுவீடாகச் சென்று விழிப்பூட்டல் செய்யப் படுகிறது. தொகுதி மட்டத்தில் அரசியல் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. புதிய நியமனங்கள் வழங்கப்பட் டுள்ளன. அத்துடன், வேட்புமனு தயாரிப்பு பணியும் ஆரம்பமாகியுள்ளது. தேர்தல் விஞ்ஞாபனமும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இதற்காக பல்துறையினரின் கருத்துகளும் உள்வாங்கப்பட்டு வருகின்றன. இந்த மாத நடுப்பகுதியில் தேர்தல் விஞ் ஞாபனத்தை வெளியிடக் கூடியதாக இருக்கும். வேட்பு மனுவில் 11 ஆம் திகதி கையயாப்பமிடப்படும். ஜே.வி.பி.யிடம் பலமான வேட்பாளர் பட்டியல் இருக்கிறது. இதன்படி கொழும்பு மாவட்டத்தில் கட்சியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க, மத்திய செயற்குழு உறுப்பினர்களான லால்காந்தா, லக்ஷ்மன் நிபுணஆராச்சி, சுனில் வட்டகல ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

கம்பஹா மாவட்டத்தில் கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத், தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க, மத்திய செயற்குழு உறுப்பினர் மகிந்த ஜயசிங்க ஆகியோர் களமிறங்குகின்றனர்.

களுத்துறை மாவட்டத்தில் நளின் ஜயசிங்ஹ தலைமையிலும், மாத்தறை மாவட்டத்தில் சுனில் ஹந்துனெத்தி தலைமையிலும், பதுளை மாவட்டத்தில் சமந்த வித்யாரத்ன தலைமையிலும், யாழ். மாவட்டத்தில் இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையிலும், அநுராதபுர மாவட்டத்தில் வசந்த சமரசிங்க தலைமையிலும், கேகாலை மாவட்டத்தில் காமினி ரத்நாயக்க தலைமையிலும் ஜே.வி.பி. வேட்பாளர்களை நிறுத்தவுள்ளது.

# இரண்டாம் தவணை விடுமுறையில் மாற்றம்

(கொழும்பு)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளமை, க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ளமை ஆகிய காரணங்களினால் இரண்டாம் தவணை விடுமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ள பாடசாலைகள் தவிர்ந்து ஏனைய அனைத்துப் பாடசாலைகளும் ஆகஸ்ட் 31ஆம் திகதியுடன் 3ஆம் தவணைக்காக ஆரம்பிக்கப்படும்.

அத்துடன் பரீட்சை நடைபெறவுள்ள பாடசாலைகள் செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# இன்று கூடுகிறது மு.கா.அதியுயர் பீடம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் விதம் குறித்து தீர்மானிப்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அதியுயர் பீடம் இன்று கூடவுள்ளது.

கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் இன்று இரவு கூடி இது குறித்து கலந்துரையாடவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் சபீக் ரஜாப்தீன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு அடிப்படையான புரிந்துணர்வு உடன்பாடு உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுத் தேர்தலுக்காக முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை கோரியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் கலாநிதி தர்ஷனனின், 'நவீன உளவியல் மூலம் கர்நாடக இசைக் கல்வி' என்ற நூலின் வெளியீட்டு விழா இன்று மாலை 3.00 மணிக்கு நுண்கலைக்கழக இசைத் துறைக் கேட்போர் கூடத்தில் யாழ்.இலக்கியக் குவியத் தலைவர் வேலணையூர் தாஸ் தலைமையில் நானிலம் இணையத்தளத்தின் ஊடக அனுசரணையில் நடைபெறவுள்ளது.

# மஞ்சள்கோட்டு கடவையை மதிக்காத சாரதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சத்திரத்து சந்திப்பகுதியில் உள்ள மஞ்சள் கோட்டுக் கடவையில் பாதசாரிகளை கவனிக்காது வாகனங்கள் விரைவாகச் செல்வதால் பாதசாரிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

சந்திக்கு அண்மையாகப் போடப்பட்ட மஞ்சள் கோட்டுப் பாதை நீக்கப்பட்டிருந்தும் வேறு இடத்தில் மஞ்சள் கோடுகள் இடப்பட்டிருப்பதனால் பாதசாரிகள் அதனூடாக வீதியைக் கடக்க முயலும் நிகழ்வு தினமும் சராசரி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை வீதியைக் கடக்க முயலும் பாதசாரிகள், ஆட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள் இடது கை மறுமுனைக்குச் செல்லாமல் வலதுபக்கத்தினால் வந்தடைவதாலும் முட்டிமோதும் சம்பவங்கள் மலிந்துள்ளன.

வீதிப்போக்குவரத்து முறைகளைத் தெரிந்தும், அதிகமானோர் தவறான வீதிப் பக்கங்களில் பயணிப்பதும் திடீரென பாதையை ஊடறுத்துச் செல்ல முனைவதும்,

யாழ்.நகரப் பகுதிகளென்றில்லாமல் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெறுவதால் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோருகின்றனர். (68)

## தமிழ்...

அவ்வாறானதொரு மாற்றம் ஏற்படும் பட்சத்திலேயே அதன் ஊடாக எமது மக்களும் உரிய பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இதைவிடுத்து இவ் வாறு மாற்றமொன்று ஏற்படாத விடத்து எவ்வித பயன்களும் ஒரு போதும் கிடைக்கப்பெறப்போவ தில்லை.

'மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம்' என்ற எமது கட்சியின் நிலைப்பாட்டிலும் நாம் உறுதியாகவே இருக்கின்றோம். அது மட்டுமன்றி தொடர்ந்து நாம் ஆட்சியில் இருப்பதன் ஊடாகத் தான் எமது மக்களின் வாழ்வா தாரம் மட்டுமன்றி, அரசியல் உள்ளிட்ட உரிமைகளையும் வென்றெடுக்க முடியும் என்பதை நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

ஆனால் ஆட்சி மாற்றத்தினூடாக பலவற்றைச் செயற்படுத்துவோம் என்று கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தரப்பினர் இதுவரையில் என்னத்தை சாதித்துள்ளார்கள் என்றும் கேள்வி எழுப்பியதுடன், தொடர்ந்தும் மக்களுக்கு இவர்களால் என்னத்தை சாதிக்க முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது மக்களின் மீள் குடியேற்றம், வாழ்வாதார மேம்பாடு, சமுர்த்தி வேலைத் திட்டங்கள், காணாமற் போனோர் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெளிவுபடுத்தினார்.

## மடு...

இந்தத் திருவிழா நடைபெறுகிறது. மடுத் திருப்பதி பரிபாலகர் அருட்பணி எஸ்.எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரின் தலைமையில் நடைபெறும் இன்றைய விழாவில் யாழ், சிலாபம், அநுராதபுரம் ஆகிய மறை மாவட்ட ஆயர்களான மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, மேதகு வலன் மென்டீஸ் ஆண்டகை, மேதகு நோபட் அன்றாடி ஆண்டகை ஆகியோருடன் நூற்றுக்கும் மேற்பட்ட குருக்களும் இணைந்து இந்தத் திருவிழா கூட்டுத்திருப்பலியை ஒப்புக் கொடுக்கின்றனர்.

கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமா கிய இந்தத் திருவிழாவின் இறுதி நாளாகிய இன்று காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி தமிழ், சிங்களம், திருச்சபையின் மொழியாம் லத்தீன் ஆகிய மொழிகளில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும்.

இதைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப திருப்பவனி பக்தர்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்படும். நேற்று பிற்பகல் நடைபெற்ற வேஸ்பர் நற்கருணை ஆராதனையில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். அத்துடன் மடுப்பகுதியில் பக்தர்களின் நலன் கருதி சகல அத்தியாவசிய தேவைகளுக்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## பொதுத்தேர்தல்...

போன்றவை குப்பையில் போடப்பட்ட நிலையில் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அதனை மீண்டும் எடுத்து செயற்படுத்தி வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி 1989, 1990 காலத்தில் செய்த அநியாயங்களை மறக்க முடியாது. புலிகள் அமைப்புடன் 11 வருடங்களுக்கு முன்னர் செய்து கொண்ட நாட்டைக் காட்டிக் கொடுக்கும் ஒப்பந்தத்தை மறக்க முடியாது. ஜனவரி 9ஆம் திகதி மக்கள் ஆணையை மதித்து நான் விலகிச் சென்ற விதம் இலங்கை அரசியல் வரலாற்றுக்கு ஒரு முன்னுதாரணம். இதைச் சர்வதேச நாடுகளும் கண்டு அதிர்ச்சி அடைந்தன. எனது ஆட்சிக் காலத்தில் விமான நிலைய திறப்பு, துறைமுக திறப்பு, அதிவேக வீதி திறப்பு என அபிவிருத்தி செய்திகளுக்கு பஞ்சமிருக்கவில்லை.

ஆனால் தற்போதைய அரசாங்கம் தனது திட்டங்களை பாதை மாற்றி திறந்து வைக்கிறது. எனது ஆட்சிக் காலத்தில் நடந்த அபிவிருத்தியைப் பார்த்து இலங்கை மக்கள் பெருமை கொண்டனர். வெளிநாடு சென்றவர்கள் மீண்டும் திரும்பி வந்தனர். கொழும்பு நகர் துரித அபிவிருத்தி நகராக அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்றைய அரசாங்கம் அனைத்தையும் தங்கள் திட்டம் எனக் கூற முனைகிறது. எனவே இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் தேசிய பாதுகாப்புக, அபிவிருத்தியை மையமாக வைத்து தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியர், மலே ஆகிய அனைத்து இன மக்களும் ஓர் இனமாகச் சேர்ந்து நாட்டை கட்டியெழுப்ப நாட்டின் தேசியக் கொடியை தலைநிமிரச் செய்ய எதிர்வரும் . பொதுத் தேர்தலில் போட்டியிடு வேன். அதற்கு அனைவரும் எங்கள் அணியுடன் இணைந்து கொள்ள வேண்டும் என்றார்.

## ஐ.தே.க.வின்...

லான புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மலையகத்தைச் சேர்ந்த இரண்டு பேரை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பில் இணைத்து யாழ்ப் பாண மாவட்டத்திலும் வன்னி மாவட்டத்திலும் போட்டியிடவுள் ளனர்.

இது தொடர்பிலான பேச்சுவார்த்தை தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடைபெற்று வருகின்றது. வடக்கு, கிழக்கிலுள்ள மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் நோக்கிலேயே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கம்பஹா....

பண்டாரநாயக்க குமாரதுங்கவின் செயலாளர் பி.திஸாநாயக்க, தெரிவித்துள்ளார்.நாடாளுமன்றத் தேர்தலில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஏமாற்றமளித்த...

செயலாளர் சுசில் பிரேமஜயந்த, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்பார்கள் எனவும் எதிர்வு கூறப்பட்டிருந்தது.

எனினும், இவர்களில் எவரும் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றிருக்கவில்லை, இது மகிந்த தரப்பிற்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பார்கள் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் உண்மையில் ஒப்பீட்டளவில் குறைந்தளவான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே பங்கேற்றிருந்ததாக தெரிவிக்கப்படு கிறது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா மற்றும் லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் திஸ்ஸ வித்தாரண ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை, எந்தக் கட்சியில் போட்டியிடுவது என்பது குறித்து முன்னாள் ஜனாதிபதி திட்டவட்டமாக எதனையும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




## இவரைத் தேடுகிறோம்

வீ.துரைசிங்கம் என்ற இயற்பெயர்கொண்ட சின்னத்தம்பி (வயது-43) என அழைக்கப்படும் இவரைக் கடந்த ஒரு மாத காலமாகக் காணவில்லை. இவரது சகோதரன் இறைபதமடைந்த செய்தியை அறிவிப்பதற்காக இவரைத் தேடுகிறோம். தயவு செய்து இவரைக் கண்டவர்கள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உதவும்படி வேண்டுகிறோம்.

தொடர்புக்கு: 0776913337, 0774018153, 021-222-4919, 021-225-5954

குடும்பத்தினர்

(C/3877)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.